For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• ஜனவரி 2023 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் • விலை : ரூ 60 • இதழ் 32




## பிற சமுதாய மக்களுடன் கிறிஸ்தவர்களின் உறவு

# ஆசிரியர் சுவடு

**கிறிஸ்துவுக்குள் அன்பான சுவடுகள் உறுப்பினர்களே,**

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இறைவனின் கிருபையினால் நம் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கமானது பல தடைகளையும், தேவைகளையும் தாண்டி அநேக வாசகர்களைக் கொண்ட சங்கமாக வளர்ந்து வருகின்றது. ஒவ்வொரு மாதமும் வெளிவரும் மாதாந்திர பத்திரிக்கையானது தமிழகத்தின் பல பகுதிகளில் மறைந்து கிடந்த வரலாற்றினை வெளிக்கொண்டு வருகின்ற பணியினை செய்து வருகின்றது.

உன்னிடத்தில் அன்பு கூறுவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக. (மத்தேயு 22:39)

ஒரே சரீரத்திற்குள்ளானவர்களும், உடன் பங்காளிகளுமாயிருக்கிற நம் பிறஇனத்தவருடனான நமது உறவு எவ்விதம் உள்ளது? அவர்களுடைய வழிபாடு நம்பிக்கையைக் குறித்த நமது வரவேற்பு மற்றும் வெளிப்பாடுகள் எவ்விதமாக உள்ளன? உன்னைப் போல் பிறரை நேசி என்ற கிறிஸ்துவின் கற்பனை நமது வாழ்வில் கடைபிடிக்கப்படுகிறதா? வெறுப்பு, கசப்பு, கோபம் இன்றி அவர்களையும் நம் உடன் பங்காளிகளாக ஏற்றுக்கொள்ள முடிகிறதா? பிறசமயத்து அன்பர்களோடு உறவினை நம்மால் மேம்படுத்திக்கொள்ள வேண்டியவை என்ன ? நற்செய்தியைச் சொல்ல எனக்குள் உள்ள வாஞ்சை என்ன? நற்செய்தியை அறிவிப்பதில் எனது அணுகுமுறை என்ன? என்ற பல்வேறு ஆய்வு கட்டுரைகளைகளின் சிறப்பிதழாக இது உங்கள் கரங்களை அடைந்திருக்கின்றது.

ஒவ்வொரு மாதமும் மாத இதழினை வெளிக்கொண்டுவருவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள். சந்தா, நன்கொடைகளை அனுப்ப இதழின் பக்கங்களிலிருக்கும் வங்கிக் கணக்குகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நண்பர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்தி அவர்களை சந்தாதாரர்களாக்குங்கள். தொடர்ந்து வரலாற்று ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வரும் பிப்ரவரி மாத தலைப்பாக புதிதாக **“கிராமங்களுக்குள் சுவிஷேசம்(கிறிஸ்தவம்) சென்றடைய மிஷனரிகள் எடுத்த முயற்சிகள்”** ஒவ்வொரு கிராமங்களுக்குள்ளும் கிறிஸ்தவம் எவ்வாறு சென்றடைந்தது? என்பதைக் குறித்தும் மிஷனரிகள் எவ்வாறு அதற்கென முயற்சித்தார்கள் என்பதை பல்வேறுபட்ட கோணங்களில் ஆய்வுக் கட்டுரைகளில் விளக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பாரபரனின் பணியில்

manna selvakumar

சுஜித் ரெக்ஸ் — **வடிவமைப்பு**

மன்னா செல்வகுமார் — **ஆசிரியர்**

**தொடர்புகொள்ள +91 91767 80001**

NEW YEAR 2023
WWW.CHRISTIANHISTORICALSOCIETY.IN
TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY
G Pay



பெண்கள் இடைக்கு மேற்பகுதியை மூடி மறைப்பதற்கு
பயன்படுத்திய மேலாடை குப்பாயம்

திருமதி.நிருபா ஜெசுவடியன்
மிஷன் இந்தியா இயக்கம்,

# தோட்டத்திற்கு வெளியே...

கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்காக, கிறிஸ்தவ சபைகளை அமைப்பதற்காக, கிறிஸ்தவ நிறுவனங்களைக் கட்டி எழுப்புவதற்காக நம் மூத்த மிஷனரிகள் மற்றும் முன்னோர்கள் கடந்து வந்த பாதைகள், கஷ்டங்கள் ஆகியவற்றை நாம் நன்கு கேட்டறிந்து உள்ளோம். அது மட்டுமல்லாது, புதிய சமுதாயத்தை உருவாக்குவது, சிறந்த தலைமுறையை எழுப்புவது போன்ற சமூகப் பணியிலும் ஆர்வமுடன் செயலாற்றி உள்ளார்கள். உரிமை பெற்ற ஜனநாயக வாழ்வை மக்களுக்கு வழங்குவதில் போராடி வெற்றியும் கண்டுள்ளார்கள். அதற்காக அவர்கள் சந்தித்த தடைகளை அசுர வேகத்தில் தடைத்தெறிந்தும் உள்ளார்கள். இன்றைய இந்திய சமுதாயத்தை வளர்ச்சி பெற்ற சமுதாயமாக கட்டி எழுப்பிய பெரும் பணியில் கிறிஸ்தவர்களின் பங்கு அளவிடப்பட முடியாதது என்பது மறுக்க முடியாத உண்மை. அதற்கு முக்கிய காரணம், **பிற சமுதாய மக்களுடன் அவர்கள் கொண்டிருந்த நல் உறவே** ஆகும்.

முன்பு திருவிதாங்கூர் என்று அழைக்கப்பட்ட தமிழகத்தின் தென் பகுதியில் இனப் பாகுபாட்டினால் ஏற்பட்ட கொடுமைகளையும், பெண்கள் அடைந்த அவல நிலையையும் மாற்றி இன்று நிலவியிருக்கும் நல்ல நிலைக்கு மிஷனெரித் தொண்டர்களும் அவர்கள் ஆற்றிய பணிகளும் மிகச் சிறப்பானவை ஆகும். வந்தோம்... சுவிசேஷம் கூறினோம்... ஆலயம் கட்டினோம் என்று இல்லாமல், சமுதாயத்தில் காணப்பட்ட குறைவுகளை மக்களோடு இணைந்து நிறைவு செய்ய அரும்பாடுபட்டார்கள். சமய சீர்திருத்த சிந்தனைகள், ஜனநாயக கோட்பாடுகள், தொழில்நுட்ப நாகரீகப் பின்னணி ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டு மக்களின் வாழ்க்கையை மாற்றினார்கள்.

குமரி மாவட்ட பெண்ணுரிமை போராட்டத்தின் தொடக்க நிலையினை **“மங்கையரின் மேலாடை கலகம்”** என்றும் **“தோல் சீலைக் கலகம்”** என்றும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டு சொல்கின்றனர். நிலவுடைமை சமுதாயம் மலர்ந்த அம்மண்ணில் கீழ் வகுப்பை சார்ந்த பெண்கள் விலங்குகளை போன்று அடிமைகளாக நடத்தப்பட்டனர். மேலாடை அணியும் உரிமை கூட அவர்களுக்கு தரப்படவில்லை. திருவிழாக்கள், சந்தைவெளிகள், வீதி ஓரங்கள் ஆகியவற்றில் கூட மேலாடைகள் இன்றியே அலைந்து திரியும் அவல நிலை பெண்களுக்கு இருந்தது. சுருங்கக் கூறினால் அரை நிர்வாணமாகவே அலைந்து திரிய பெண்கள் வற்புறுத்தப்பட்டனர். இத்தகைய அவல நிலைக்கு உயர் குல மக்களும், ஆளும் மக்களும் முக்கிய காரணங்களாக இருந்தன.

1806 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் நாள், முதல் கிறிஸ்தவ மிஷனெரியான மதிப்பிற்குரிய வில்லியம் தொப்பியஸ்

ரிங்கல்தௌபே ஆரல்வாய்மொழி கணவாயைக் கடந்து திருவிதாங்கூர் மாநிலத்தில் தன் காலடிகளை எடுத்து வைத்தார். அவரை வேதமாணிக்கம் என்ற ஆதி கிறிஸ்தவர் வரவேற்று மயிலாடி என்ற ஊருக்கு அழைத்துச் சென்று தமது இல்லத்தில் தங்க வைத்தார். இதன் விளைவாக மண்ணில் புதிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. ரிங்கள்தௌபே 10 ஆண்டுகாலம் அயராது உழைத்து, இப்பகுதியில் ஏழு திருச்சபைகளை கட்டி எழுப்பினார். அயராது உழைத்ததின் காரணமாக அவர் நோயால் பாதிக்கப்பட்டார். எனவே 1816 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் நாள், தன்னுடைய மிஷன் பொறுப்புக்களை வேதமாணிக்கத்திடம் ஒப்படைத்துவிட்டு தன் தாய் நாட்டிற்கு திரும்பினார்.

அவருக்கு பதிலாக மதிப்பிற்குரிய சார்லஸ் மீட் என்னும் மிஷினெரி 1818 ஆம் ஆண்டு இப் பகுதியில் கிறிஸ்தவ பணியை செய்ய பொறுப்பேற்றார். அவரும் மயிலாடியில் தன்னுடைய பணியை செய்ய ஆரம்பித்தார். அவரை திரளான மக்கள் மகிழ்ச்சி பெருக்கோடு கூடி அவரை வரவேற்றனர். ஐரோப்பிய மிஷனெரி ஒருவர் தங்கள் பகுதிக்கு வருகை தந்திருக்கும் சிறப்பு செய்தி அப்பகுதி எங்கும் காட்டு தீயென பரவியது.அவரைக் காண வந்த கூட்டத்தினரில் பெரும்பான்மையினர் இளம் பெண்களாகவே இருந்தனர். கல்வி அறிவிலும் நாகரிக மேம்பாட்டிலும் அதிக வளர்ச்சி இல்லாத பெண்கள் அதிக ஆர்வத்தால் அவரைக் காண வந்தனர். இப்பெண்களைப் பார்த்த மிஷனெரி அதிக மன வேதனை அடைந்தார். மேலாடையின்றி அரை நிர்வாணமாக காட்சி தந்த பெண்களின் கூட்டத்தை பார்ப்பதற்கே அவரின் கண்கள் கூசின.

ஆர்வத்தால் வேகமாக ஓடி வந்து தம்மீது விழுந்த பெண்களைக் கடிந்து கொண்டு **'உங்கள் உடலை மூடி மறைப்பதற்கு ஒரு மூலம் துணி கூட கிடைக்கவில்லையா'** என்று கோபத்துடன் கேட்டார். அதற்கு அப்பெண்கள் அவரை பார்த்து, 'எங்கள் உடலை மூடி மறைப்பதற்குரிய உரிமை எங்களுக்கு இல்லை, நாங்கள் மேலாடை அணியக்கூடாது, அவ்வாறு அணிந்தால் அது சட்டத்தை எதிர்ப்பதாகும்' என்று பதில் அளித்தனர். இப்பதிலை சற்றும் எதிர்பார்த்திராத மிஷனெரி கண் கலங்கினார். அருகில் நின்ற வேதமாணிக்கத்தை அழைத்து இத்தகைய சமுதாய நிலை மற்றும் அடக்குமுறை ஆகியவற்றிற்கான காரணத்தையும் விளக்கத்தையும் கேட்டறிந்தார். அப்பகுதியில் நிலவிய பழக்கவழக்கங்களையும் சட்டதிட்டங்களை பற்றியும் வேதமாணிக்கம் தெளிவாக விளக்கிக் கூறினார். அதனைக் கேட்ட சார்லஸ் மீட் மிஷினெரி மன வேதனை அடைந்தார். இக்கொடிய பழக்கத்தை ஒழித்து பெண்களுக்கு மேலாடை அணியும் உரிமையை அளித்திட பல திட்டங்களை தீட்டினார். எனினும் அவரது திட்டங்கள் உடனடியாக வெற்றி பெற முடியவில்லை. எனினும் மனம் தளராமல் தொடர்ந்து தமது சிந்தனைகளுக்கு செயல் வடிவம் தர முயன்றார். இதன் விளைவாக ஏறத்தாழ 2½ வருடங்களுக்கு பின்னர் அவரது சிந்தனைகள் படிப்படியாக செயல் வடிவம் பெற்று வெற்றியினைத் தழுவ தொடங்கின.

மீட் தன்னுடைய மைய அலுவலகத்தை மயிலாடியிலிருந்து நாகர்கோவிலுக்கு மாற்றியமைத்தார். குமரி மாவட்டத்தின் **முதல் வெளிநாட்டு பெண் கிறிஸ்தவ மிஷனெரி** என்ற பெயருக்கும் புகழுக்கும் உரியவராக திருமதி மீட் திகழ்ந்து வந்தார். 1819 ஆம் ஆண்டின் இறுதியில் சார்லஸ் மால்ட் மிஷனெரியும் அவரது மனைவியும் நாகர்கோவிலுக்கு வருகை தந்து மீட் குடும்பத்தோடு இணைந்து அயராது உழைக்க தொடங்கினர். இவ்விரு குடும்பத்தின் உழைப்பால் திருவிதாங்கூர் மாநிலத்தில், குறிப்பாக இன்றைய குமரி மாவட்ட பகுதியில் கிறிஸ்தவ சமயத் தொண்டு ஆழமாக வேர் விட்டு படர்ந்து வளர தொடங்கியது. அப்பகுதி பெண்கள் ஆலயத்திற்கு வரும்போது சுத்தமான ஆடைகளை அணிதல் வேண்டும் என்றும் பெண்கள் அரை நிர்வாணமாக வருவதை படிப்படியாக தடுக்க வேண்டும் என்றும் இரு குடும்பத்தினரும் இணைந்து சில ஏற்பாடுகளை செய்ய தொடங்கினர்.

இப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ பெண்கள் இடைக்கு மேற்பகுதியை மூடி மறைப்பதற்கு வாய்ப்பாக ஒரு விதமான புதிய மேலாடை ஒன்றினை தயார் செய்தனர். முஸ்லிம் பெண்கள் அணியும் சட்டையை போன்று காட்சி தந்த மேல் ஆடையினை அப்பகுதி மக்கள் **குப்பாயம்** என்று அழைத்தனர். குப்பாயத்தை தைப்பதற்கு கிறிஸ்தவ பெண்களுக்கு மீட் பாதிரியாரின் மனைவி பயிற்சி கொடுத்தார். கிறிஸ்தவ மிஷனெரிகளின் முயற்சியால் குமரி மாவட்ட பகுதியில் வாழ்ந்த கிறிஸ்தவ பெண்கள் அப்பகுதியின் சமுதாய வழக்கத்திற்கும் சட்ட திட்டங்களுக்கும் மாறாக நவீன மேலாடைகளை அணிந்து நாகரீகமாக காட்சி தந்தனர். சில சமயம் இப்பெண்கள் குப்பாயத்தின் மேல் தோள் சீலை என்று அழைக்கப்படும் மேலாடையை இணைத்தனர்.

இம்மேலாடை உயர் வகுப்பு பெண்கள் அணியும் ஆடையை போன்று இருந்ததால், உயர் ஜாதி பெண்கள் தங்கள் உரிமையில் கிறிஸ்தவ பெண்கள் தலையிடுவதாகவும் அவர்களுக்கு மேலாடை அணிவதற்குரிய உரிமை இல்லை என்றும் விமர்சனம் செய்தனர். கிறிஸ்தவ பெண்களின் உடை மாற்றம் உயர் ஜாதி இந்துக்களின் உள்ளத்தில் பகை உணர்வை எழுப்பியது. இவ்வாடைகளைப் பார்த்து அவர்கள் அளவு கடந்த பொறாமையும் கோபமும் கொள்ளத் தொடங்கினர். ஏனெனில் தோளின் மீது அணியும் ஆடையே உயர்வகுப்பு இந்துக்களையும், தாழ்த்தப்பட்ட மக்களாக கருதப்பட்ட ஏனைய வகுப்பினரையும் வேறுபடுத்தி காட்டியது.

ஆனால் இதனைப் பார்த்த மற்ற சமய பெண்கள் தாங்களும் சிறந்து விளங்க வேண்டும் என்று எண்ணினர். மிஷனெரிகளின் அயராத உழைப்பால் கிறிஸ்தவம் பல ஊர்களிலும், தாலுகாக்களிலும் பரவத் தொடங்கியது. எண்ணற்ற மக்கள் திருமுழுக்கு பெற்று கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

அக்காலத்தில் தாழ்ந்த வகுப்பு மக்கள் கூலி பெறாமல் அரசாங்கத்தினருக்கு அடிமை வேலைகள் செய்வதற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர். பழைய மரபின்படியும், அரசாங்கச் சட்டப்படியும் பிற்பட்ட மக்கள் இத்தகைய வேலைகளை கண்டிப்பாக செய்தே தீர வேண்டும். ஆனால் மதம் மாறி அறிவு பெற்று நாகரீகம் அடைய தொடங்கிய கிறிஸ்தவர்கள் இத்தகைய வேலைகளை செய்ய மறுத்தனர். இதன் விளைவாக பல இடங்களிலும் கலவரங்களும் குழப்பங்களும் ஏற்பட்டன.

முன்னோடி ஊழியர்களின் அயராத உழைப்பினால் 1821 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் நாள் அரசாங்கம் ஒரு விளம்பரத்தினை பிரசுரித்தது. அதன்படி ஞாயிற்றுக்கிழமை மட்டும் கிறிஸ்தவர்களுக்கு விடுமுறையாக ஒதுக்கப்பட்டது. இனிய நாட்களில் ஊதியம் பெறாத அரசாங்க வேலைகளை தவறாது செய்ய வேண்டும் என்று மேலும் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

இந்த அரசாங்க வேலை என்பது கூலி பெறாமல் தாழ்த்தப்பட்ட மக்கள் அரசாங்கத்திற்கு செய்யும் அடிமை வேலையாகும். இத்தகைய அடிமை வேலை செய்ய கட்டாயப்படுத்துவது, பெண்கள் மேலாடை அணிவதை தடை செய்வது ஆகிய இரண்டு கொடுமைகளையும் ஒழிப்பதற்கு அன்று கிறிஸ்தவ மக்கள் அணி திரண்டு போராட்டம் நடத்தினார்கள். இக்கொடுமையை எதிர்த்து தாழ்ந்த வகுப்பை சார்ந்த ஆண்களும் பெண்களும் படிப்படியாக எதிர்ப்புக் குரல் எழுப்பினர். அவர்களின் எதிர்ப்புக் குரல்கள் காற்றில் கலந்து, கரைந்து, மறையாமல் இருக்க மேல்நாட்டு கிறிஸ்தவ மிஷனெரிகள் துணை செய்தனர். இதன் விளைவாக ஏழை மக்களின் அவலக் குரல்கள் எரி மலையாக வெடித்து கிளம்பின. போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட ஏழை மக்கள் வெற்றி பெற்றனர். இப்போராட்டத்திற்கு கிறிஸ்தவ சமயத்தின் எழுச்சியும், மிஷனெரிகளின் தன்னலமற்ற சமுதாய தொண்டுகளுமே அடிப்படை காரணங்களாக அமைந்தன.

இன்று சமுதாயத்தின் எல்லா வகுப்பை சார்ந்த பெண்களும் நாகரீகமான மேலாடைகளை அணிந்து தோற்றமளிக்கின்றனர். உயர் குலத்தைச் சார்ந்த பெண்கள் பொறாமை கொள்ளும் அளவிற்கு கூட தாழ்த்தப்பட்ட பெண்களின் ஆடைகள் காட்சி தருகின்றன. இந்த உரிமையின் வரலாறு சிறப்புமிக்க ஒரு போராட்டத்தின் விளைவாகும் என்பதை நாம் உணர வேண்டும். ஏறத்தாழ 35 வருட காலம் தொடர்ந்து நடைபெற்ற ஒரு பெரிய போராட்டத்தின் பயனாக இந்த உரிமை நமது பெண்களுக்கு கிடைக்கப்பெற்றது. போராட்டத்தை தலைமை ஏற்று மீட் மிஷினெரி வழிநடத்தி சென்றார். 35 வருட கால போராட்டத்தின் விளைவால் அப்பகுதி மக்களுக்கு மேற்கூறிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிடைத்தது. இஸ்ரவேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்காக தேவன் எப்படி மோசேயைப் பயன்படுத்தினாரோ அதேபோல, குமரி மாவட்ட மக்கள் அடிமைத்தனத்திலிருந்து வெளிவர தேவன் ஊழியர்களை வல்லமையாக பயன்படுத்தினார்.

ஒரு கிறிஸ்தவ ஊழியரின் இடைவிடாத உழைப்பினால் கிறிஸ்தவர்கள் மட்டுமல்லாது, பிற சமுதாய மக்களும் பயன் பெற்றனர். அதோடு மட்டுமல்லாது எண்ணற்ற மக்கள் கிறிஸ்துவின் அன்பையும் அறிந்துகொண்டு ஆலயத்தில் சேர்க்கப்பட்டனர். இதை வாசிக்கின்ற அன்பு நண்பரே, சுவிசேஷம் கூறுவது மட்டும் ஒரு கிறிஸ்தவனுக்கு வேலையல்ல. சமுதாயத்தில் நடக்கும் அநீதிகளைக் கண்டறிந்து மக்களுக்கு உதவி செய்யவும் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. யோவான் 15:12**


கிறிஸ்தவ

# வரலாற்றுச் சுவடுகள்

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

A/c Name: Tinnevelly Christian Historical Society

A/c Number : 1748 020000 3684

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com



# சமயங்களிடையேலான உரையாடல்

## திருச்சபையாக இருத்தலுக்கான புதியதோர் நெறி...


பாக்கியம் T. சாமுவேல்
(இயக்குனர் ஹென்றி மார்டின் நிறுவனம், ஹைராபாத்)


ஹான்ஸ் குங் தனது **'உலகளாவிய பொறுப்பு'** என்ற நூலை இவ்வாறு முடிக்கிறார்:

பன்மைத்துவம் மிகவும் பழமையானது. மக்கள் நீண்டகாலமாக **'தேசங்களுக்கான உலக நெறிமுறை இல்லாமல் ஒன்று சேர்ந்த மனித வாழ்க்கை இல்லை. சமயங்களிடையே அமைதி இல்லாமல் நாடுகளிடையே அமைதி இல்லை. மதங்களிடையே உரையாடல் இல்லாமல் சமயங்களிடையே அமைதி இல்லை.'** இந்தியா பல நம்பிக்கைகளின் பிறப்பிடம்; பல சமயங்களுக்கு இடமளித்து அவை வளர வாய்ப்பளிக்கும் நிலம். இது முக்கிய உலக மதங்கள் அனைத்தும் வளர்வதற்கான பொதுவான சூழலை அமைத்துக் கொடுத்துள்ளது. இந்தியா மாறுபட்ட சமயங்கள், நம்பிக்கைகள், மரபுகள், மொழிகள் கலந்த சிக்கலான ஆனால் அழகான பன்னிற கூட்டமைவாக இருப்பது உண்மையில் ஆச்சரியமாக இருக்கிறது. இந்தியா ஒரு பன்மைத்துவ நாடு. இந்த பன்மைத்துவம் நம் தேசத்திற்கு ஒரு புதிய நிகழ்வு அல்ல. இந்தியாவில் பல மதங்கள், பண்பாடுகள், மொழிகள் மற்றும் இனங்கள் உள்ளன. இந்தியாவின் ஒரு பகுதியாக இருக்கும் தமிழ்நாடு இந்த பன்முகத்தன்மையை தொல்பழமையான காலத்திற்கு முன்பே கண்டிருக்கிறது. பண்டைய தமிழ் இலக்கிய படைப்புகளில் ஒன்றான 'தொல்காப்பியம்' ஐந்து வெவ்வேறு நிலப்பரப்புகள், அதைச் சார்ந்த ஐந்து வெவ்வேறு கலாச்சாரங்கள், ஐந்து மாறுபட்ட சமயங்களைப் பற்றி பதிவு செய்துள்ளது. எனவே அதனுடன் வாழ்ந்து வருகின்றனர். காலப்போக்கில் ஏற்பட்ட புதிய சமூக, கலாச்சார, அரசியல், பொருளாதார மாற்றங்கள், பல பன்மையக் கூறுகளைக் கூட்டிச் சேர்த்துள்ளன. தொழில்மயமாக்கல், நகரமயமாக்கல், நவீனமயமாக்கல், கல்வி ஆகியவை பன்முகத்தன்மைக்கு பங்களித்துள்ளன.

இப்போது நாம் பிற சமயங்கள், கலாச்சாரங்கள், இனங்கள் சார்ந்த, வெவ்வேறு மொழிகளைப் பேசும் மக்களுடன் நெருக்கமாக வாழ்கிறோம். நவீன நகரங்களும் நகரமயமாக்கப்பட்ட காஸ்மோபாலிட்டன் பட்டணங்களும் இவ்வகை பன்மைய வாழ்க்கைக்கு பெருமளவில் ஒத்தாசை புரிகின்றன. எனவே பன்மைத்துவம் என்பது ஒரு உண்மையாகவும் வாழ்க்கை முறையாகவும் மாறிவிட்டது. ஏற்கனவே இருக்கும் பன்முகத்தன்மையையும் நவீனமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கலால் உருவாக்கப்பட்ட புதிய பன்மைத்துவ யதார்த்தத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். உரையாடல் பின்னர் ஒரு கடமைப்பாடு ஆகிறது. ஆகவே, தற்போதைய மற்றும் வருங்கால சந்ததியினர் தங்கள் அணுகுமுறையிலும், கண்ணோட்டத்திலும், அன்றாட நடவடிக்கைகளிலும் கூடுதல் பன்மைத்துவ நயத்துடன் இருக்க வேண்டும். உலகம் அளவில் சுருங்கிவிட்டது, மேலும் விரைவான தகவல் தொடர்பு, வாழ்க்கைக் கூறுகள் ஒவ்வொன்றிற்கும் இடையே உள்ள தொடர்புறவு ஆகியவையால் இன்னும் வேகமாக சுருங்கி வருகிறது. உலகளாவிய புதிய பரந்த சமூகம் ஒன்று உருவாகி வருவதைப் பார்க்கிறோம். இந்தியாவில் பொதுவான பிரச்சினைகள், பணிகள் வரும்போது, தொடர்பற்ற தனிமையில் இருக்கும் பல ஆண்களும் பெண்களும் அசைக்கப்பட்டு, நேருக்கு நேர் ஒருவரையொருவர் சந்திக்க நேரிடுகிறது. ஒரு புதிய சமுதாய வாழ்க்கையை கட்டியெழுப்ப அனைத்து சமயங்களைச் சார்ந்தவர்களும், சமயம் சாரா ஆண்களும் பெண்களும்

ஒன்றிணைந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். வெளிப்படைத் தன்மையுடன், ஒருவரோடு ஒருவருக்குள்ள தொடர்பு பற்றிய சரியான புரிதலுடன் வாழ முற்படும்போது, கோட்பாடுகளுடனும் தொடர்பு ஏற்படுகிறது, பிறரது சமயஞ்சார்ந்த அல்லது சாராத மனித வாழ்வின் மறைபொருளை அறிய முற்படும்போது, மக்களிடையே நம்பிக்கையும் பரஸ்பர புரிந்துணர்வும் ஏற்படுவதற்கான ஒரு செயல்முறையே சமயங்களிடையேயலான உரையாடல் ஆகும்.

அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றின் வேகமான முன்னேற்றம் காரணமாக உலக மக்கள் நெருங்கி வர, ஒருவருக்கொருவர் பாராட்டுதல் தெரிவிக்கிறவர்களாகவும் அனுதாபமும் கொள்பவர்களாகவும் உருவாக நேரிட்டது. படிப்படியாக, சமய இணக்கத்தை (co-existence of religions) ஒப்புக் கொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை மக்கள் அறிந்து கொண்டனர். தனியொருவரின் சமயம் மட்டுமே உள்ளது என்பதல்ல, மாறாக, பல சமயங்களின் சகவாழ்வு என்பதே உண்மைநிலை ஆகும்.

மத வகுப்புவாதத்திற்கு வழிவகுக்கும் மத-அடிப்படைவாதம், மத-வெறித்தனம் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு சமயங்களுக்கிடையேயலான உரையாடல் இன்றியமையாத தேவையாகிறது. தீவைப்பு, கொள்ளை, கொலை, கற்பழிப்பு, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் போன்ற தீவினைகளை மதவெறி விளைவிக்கிறது. தன்னல அக்கறை கொண்ட தீய சக்திகள், தங்கள் சுயநல ஆசைகளை நிறைவேற்றவேண்டி, மக்களைப் பிளவுபடுத்தி அவர்களின் ஒற்றுமையை குலைக்க, மத-அடிப்படைவாதத்தையும் வெறித்தனத்தையும் ஊக்குவிக்கின்றன. ஆனால், சமயங்களுக்கு இடையே நடைபெறும் கலந்துரையாடல் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகக் கூடி தங்கள் மதங்களைப் பற்றி விவாதிக்கவும், அவற்றைக் குறித்த சந்தேகங்களைத் தெளிவுபடுத்தவும் உதவுகிறது. மட்டுமல்ல, இவ்வித உரையாடல்கள் மக்களிடையே சமயக்கோட்பாடுகள், சடங்காச்சாரம் குறித்த புரிதலை மேம்படுத்தவும், மத-சமூகங்களுக்கிடையேயான மோதல்களைத் தவிர்த்து, அவர்களிடையே நல்லுறவை வளர்ப்பதற்கும் இடமளிக்கிறது.

## சமயங்களுக்கிடையேயலான உரையாடல்: திருச்சபையாக இருத்தலுக்கான புதிய நெறி

மேற்சொன்னபடி, உரையாடல்-சமூகமாக செயல்பட, திருச்சபை அழைக்கப்படுகிறது. இந்த உரையாடல் மாதிரிப் படிவம், சொல்லப்போனால், ‘திருச்சபை இருத்தலுக்கான ஒரு புதிய நெறியாகும். அத்தகைய திருச்சபை ஒருபோதும் தன்னை மையமாகக் கொண்டு இயங்காது; மாறாக, உலகத்திற்கான கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற முயலும். மற்றவர்களைப் புறம்பாக்காமல், விரிந்த மனப்பான்மையுள்ள அமைப்பாக, பிறர் நலம் பேணுவதில் செயல்படும். அடுத்தவர்களின் அரும்பண்புகளைப் பாராட்டி, அவர்களோடு இணைந்து மனிதநேயமும், தெய்வீகமும் பெருகும் பூவுலகைப் படைக்க முன்வரும். பல்சமயத்தினருக்கு இடையேலான உரையாடல், திறமைபெற்ற வல்லுநர்கள் மட்டும் பங்கேற்கும் நிகழ்வாகக் குறுகிவிடாமல், அனைத்து கிறிஸ்தவ விசுவாசிகளுக்குமான நடைமுறையாக அமைவதற்கான நம்பிக்கையை இத்தகைய முன்மாதிரி திருச்சபை அளிக்கிறது. பெரும்பாலான கிறிஸ்தவர்களின் பார்வையில் திருச்சபை ஒரு மையப்படுத்தப்பட்ட நிறுவன அமைப்பாகவே உள்ளது. மறுபுறம், விசுவாசிகள் மெய்யாகவே பங்கேற்கும் திருச்சபையானது பற்றுறுதிக்கும் வாழ்க்கைக்கும் இடையேலான உரையாடலை சிறப்பான முறையில் முன்னெடுக்க இயலும். மற்ற சமயப்பற்றாளர்களோடும், விசுவாச கூட்டத்தாரோடும் இணைந்து, உலகில் உயிரோட்டமுள்ள ஆன்மீகக் கூட்டுறவு உருவாகவும், இறுதியில் வரவேண்டிய கடவுளின் கனவு நனவாகவும் செயலாற்ற முடியும்.

இந்தியாவில் காணப்படும் வாழ்க்கைச் சூழமைப்பை பொறுத்து, பிற சமயத்தாருடனான உரையாடல் உறுதியான வெளிப்பாடாக இருத்தல் நன்று ஒற்றுமை, அன்பு, உண்மை, நீதி, அமைதி ஆகிய விழுமியங்கள் கட்டிக்காக்கப்பட அனைத்து சமயஞ்சார் மக்களும் ஒன்றிணைந்த உரையாடலாக இது இருக்க வேண்டும். உலகில் சுதந்திரம், நீதி; அமைதி, நல்லிணக்கம் தழைத்தோங்க, பிற சமயஞ்சார்ந்த சகோதர, சகோதரிகளுடன் சேர்ந்து செயலாற்றும் இந்த வெளிப்பாடு, இறுதியில், உலகை மீட்டுருவாக்கும் இறைப்பணியில் பங்கேற்பதும், வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் கடவுள் ராஜ்யத்தை நிறுவுதலுமேயாகும். முழுமையான மனித விடுதலைக்காக வெவ்வேறு மதங்களின் விசுவாசிகள் ஒன்றிணைந்து செயல்படும்போது, தத்தம் சமயங்களில் உள்ள படைப்பாற்றலை, மீட்கும் சக்தியைக் கண்டுணர முடியும். ஆகவே, பல்சமய ஒத்துழைப்பு என்பது ஒரு வெளிப்படுத்துதல் அனுபவமாக மாறும், அதில் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலுமுள்ள தெய்வீக ஆவியின் பிரசன்னமும் சக்தியும் வெளிப்படுகிறது. குறைந்த பட்சம், நடைமுறையில் எல்லா சமயத்தவரும் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட, பாகுபாடு காட்டப்பட்ட சிறுபான்மை மக்களின் நலனுக்காக உழைப்பது இன்றியமையாததாகிறது. சுருங்கச் சொல்லின், ஏழைகள் மீதான அக்கறை மதங்கள் சந்திக்கும் இடமாகும்; உலகளாவிய இரக்கம் (கருணை) விசுவாசியின் தனிச்சிறப்பு பண்பின் அடையாளமாகும்.

பெரும்பாலும் மக்கள் முறையான உரையாடல்கள் இரு குழுக்களுக்கிடையில் மட்டுமே நடைபெறும் என்று நினைக்கிறார்கள். உண்மையில், பலவகையான உரையாடல்கள் நடைபெறுகின்றன, அவற்றின் மதிப்பை அங்கீகரிப்பது அவசியம். உரையாடல் பன்மைத்துவ வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் நடைபெறுவது வழக்கமான நிகழ்வாகும். கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர், யூதர்கள், இந்துக்கள், இன்னும் பல வேறுபட்ட மதங்களைச் சேர்ந்தவர்கள், ஒரு பொதுவான வாழ்க்கையைப் பகிர்ந்துகொண்டு உடன் வாழ்கின்றனர், உழைக்கின்றனர். இத்தகைய தொடர்பு நிமித்தம் ஏற்படும் உரையாடல்கள் கவனிக்கப்படாமல் போய்விட்டாலும், அவை சமய உணர்வார்ந்ததாக இல்லாவிடினும், சக மனித உறவுகளை வளர்ப்பதில் அவற்றின் முக்கியத்துவத்தை நாம் அங்கீகரித்தே ஆகவேண்டும். நீதி, அமைதி, மனித உரிமைகள், ஒட்டுமொத்த சமுதாயத்தைப் பற்றிய பிரச்சினைகளுக்காகப் போராட பல்வேறு சமய மரபுகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றுகூடும் இடத்திலும்

இதேபோன்ற உரையாடல் நடைபெறுகிறது.

ஒழுங்குபடுத்தப்பட்ட உரையாடல் மூன்று வகையாகும். பலதரப்பு, இருதரப்பு உரையாடல்கள் முதல் வகைப்படும். இதில், சம்பந்தப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகள் பொதுவான பிரச்சினைகள் குறித்து விவாதித்து தீர்வுகாண ஒன்று கூடுவர். குடும்பம், கல்வி, அரசு போன்றவற்றிற்கும் சமய நம்பிக்கைக்கும் உள்ள உறவைப் பற்றி கலந்துரையாட, கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் இடையே இருதரப்பு உரையாடல் நடைபெற அனைத்துலக கிறிஸ்தவ பேரவை (WCC) ஊக்குவிக்கிறது. மறுபுறம், இந்தியாவில் நடைபெற்ற பலதரப்பு உரையாடல் **'பன்முக நம்பிக்கை சமூகத்தில் மத அடையாளம்'** என்ற கருப்பொருளைக் கையாண்டது; அதன் முக்கிய நோக்கம் இந்தியாவில் மதப் பிரிவினரிடையே அதிகரித்துவரும் வன்முறைச் சிக்கலைக் கையாள்வதாகும்.

வேறுபாடான கருத்துக்களைத் தெளிவுபடுத்துவதோடு நிற்காமல், இத்தகைய உரையாடல்கள் சமயக் குழுக்களிடையே நம்பிக்கையையும் வெளிப்படைத் தன்மையையும் கட்டியெழுப்ப உதவும் என்ற நம்பிக்கை அளிக்கின்றன.

இரண்டாவது வகை ஒழுங்குபடுத்தப்பட்ட உரையாடலை அறிவு செறிந்த (academic) உரையாடல் என்று அழைக்கலாம், இங்கு வெவ்வேறு சமயங்களைச் சார்ந்த அறிவர்கள் சந்தித்து தங்கள் மரபுகளின் இறையியல்/தத்துவ அடித்தளங்களை விவாதிக்கின்றனர். மெய்ம்மை குறித்த விளக்கம், அதை அணுகுவதற்கு முன்வைக்கப்படும் வழிமுறை ஆகியவற்றைப் பற்றி ஒவ்வொரு சமயமும் கொண்டுள்ள நம்பிக்கைகளை உரையாடலின்போது பகிர்வது, அதில் பங்கேற்போர் நடுநிலை போற்றி பொதுவான பாராட்டல் பண்பை வளர்த்தெடுக்க உதவுகிறது. இந்த உரையாடல்கள் பல நூற்றாண்டுகளாக குவிந்துள்ள தப்பெண்ணங்களையும் தவறான கருத்துகளையும் உடைத்தெறிய உதவுகின்றன. பிற சமய மரபுகளையும் அவை சார்ந்தவர்கள் பற்றியதுமான ஒருவரின் புரிதலை உரையாடல்கள் வளப்படுத்துகின்றன, விரிவாக்குகின்றன. சவால் விட்டு குறை அகற்றுகின்றன. உரையாடலின் மற்றொரு வடிவம் ஆன்மீக உரையாடல் எனலாம். இதில் விசுவாசிகள் **'இதயத்தின் குகை'** என்ற ஆன்மீக நிலையில் ஒருவரையொருவர் சந்திக்க முயற்சிக்கிறார்கள். அப்பொழுது ஒருவர் தன் மனதை மற்றவரின் ஆன்மீக வாழ்க்கைக்கும் வழிபாட்டிற்கும் திறக்கிறார். இத்தகைய உரையாடல்கள் பெரும்பாலும் மற்றவர்களின் பிரார்த்தனை அல்லது தியான கூட்டங்களில் பங்கேற்பதற்கான வடிவத்தை எடுக்கும். இந்த வகையான உரையாடல் சர்ச்சைக்குரியதாகவே உள்ளது. ஏனென்றால், ஒருவர் தம் சொந்த நம்பிக்கையை சமரசம் செய்யாமல் பிறர் ஆன்மீக வாழ்க்கையில் பங்கேற்க முடியுமா என்பதைக் குறித்து கிறிஸ்தவர்களுக்கு உடன்பாடில்லை.

இந்தியா ஒரு பன்மைத்துவ கலாச்சாரம், சமயம் சார்ந்த சமுதாயம் என்பதால் நாட்டின் ஒற்றுமைக்கும் மக்கள் நல்வாழ்வுக்கும் உரையாடல் இன்றியமையாத தேவையாகிறது. தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு உரையாடல் உறுதுணைப் புரிகிறது. உண்மையில் **பன்மைத்துவம் இந்திய சமுதாயத்தின் அடித்தளம்:** அதன் அடிப்படைக் கூறு. இந்திய சமுதாயத்தின் இந்த பன்மை தன்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மதமும் அதன் சொந்த பிரிவுகள்/சமயக்கிளைகள் பற்றிய அணுகுமுறை பன்மைத்துவ கண்ணோட்டத்தில் இருக்க வேண்டும், மேலும் இந்த பன்மைத்துவ மனப்பான்மையை அதன் பற்றாளர்களிடையே ஊக்குவிக்க வேண்டும். இந்திய தேசத்தின் பன்மைத்துவம் ஜனநாயகம் மற்றும் சோசலிசத்துடன் தொடர்புடையது. சமயங்களுக்கு இடையிலான உரையாடல் சமூக நல்லிணக்கத்திற்கும் மனிதகுலத்தின் நலனுக்கும் பங்களிக்க வேண்டும்.(ஜூலை 2020-வெஸ்லி தமிழ் ஓசை இதழில் வந்த கட்டுரை)


சந்தா அனுப்ப

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

G Pay

**G-pay (Google Pay) மூலமாக சந்தா நன்கொடை அனுப்ப .....**

'வரலாற்றுச் சுவடுகள்' – மாத ஆய்விதழுக்கென்று
G-pay(Google Pay) மூலமாக நன்கொடை அனுப்ப விரும்புகிறவர்கள்,
91767 80001 என்கிற இந்த எண் மூலமாகவும் அனுப்பலாம். நீங்கள் சந்தா நன்கொடை அனுப்பிய பின்பு,
அதைக் குறித்த முழு விபரங்களை இதே எண்ணில் தொடர்பு கொண்டோ,
அல்லது இதே எண்ணிற்கு WhatsApp மூலமாகவோ, அல்லது christianhistorical@gmail.com
மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

# சிந்தனையில் சொல்லில் செயலில் மாற்றம் தேவை




**Rev. Dr. B. அகஸ்டஸ் பால்பாண்டியன்**
**செபத்தையாபுரம்**

மனிதன் சமூக விலங்கு என்று அழைக்கப்படுகிறான். அவன் தனியாக அல்ல. கூட்டாக வாழும் ஆற்றலைப் பெற்றுள்ளான். கூட்டாக வாழும்போது வேற்றுமையில் ஒற்றுமை காண்பது அவசியமாகிறது. இந்திய தேசத்தில் பல மாநிலங்கள், பல மொழிகள், பல இனங்கள், பல கலாச்சாரங்கள், பல இறை நம்பிக்கைகள்... காணப்படுகின்றன. இத்தகைய சூழலில் வாழும்போது நான் சொல்ரதே சரி. மற்றவர்கள் செய்வதெல்லாம் தவறு என்ற எண்ணம் தோன்றுமாயின், அது அமைதி கெடுவதற்கே காரணமாக அமைந்துவிடும். முந்தைய மிஷனெரிகளின் காலங்களில் தொடங்கி இன்று வரை சமய ரீதியாக அமைதி இழந்து வந்ததை வரலாறு கூறுகின்றன. இன்றைய சூழலில் அடிப்படைவாதிகளின் கை மேலோங்கி இருப்பதால் கிறிஸ்தவத்தின் குரல் வலைகள் நெறிக்கப்படுவதை அறிகின்றோம். இச்சூழலில் கிறிஸ்தவர்கள் பிற சமய மக்களுடன் எப்படி நல்லூறவை ஏற்படுத்துவது என்பது சவாலான காரியம் ஆகும்.

**சிந்தனையில் மாற்றம் தேவை**

தான் மட்டும் உண்மை (இறைவனை) அறிந்தவன். பிற சமய மக்கள் உண்மை அறியாதவர்கள் என்ற எண்ணம் பொதுவாக கிறிஸ்தவ மக்களிடம் காணப்படுகிறது. ஆனால் இது முற்றிலும் தவறான சிந்தனை ஆகும். எப்படியெனில் கிறிஸ்தவத்திற்குள்ளேயே பல ஆயிரம் பிரிவினைகள் உள்ளது. ஒவ்வொரு பிரிவினரும் தங்கள் கருத்தே உண்மை என்று கூறி பிற கிறிஸ்தவப் பிரிவை ஏற்க மறுக்கின்றனர். கிறிஸ்தவத்திற்குள்ளே ஒரு பெருமித்த சிந்தனை ஏற்படாத நிலையில் பிற சமய மக்கள் தங்கள் கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் இறைவனுக்கு எதிரானவர்கள் என்றும் சிந்திப்பது நியாயமானது அல்லவே.

இறைவனை அறியும் முகமாக வேதபுத்தகம் நம் கையில் உள்ளது. இதை எத்தனை பேர் முழுமையாக அறிந்துள்ளனர் என்ற வினா எழும்பினால் விடை காண பல அறிதான காரியம் ஆகும். இன்று செழுமை போதனைகள் கொடுத்து மக்களின் அறிவுக் கண்னை நவீன ஊழியர்கள் மூடிவிட்டனர் என்று கூறினால் அது மிகையில்லை. எனவே இயேசு கிறிஸ்துவின் ஆழமான சிந்தனைகளை மக்கள் அறியாதபடி உணர்ந்துகொள்ளாதபடி குருடாகவே இருக்கின்றனர் என்றும் கூறலாம். நம்மைக் குறித்து நாமே சரியாகப் புரிந்து கொள்ளுதல் இல்லாத நிலையில் பிற சமயத்தவர்களின் முறைகளை குறை கூறுவது எந்த விதத்திலும் ஏற்புடையது அல்ல. இயேசுவும் தமது போதனையில் தவறான போதகர்களை குருடரான வழிகாட்டிகள் என்று அறிகின்றார். உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன என்று இயேசு கூறினார்.

பிற சமய மக்களுடன் நமது உறவைச் சீராக வைத்துக் கொள்ள வேண்டுமானால் அவர்களை உள்ளபடியே ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். அதற்கு நமது சிந்தனையில் மாற்றம் தேவை.

**சொல்லில் மாற்றம் தேவை**

தடி எடுத்தவர் எல்லாம் தண்டல்காரன் என்பது போல வேதாகமம் வைத்தவரெல்லாம் ஊழியக்காரன் என்ற பெயர் தாங்கி இன்று பெருகி வருகின்றனர். இதனால் வேதாகமத்தைக் குறித்த ஆழமான அறிவு இருப்பதில்லை. தனக்குப் பேசத் தெரியும் என்பதற்காக பலவாறு பேசுகின்றனர். **'ஒரு வார்த்தை வெல்லும். ஒரு வார்த்தை கொல்லும் என்பர்'**. எனவே இன்றைய சமுதாயச் சூழலில் பிற சமய மக்களோடு நமது உறவைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டுமெனில் நமது சொல்லில் மாற்றம் தேவை.

நீங்கள் மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள் என்று இயேசு போதித்திருக்கிறார். ஆனால் இன்றைய கிறிஸ்தவ ஊழியர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் தங்கள் போதனைகள் பற்றி முழுமையாகத் தெரியாமல், பிற சமயம் பற்றிய எந்த உண்மையும் தெரியாமல் அவர்களை குற்றம் சொல்லி பேசி சமூகத்தில் பிரச்சனைகள் ஏற்படுத்துவதை நாம் அறிவோம். இது எந்த விதத்திலும் ஏற்புடையது அல்ல. கூடுமானால் யாவரோடும் சமாதானமாயிருங்கள் என்று வேதம் சொல்லுகிறது. நமது வாயிலிருந்து வரும் வார்த்தைகள் அமைதியை ஏற்படுத்துவதற்கு பதில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருக்கிறது என்றால் நம்மில் மாற்றம் தேவைதானே.

பவுல் அப்போஸ்தலர் அத்தனே பட்டணத்திற்குச் சென்று

அங்குள்ள நிலையை அறிந்து அவர்களுடன் உரையாடியதை வேதத்தில் வாசிக்கிறோம். பிற சமய தத்துவ மேதைகள் கூறிய மேற்கோளைச் சுட்டிக்காட்டி பேசினதை வாசிக்கிறோம். இத்தகைய அணுகுமுறையே அவரது ஊழியத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. ஒரு பெண்ணை ஒருகூட்ட மக்கள் குற்றவாளி என்று கூறி கல் எரிய வந்தனர். ஆனால் இயேசு நானும் உன்னை குற்றவாளி என்று தீர்க்கவில்லை என்று கூறினார். இத்தகைய அணுகுமுறையே பிற சமய மக்களிடம் நல்லுறவு ஏற்படக் காரணமாய் அமைந்தது.

பிற சமய மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தி அவர்களுடன் சமாதானமாகவே வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசுவின் பிறப்பை நட்சத்திரத்தின் வாயிலாக அறிந்த ஞானிகள் கிழக்கிலிருந்து (இந்தியா) சென்றதாக அறிகிறோம். அவர்கள் சமய ரீதியாக உருவ வழிபாடு கொண்டவர்களாகவே இருந்திருக்கக் கூடும். அவர்களுக்கு நட்சத்திரத்தின் மூலம் இறைவன் செய்தியை அனுப்பியிருக்க நாம் அவர்களைக் குற்றப்படுத்தி பேசுவது ஏற்புடையதா? இல்லையே.

**செயலில் மாற்றம் தேவை**

பிற சமய மக்களிடம் நாம் நல்லுறவை வளர்க்க விரும்பினால் நமது செயலால் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தொழுநோயாளிகள் மத்தியில் ஊழியம் செய்த தேவமனிதர்களையே எரித்துக் கொன்ற பிற சமய மக்கள் வாழும் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்தியாவில் அநேக மாநிலங்களில் மதமாற்று தடை சட்டம் அமுல்படுத்தி வருகிறது. இச்சூழலில் கிறிஸ்தவர்கள் அவர்களுடன் நல்லுறவை வளர்ப்பது கடினமானதே. இயேசு நமக்கு கற்றுக் கொடுத்த மாதிரி என்ன? அவர் மதம் மாறச் சொல்லி போதனை கொடுக்கவில்லை. மேலும் மதம் மாறச் செய்ய போராடின வேதபாரகரையும் பரிசேயரையும் கடிந்தே பேசினார். மதம் மாறுவது அல்ல. மனம் திருந்த வேண்டும் என்பதே இயேசுவின் மையச் செய்தி ஆகும். கிறிஸ்தவர்களாக மாறினால்தான் பரலோகம் என்றால் இயேசு கிறிஸ்துவின் சீடர்களும், பவுல் அப்போஸ்தலர்களும் ஏன் இயேசு கிறிஸ்துவும் பரலோகம் செல்ல முடியாது. ஏனெனில் அந்தியோகியாவில் இருந்த இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொண்டனர். மேலும் பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த பரிசுத்தவான்கள் ஒருவரும் பரலோகம் செல்ல முடியாது. யாவரும் கிறிஸ்தவர்கள் அல்லவே. பலர் கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலுமிருந்து தேவனுடைய ராஜ்யத்தில் பங்கு பெறுவர். ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளில் தள்ளப்படுவர் என்று இயேசு கூறினார்.

பல சமய சூழலில் பிற மக்களுடன் நல்லுறவை வளர்க்க அவர்களை உள்ளபடியே அன்பு செலுத்துவோம். இயேசுவின் அன்பை, போதனையை கூறுவோம். கிறிஸ்தவ சபை உறுப்பினராக அல்ல. கிறிஸ்துவாக வாழ்ந்து காட்டுவோம். சமாரியா சென்ற இயேசுவை முதலில் சமாரியாப் பெண் ஏற்க மறுத்தாள். ஆனால் கிறிஸ்துவின் செயல்பாடுகள் அங்கு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர்கள் கிறிஸ்தவர்களாக மதமாற்றம் அடையவில்லை. ஆனால் இயேசுவை அவரது போதனைகளை ஏற்றுக்கொண்டார்கள். நல் உறவை ஏற்படுத்தினார்.


இன்று நல்லுறவை ஏற்படுத்த முயலும் நாம் பிற மக்களின் எண்ணங்களை புரிந்துகொள்ள முயல்வோம். நமது சொற்களால் பிறரைக் காயப்படுத்துவதை நிறுத்துவோம். பிற மக்களை கிறிஸ்தவர்களாக மாற்ற வேண்டும் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு, கிறிஸ்துவாக மாற்ற முயல்வோம். இதுவே நல்லுறவுக்கு ஏற்புடையதாகக் காணப்படும்.

## வரலாற்றுச் செய்திகள்

## புத்தக அறிமுகம்

### 'நன்மறை காட்டும் நன்னெறி'

ராவ் சாகேப் மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் 1918 ம் ஆண்டு எழுதிய திருமறையியல் **'நன்மறை காட்டும் நன்னெறி'** முதற்பங்கு என்ற இந்நூல் இன்றைய திருச்சபை மக்களுக்கு புத்தகமாக கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் திருமறையில் உள்ள நன்னெறிகளை கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கத்திலும் மறுபதிப்பு செய்து வெளியீடும் முயற்சியில் மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் குடும்பத்தார் பெருமுயற்சியினாலும் மற்றும் திருநெல்வேலி தொல்லியல் கழகத்தினாலும் இந்நூல் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தினால் சாம்பவர் வடகரை சேகர தலைவர் அருள்திரு .A. ஜெபரத்தினம் அவர்கள் மற்றும் சேகர திருச்சபை மக்களின் ஜெபத்தினாலும் கடந்த 21 ஆம் தேதி சாம்பவர் வடகரை பரி. தோமா ஆலயத்தின் 114 வது ஆலய பிரதிஷ்டை பண்டிகையில் ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் துணைவியார் அவர்களின் சொந்த ஊரான நாஞ்சாங்குளம் மண்ணின் மைந்தரும் உறவினருமான தென்னிந்திய திருச்சபை நெல்லை திருமண்டல பேராயர் பேரருள்திரு. ARGST பர்னபாஸ் அவர்களின் திருகரங்களினால் **"நன்மறை காட்டும் நன்னெறி"** முதற்பங்கு நூல் திருச்சபை மக்களுக்கு அறிமுகப்படுத்தி வெளியிடப்பட்டது.



பேராயர் அவர்களுக்கும் சேகர தலைவர் அவர்களுக்கும் திருச்சபை மக்களுக்கும் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாறு சங்கத்தின் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

# 'வட இந்திய பகுதிகளில் நமது உறவு'

திரு. கிருபாகரன் சாமுவேல்
முன்னாள் IMS ஊழியர்
retired RBI Officer,Chennai

கிறிஸ்தவர்களாகிய நாம் பிற மதத்தினரோடு அன்போடு பழகி அவர்களுக்கு கிறிஸ்துவின் அன்பை நம் வாழ்க்கை மூலம் அறிவிக்க வேண்டும். ஆனால் எகிப்து தேசத்து தேவர்களை இஸ்ரவேலர் புதிய கானானுக்கும் கொண்டு சென்றது போல நாமும் அவர்களிடமிருந்து சிலை வணக்கம், ஆவி வணக்கம், பில்லி சூனியம் போன்ற காரியங்களில் கவனமாய் இருந்து விலகி இருக்க வேண்டும்.

அவர்களிடம் அன்பு பாராட்ட வேண்டும். வியாதி, கலக்கம் வரும்போது அவர்களை இயேசுவிடம் அறிமுகம் செய்து அவரிடம் விண்ணப்பிக்க பழக்க வேண்டும். அவர்கள் விடுதலை பெறும்போது ஆண்டவரை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்தவர்களாகிவிட்டால் சில சமயம் அவர்கள் உறவினர் ஒதுக்கிவிடுவார்கள் என்ற ஐயம் அவர்களுக்கு உண்டு.

வடஇந்தியாவில் நாம் சுவிசேஷ ஊழியம் செய்யும்போது இதை அதிகமாகப் பார்க்கிறோம். ஒரு குடும்பம் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து கிறிஸ்தவ குடும்பம் ஆகிவிட்டால், அவர்கள் இனத்தார், கிராமத்தார் அவர்களை ஒதுக்கிவிடும் நிலை கூட வந்துவிடுகிறது. இது எல்லாம் நம் கர்த்தரைப் பற்றி முழுஅறிவு இல்லாமல், தங்கள் தெய்வம் தங்களை இம்சைப்படுத்துமோ என்ற பயம் அவர்களை உந்துவதால்தான். இதற்கு நம் ஜெபமும், அவர்களுக்கு அறிவு புகட்டலும் வேண்டும். நாம் நன்மை செய்யத்தான் வந்திருக்கிறோம் என்று அறிந்தால் நம்மை எதிர்க்க மாட்டார்கள்.

ஒரிசாவில் மல்கிகன்கிலி பகுதியில் இந்திய மிஷனரி சங்கத்தின் மூலம் ஒரு சபை நிறுவினபோது அங்குள்ள அரசு ஊழியர்களே எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஆனால் அங்கு ஒரு இங்லிஷ் மீடியம் பள்ளிக்கூடம் ஆரம்பித்து நடத்தியபோது எதிர்த்த அவர்களே ஆதரவு கொடுத்தார்கள். தங்கள் பிள்ளைகளைச் சேர்த்தார்கள்.

அதேவிதமாக சத்தீஷ்கார் மாநிலத்தில் சுக்மா என்ற ஊரில் ஆலயம் கட்ட கலெக்டர் ஒப்புதல் தர இடையூராக இருந்தார். நேரில் சென்று பார்த்தபோது அவர் சொன்னது, இங்கு ஒரு ஆலயத்திற்கு முன் ஒரு பள்ளிக்கூடம் கட்டுங்கள் என்றார். அதற்கு நாம் உடன்பட்டவுடன் ஒப்புதல் வழங்கினார். அங்கு ஏழை கிராம மக்கள் படிப்பறிவு இல்லாமல் இருக்கிறார்கள். மருத்துவ வசதி இல்லாமல் இருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு படிப்பு, மருத்துவம், தையல் கல்வி, கணினி கல்வி கொடுக்கும்போது கிறிஸ்துவின் அன்பை நாம் வெளிப்படுத்தி அவர்களை கிறிஸ்துவிடம் வழிநடத்துகிறோம். அப்பொழுது அவர்களாகவே கிறிஸ்துவை அறிந்துகொண்டு சபையில் சேரும் சிலாக்கியம் பெறுகிறார்கள்.

சில சமயம் சில கிராமவாசிகள் நம் ஜெபத்தினால் பயன்பெறுகிறார்கள். வியாதி சுகமாகிறது, பிசாசின் தொல்லை, குடிப்பழக்கம் போகிறது. அப்பொழுது ஆண்டவரை ஏற்றுக்கொண்டு சபையில் சேருகிறார்கள். சில பொறாமை பிடித்த ஊர்காரர் போலீசில் புகார் கொடுக்கிறார்கள். ஆனால் போலீஸ் ஸ்டேஷனில் போய் தங்களுக்கு நடந்த நல்ல காரியத்தை, வியாதி போனதை, குடிபோதை போனதை, பிசாசு போனதை அவர்களே போலீசில் தெரிவித்து விடுதலை பெறுகிறார்கள்.

பீஹாரில் சிக்டா என்ற இடத்தில் ஒரு ஹாஸ்டல் கட்டி, மாணவர்களைச் சேர்த்துப் பள்ளிக்கூடம் அனுப்பினோம். அப்பொழுது அருகில் உள்ள நேபாள் தேசத்திலிருந்து சில இளம்பெண்கள் வந்து தங்களுக்குத் தையல் பயிற்சி கொடுக்கச் சொன்னார்கள். தையல் பள்ளி நிறுவினபோது அவர்கள் சொன்னது: 'ஐயா நீங்கள் தையல் எங்களுக்குச் சொல்லிக் கொடுப்பதால் நாங்கள் தையல்தொழில் செய்து பிழைத்துக் கொள்வோம். இல்லாவிட்டால் எங்கள் பெற்றோரே எங்களை டெல்லி, மும்பை போன்ற பட்டணங்களுக்கு பாலியல் தொழிலுக்கு விற்றுப்போடுவார்கள்' என்றார்கள். என்ன பரிதாபம். மற்றும் ஓர் ஊரில் சென்றபோது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இருக்கும் கிராம பகுதிக்கு மின்சாரம் இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஆனால் அதே கிராமத்தில் வாழும் உயர் குலத்தவருக்கு மின்சாரம் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர் வசிக்கும் பகுதிக்கு தெருவிளக்கு கூட கொடுக்கப்படவில்லை. இவ்வித அநியாயம் சரிகட்டப்பட வேண்டுமானால் கல்வி அறிவு மிக முக்கியம். நாம் அதைக் கொடுக்க வேண்டும்.

சில கிராமங்களில் மருத்துவ வசதி இல்லாததால் பூஜாரியிடம் செல்லுகிறார்கள். அவன் இரண்டு கோழி கேட்டு வாங்கி, வேதனை உள்ள இடத்தில் சூடு போடுகிறான். படிப்பறிவு, மருத்துவ வசதி நாம் அன்போடு கொடுக்கும் போது இவர்கள் நலம் பெறுகிறார்கள். ஆண்டவரின் அன்பை அறிந்துகொள்ளுகிறார்கள்.

இன்னும் சில கிராமங்களில் நாம் சென்று தாழ்த்தப்பட்டவர்களை படிக்க வைக்கும்போது, உயர் ஜாதியினர் இவர்களை ஏன் படிக்க வைக்கிறீர்கள் என்று கேட்டது உண்டு. இவர்களை முன்னேற்றத்தான் இயேசு எங்களுக்கு கட்டளை கொடுத்திருக்கிறார் என்று நாங்கள் கூறினோம். இன்னும் நாம் செய்ய வேண்டிய பணி வெகுவாய் உள்ளது. ஆண்டவர் இரண்டாம் வருகையில் வரவேண்டுமானால் நாம் இந்த ஊழியத்தை துரிதமாகச் செய்ய வேண்டும். ஜெபிப்போம், உழைப்போம்.

இந்த வருட (2022) கிறிஸ்மஸ் விழாவிற்கு உத்திர பிரதேசம், அரோரா பணித்தளத்தில் சித்தாந்தசிங் என்ற பிற மத கட்சித் தலைவரை அழைத்தபோது, அவர் வந்து சிறப்பாக 5 நிமிடம் பேசினார். ஆண்டவருடைய நாமம் மகிமைப்பட்டது. நாம் பிற மதத் தலைவர்களை அழைக்கும்போது நம்மோடே அவர்கள் பழகி, நம்மையும் ஆண்டவரையும் நன்கு புரிந்து கொள்கிறார்கள்.

அதே பணித்தளத்தில் விகாஷ் என்பவருடைய 7 மாத குழந்தை கடினம் என்ற நிலையில் நமது சபையோர் பாரத்தோடு ஜெபித்ததால் குழந்தை பிழைத்தது. ஆண்டவருக்கு நன்றி காணிக்கையாக அந்த குடும்பத்தார் கிறிஸ்மஸ் தினத்தன்று வந்த அனைவருக்கும் உணவு கொடுத்து நன்றி தெரிவித்தார்கள். நாம் பழகும் முறையில் அவர்கள் ஆண்டவரின் அன்பை உணருகிறார்கள்.

# உறவுகள்...

**Gaurav Ebenezer**
Tirunelveli

தொடக்க காலம் முதல் இன்று வரை பல இடங்களில் கிறிஸ்தவர்கள், மிஷனரிகள் மற்றும் ஊழியர்கள் தாக்கப்படுவதும், தேவாலயங்கள் நொறுக்கப்படுவதும் மற்றும் சபைகள் தீயுக்கு இறையாக்கப்படுவதும் செய்திகள் வந்த வண்ணமே இருக்கிறது குறிப்பாக இதன் மூலம் நமக்கும் மற்ற மத சமுதாய மக்களின் எண்ண ஓட்டம் என்ன என்று ஆராய்ந்தால் மதமாற்றம் என்னும் ஒரு பதம் பயன்படுத்தப்படுகிறது.

உண்மையில் நடப்பது தான் என்ன ? எங்கே தவறு நடக்கிறது என்று ஆராயவேண்டியது நம் கடமை. மக்கள் வெறுக்கும் அளவிற்கு எது காரணம் ? யார் காரணம் ? என்று தெளிந்து தெளிவுப் படுத்துவது நம் கடமை. வெறுமனே ஓடி ஓடி ஊழியம் செய்வதால் ஒரு பயனுமில்லை. விரும்பி சாப்பிட்டால் தான் உண்ட உணவு கூட ஒட்டும். விரும்பாத பண்டத்தை கோடி ரூபாய் கொடுத்து வீட்டில் குவித்து வைத்தாலும் சீண்டுவதற்கு நாதியிருக்காது. கிறிஸ்துவானவர் இந்த பூமிக்கு வந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகிறது. எனினும் பெரும்பான்மையானவர்களை இன்னமும் நம்மால் சென்றடைய முடியவில்லை என்றால் தவறு எங்கிருக்கிறது. யதார்த்தம் யாதெனில் தவறு நம்மிடம் இருக்கிறது என்பது தான் நிதரிசனமான உண்மையாகும். அப்படியானால் உண்மையைக் கண்டு தவறுகளை களைவதே சிறப்பு. அது தான் நாம் தேவனுக்கு செய்யும் சிறப்பான தொண்டாக முடியும். நோய்க்குத் தான் மருந்தே ஒழிய, மருந்துக்காக நோயாளியை தேடுவது மருத்துவத்துக்கு நாம் செய்யும் பெரிய துரோகம். அது போலவே மருந்தைக்கண்டு ஒரு நோயாளி தலைத் தெறிக்க ஓடுவானானால் அது மருந்தின் குறையல்ல மருத்துவத்தின் குறை. இந்த இடைவெளியை நிவிர்த்தி செய்யும் வரை மருந்துக்கோ, மருத்துவத்திற்கோ ஏன் அந்த நோயாளிக்கும் எந்த விதப் பயனுமில்லை. அவ்வாறே இன்றைய கிறிஸ்துவத்தின் நிலையும், மக்களின் மனநிலையும், ஊழியர்களின் செயல்பாடுகளும் அடங்கும் என்று கூறுவது சற்றேறத்தாழ உண்மையே என்பது மிகையல்ல.

கிறிஸ்தவம் என்பது அன்பின் வெளிப்பாடு ஆம் இயேசு கிறிஸ்து அன்பே வடிவானவர் கிறிஸ்துவின் போதனைகள், கிறிஸ்துவின் அடையாளங்கள், கிறிஸ்துவின் வாழ்க்கை சாட்சிகள், கிறிஸ்துவின் சிலுவை மரணம் என அனைத்துமே அன்பை போதிக்கின்றது. இப்படிப்பட்ட அன்பின் வெளிப்பாடாய் இருந்த எண்ணற்ற மிஷனரிகள் பிற மத சமுதாயம் மக்களுடன் மிகவும் நல்லுறவுடன் கிறிஸ்துவை ஆழமாய் பதிய செய்தனர்.

குறிப்பாக ஏமி கார்மைக்கேல், ஐடா ஸ்கேடர் போன்ற எண்ணற்ற மிஷனரிகள் பிற மத சமுதாயம் மக்களின் வாழ்வில் முன்னேற்றத்தில் இயேசுவின் அன்பை வெளிப்படுத்தினார்.



**Kasthuri** Pavoorchatram

உன்னிடத்தில் அன்பு கூறுவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக. மத்தேயு 22:39 தேவனுடைய பத்துக் கட்டளைகளில் இரண்டாம் கட்டளையாகக் கருதப்படும் அன்பு குறித்த கட்டளையை கடைபிடிக்க வேண்டுமானால் தேவனுடைய அன்பை நம்மூலம் வெளிப்படுத்த ஒரு நல் வாய்ப்பாக அமைகிறது. ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கக்கடவோம். ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கின்றது. 1 யோவான் 4

ஆம் தேவனாகிய கர்த்தர் அன்பையும் உருவாக்கி அன்பாயிருப்போம் என்று கற்பிக்கிறார். எவ்வாறு கடைபிடிப்பது என்பதுதான் ஆயிரமாயிரம் கேள்விகள். இங்கு அன்பு, மனித அன்பு, மனிதாபிமானம் உள்ளதாக பிரதிபலித்தால் தேவன் பிற மக்கள் நடுவில் எழும்புகிறார். பிற மத உறவுகள் வளர்வதில் மனிதாபிமானம் என்ற அன்பின் வெளிப்பாடு. கர்த்தரால் உருவாக்கிய மனிதன் கர்த்தரின் நோக்கத்தை நிறைவேற்ற ஒரு வாய்ப்பாக அமைகிறது.

அன்பின் முக்கிய பண்பு மனிதாபிமானம் என்பது மனிதனின் பண்பாக இருக்க வேண்டும். அப்படி சொல்லுகிற மனிதாபிமானம் தான் என்கிறபோது நினைவுக்கு வருவது அன்னை தெரேசா என்ற வெளிநாட்டுக் கன்னியாஸ்திரி இந்தியா வந்து இயேசு கொடுத்த அன்பை மனிதாபிமானம் என்ற பண்பில் கல்கத்தாவில் தொழுநோயாளிகளோடு வாழ்ந்து சேவை செய்தும் காளிக்கோவில் பூசாரி தொழுநோயாளியாகும் போது மதம் பார்க்கவில்லை. மனிதாபிமான அன்பு வெளிப்பட்டது தெளிவான வரலாறாக வெளிப்பட்டது மட்டும் இல்லை. நம் பிற மத சகோதர சகோதரிகளை ஆம் அப்படிப்பட்ட மனிதாபிமானம் என்று அன்பின் பண்பை கிறிஸ்து இயேசுவைப் பின்பற்றும் கிறிஸ்தவன் ஒவ்வொருவரும் கடைபிடிக்க பல வழிகள், ஏற்றத்தாழ்வு இல்லாத, ஊழல் இல்லாத, வேறுபாடு இல்லாத, வெறுப்பு இல்லாத, பொறாமை இல்லாத, கொடூரக் குணம் இல்லாத முறைகளைப் பின்பற்றினால் அங்கு இயேசு கிறிஸ்துவின் எழுப்புதல் காலகட்டம் பிற மத மத்தியில் பிரகாசமாக ஒரே நல் வாய்ப்பாக அமைகிறது இயேசுகிறிஸ்துவின் படைப்பு.

மனிதன் உன்னதமான படைப்பு. படைப்பின் மேன்மையை வெளிப்படுத்த மனிதாபிமானம் என்ற கேடயம் மனிதன் கடைபிடிக்க பிற மத உறவுகள் வலுப்பெற்று மனிதர்கள் வளமுடன் வாழவே.



# பிற மத, சமுதாய மக்களுடன் நமது உறவு எப்படி இருக்க வேண்டும்?

**முனைவர்.ஜி. ஆனி ஜோஸ்பின் வைகைச் செல்வி**
**சென்னை**

இப்போதெல்லாம், இப்படி ஒரு பெரிய கேள்வி நம்முள் எழுகிறது. பிற மத, சமுதாய மக்களுடன் நமது உறவு எப்படி இருக்க வேண்டும்? அவர்களுடன் நெருங்கிப் பழகலாமா? எந்த அளவிற்குப் பழகலாம்? இதெல்லாம் ஒரு வகையில் பார்த்தால் சிக்கலான கேள்விகள். ஒரு வகையில் பார்த்தால் மிக எளிமையான கேள்விகள். ஆனால், இக்கேள்விகள், இந்தக் கால கட்டத்தின் முக்கியமான கேள்விகள் என்றே கருத வேண்டும்.

இந்தியா ஒரு பன்முகத்தன்மை வாய்ந்த நாடு. இந்நாட்டில் பல்வேறு மதங்கள், கலாச்சாரங்கள், மொழிகள், நாகரிகங்கள், பழக்கவழக்கங்கள் உடைய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வீட்டிலிருந்து சன்னல் வழியே பார்த்தாலே தெரியும். இப்படிப்பட்ட சூழல் வீட்டிற்கு வெளியில் மட்டும் அல்ல. வீட்டிற்குள்ளேயும் கூட நிலவுகிறது. நம் நெருங்கிய உறவுகளுக்குள்ளும் நிலவுகிறது. இந்த சூழலில் இறைவன் வழங்கியுள்ள இந்த வாழ்க்கையை இவர்களுடன்தான் நாம் வாழ வேண்டும். **“யாதும் ஊரே யாவரும் கேளிர்”** என்பதே இவர்களோடு நமக்குள்ள உறவிற்கு அடிப்படை. அது மாத்திரமல்ல. அனைத்து மக்களுமே தேவனின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே இறைவன் விதித்துள்ள கட்டளையாகும். மேலும் இவ்வுலகில் மக்களிடையே ஆற்ற வேண்டிய ஒரு முக்கியமான கடமை வேறு நமக்கு உள்ளது. அதுவே நற்செய்திப் பணியாகும். அன்பினால் மட்டுமே சாதிக்க வேண்டிய செயலிது. இவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த உலகில் எப்படி வாழ்வது மற்றும் பிறருடன் எப்படிப் பழகுவது என்பதற்கான அளவுகோல் பரிசுத்த வேதமும் அதிலுள்ள ஆண்டவரின் வார்த்தைகளான வசனங்களுமே.

நல்ல சமாரியன் கதையை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எதற்காகக் கூறினார்? அந்த ஐசுவரியவானுக்கு ‘யார் பிறன்?’ எனத் தெரியவில்லை. அவனுக்கு மட்டுமல்ல. ஒரு ஆசாரியனுக்கும் லேவியனுக்கும் கூடத் தெரியவில்லை. ‘தாம் பிரித்தெடுக்கப்பட்ட ஜனம்’ என்பதால், மற்றவர்களை விட ஒரு படி மேலே அமர்ந்துள்ளவர்கள் என்று நினைத்தபடியாலேயே, இயேசு கிறிஸ்து, பிறன் யார் என்று அவர்களுக்கு விளக்க வேண்டியதாயிற்று.

‘இஸ்ரவேல் ஜனங்களை தேவன் பிரித்தெடுத்தார் என்பது உண்மையே. எதற்காக?’ இந்த ஜனங்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் என்று யூதர்களில் ஆரம்பித்து, **நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.** என்று நம்மில் முடிக்கிறார். யாருடன் பழகினாலும், இந்தத் தெரிந்துகொள்ளுதலுக்கு ஒருபோதும் களங்கம் வந்துவிடக் கூடாது என்பதில் கவனம் தேவை.

நம்மளவில் நாம் எப்படி இருக்கவேண்டும் என்பதையே



இந்த வசனங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் இவற்றிற்குப் பங்கம் ஏற்படாதபடி நம் பழக்க வழக்கங்கள் இருக்க வேண்டும். நம் உறவுகள் நட்புகள் இருக்க வேண்டும். இதைத்தான் அரிச்சுவடியாக வேதம் நமக்குச் சொல்லுகிறது.

அப்படியானால் இந்த உலகத்தில் உள்ள சக மனிதர்களுடன் நாம் எப்படிப் பழக வேண்டும்? ஆண்டவர் மேலே வானத்தில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை. கீழே இறங்கி வந்து, மக்களோடு மக்களாகச் சுற்றித் திரிந்தார். இவ்வுலகில் தேவனுடைய ராஜ்யத்தினை நிர்மாணிக்க. மக்களோடுதான் அவர் வாழ வேண்டியதாயிற்று. ஆண்டவருக்கே வேறு வழியில்லை என்றால், நமக்கும் அதே வழிதானே? பிற நம்பிக்கை மற்றும் பிற கலாச்சார மக்களுடன் வாழ்ந்து கொண்டுதான் தேவ ராஜ்யத்தை அவர்கள் மத்தியில், அவர்களுக்காக ஸ்தாபிக்க வேண்டும். நம்மைப் போல பிறனை நேசிக்க முடிந்தாலே, இது சாத்தியம். எனவே நம்மைச் சுற்றியுள்ள பிற இன, மொழி, நம்பிக்கை, சமுதாய மக்களோடு நேசத்துடன், பாசத்துடன் பழகத்தான் வேண்டும். அதே வேளையில் நாம் கர்த்தராகிய தேவன் மீது வைத்துள்ள அன்பு, விசுவாசம், நம்பிக்கை, வேதத்தின் அடிப்படையிலான அன்றாட வாழ்க்கை முறை, தொழுகை சம்பந்தப்பட்ட இறைக் காரியங்களில் எவ்வித பிறழ்வோ, தாழ்ச்சியோ வருவதை அனுமதிக்கக் கூடாது.

பிற நம்பிக்கை உடைய மக்களோடு நமக்கு அடிக்கடி உரசல் ஏற்படும் நிகழ்வுகள் பண்டிகைகளே. இரு உதாரணங்கள் அதாவது உண்மை நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். பொதுவாக, ஆயுத பூஜையன்று தொழிலகங்களில் எந்த வேலையும் நடைபெறாது. ஆயுதங்களை வைத்துக் கும்பிடுவார்கள். ஆனால் தொழிலாளர்களுக்கு ஒருநாள் சம்பளம் போனசாகக் கொடுக்கப்படும். 1980-களில், என் தந்தையார் மதுரையில் ஒரு அச்சகம் வைத்திருந்தார். நாங்கள் இந்த ஆயுத பஜையன்று என்ன செய்யலாம் என யோசித்து யோசித்து ஒரு முடிவிற்கு வந்தோம். அன்று அச்சகத்தைச் சுத்தம் செய்தோம். எவ்வித வேலையும் செய்யவில்லை. போதகரை அழைத்து தோத்திர பிரார்த்தனை ஏறெடுத்தோம். இந்த அச்சகத்தையும், தொழிலாளர்களையும் தந்த ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினோம். பின்னர். தொழிலாளர்களுக்கு ஒருநாள் சம்பளத்தைக் கவரில் போட்டு என் தந்தை அவர்களுக்குக் கொடுத்தார். என் தந்தையின் இச்செயல் என் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது.

இப்போது நான் ஆதரவற்றோர் இல்லத்தில் பொங்கல் கொண்டாடுகிறேன். எப்படி? சர்க்கரைப் பொங்கல், கரும்பு ஆகியவற்றுடன்தான். அறுப்பின் பண்டிகையைக் கொண்டாட வேண்டுமென தேவனே கட்டளையிட்டுள்ளார். நம்மைப் பொறுத்தவரையில் பொங்கல் பெருநாளில், அறுப்பைக் கொடுத்து நம் களஞ்சியத்தை நிறைத்த ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் நாள். இறைவனுக்கு நன்றி செலுத்தும் இந்நாளில், ‘படைப்பை அல்ல..படைத்தவரைக் கும்பிடுங்கள்’ என்று எடுத்துச் சொல்கிறேன். படைப்பை விட அவற்றைப் படைத்த ஆண்டவர் பெரியவர் என்று அனைவருக்கும் விளக்குகிறேன். நான் பொங்கல் கொண்டாடுகிறேன் என்ற சொன்னதற்காக, எனது உறவினர் என்னிடம் பயங்கரமாகக் கோபித்துக் கொண்டார். நான் எப்படிக் கொண்டாடுகிறேன்? என்று கேட்பதற்கு அவருக்குப் பொறுமையில்லை. இப்படிப்பட்டவர்கள் புரிந்து கொள்வதில்லை. படைப்பின் தேவனை மட்டும் கனப்படுத்தி, அவருக்கு நன்றி செலுத்தி, பொங்கல் பண்டிகையை நாம் கொண்டாடித்தான் பிறருக்கு அதனை எப்படிக் கொண்டாட வேண்டும் என எடுத்துச் சொல்ல முடியும். அதற்காக எல்லாப் பண்டிகைகளையும் நாம் கொண்டாட இயலாது. நம் அடிப்படை நம்பிக்கையை அசைக்கிற எந்தக் கொண்டாட்டங்களும் ஏற்புடையதல்ல.

இறுதியாகக் கூறின், திருமறையில் சொல்லப்படாத மற்றும் விலக்கி வைக்கப்பட்டிருக்கிற சடங்காச்சாரங்களைப் பின்பற்றவோ, வேறு நம்பிக்கையை ஏற்றுக் கொள்ளவோ கூடாது. யாராவது ஒருவருடன் பழகும் நேர்வில் அப்படிப்பட்ட சூழல் வருமெனத் தெரிந்தால், அச்சூழலை முன்கூட்டியே தவிர்க்க வேண்டும். நம் வேதத்தில் ‘கலவாதிருப்பாயாக’ என்று சொல்லப்பட்டிருப்பதன் அர்த்தம் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

இதையெல்லாம் சரியாகப் புரிந்து கொள்ளாத யூதர்கள் புறஜாதியார் என்று சொல்லி பிறரிடம் அன்பு காட்டாமல், தங்களை நத்தைக் கூட்டிற்குள் அடைத்துக் கொண்டபடியால்தான் உலகளாவிய வகையில் அவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டது. கிறித்தவர்களாகிய நாமும் அதே தவற்றைச் செய்ய வேண்டாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் நாம் வாழ்கின்ற இதே உலகத்தில்தான் அவதரித்தார். இந்த உலகத்திலிருந்த மக்களோடுதான் உண்டு, உறங்கி வாழ்ந்து வந்தார். ஆனால், அவர் உலகத்தானல்லாதது போல நாமும் உலகத்தாரல்ல. இந்த அளவுகோலைப் புரிந்து கொண்டால், பிற சமுதாய மக்களோடு பழகி வாழ்வதில் எவ்விதக் குழப்பமும் இராது.

தமிழ் நாட்டின்
தனிப்பெரும் நாவலாசிரியர்

**அ.மாதவையா**
அவர்களின்

# கிளாரிந்தா

தமிழ்நாட்டில் வெளி வந்த முதல் வரலாற்று நாவல்



## தொடர்– 22

அவனும் தன் இருக்கையிலிருந்து எழுந்தவனாய் அவள் முகத்தை ஆவல் ததும்பப் பார்த்துக்கொண்டே, 'நான் நாளை அல்லது அடுத்த வாரம் வருகிறேனே? நான் சொல்லுவதையும்தான் கேளேன். நான் உன்னை இன்னும் காதலிக்கிறேன். அப்பாவுக்கும் எனக்கும் இது பெரிய தலைகுனிவாக இருக்கிறது. நகரம் முழுவதும் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது. வேண்டுமானால் அப்பா உன்னுடைய சீதனச் சொத்தை உன்னிடம் திரும்பத் தந்துவிடுவார். நீ அதை உன் விருப்பம் போல் உன் ஆயுசு முழுவதும் அனுபவித்து வரலாம். நான் ரொம்பவும் வேண்டிக்கொள்கிறேன். இந்த மிலேச்சனின் நிழலை விட்டுவிட்டு வந்து என்னுடன் இரு. நீ விரும்பினால் நான் வேறு பெண்ணை மறுமணம் செய்துகொள்ளாமல் இருக்கிறேன்' என்றான்.

'முடியாது' என்று கசப்புடன் அழுத்தமாகக் கிளாரிந்தா சொன்னாள். 'உன் தகப்பனார் என் சொத்துக்காக என் உடலைக் கொல்லப் பார்த்தார். நீ காம இச்சைக்காக அல்லது சொத்துக்காக என் உடல், ஆத்மா இரண்டையுமே கொல்லப் பார்க்கிறாய். வழக்கில் ஜெயிக்காமல் போனால்கூட உன்னுடன் வாழ்வதைவிடத் தெருவில் பிச்சையெடுத்தே பிழைப்பேன். இனிமேலும் நீ என்னை அவமானப்படுத்தவேண்டாம்.'

எதையோ சொல்ல விரும்புபவன்போல அல்லது செய்ய விரும்புபவன்போல தயங்கிய அவன், அவள் பார்வையைப் பார்க்க நேரிட்டதும் பயந்து பின்வாங்கிவிட்டான்.

சிறிது தூரம் சென்றதும் திரும்பவும் வந்து வாசல்படியில் நின்றுகொண்டு, 'சாப்பாடு எப்படி நடக்கிறது? நரஹரிராவ் தான் தினமும் கொண்டுவருகிறாரா?' என்றான்.

அவள் பொறுமை இழந்தவளாய் அலட்சியத்துடன், 'இல்லை, அவரைச் சிரமப்படுத்த விரும்பவில்லை. சாரதா தண்ணீர் கொண்டுவந்து சமைக்கிறாள். சமயங்களில் நானும் சமைக்கிறேன்' என்றாள்.

'சாரதா சூத்திரப் பெண் அல்லவா?' கேட்கவே கூசினான் மாதவன். 'நீ எப்படி அதைச் சகித்துக்கொள்கிறாய்?'

'சகித்துக் கொள்ளவேண்டிய தவறு இதில் என்ன வந்தது? கல்யாணி பாய்களையும்விட ஆயிரம் கமலாபாய்களையும் சாரதா எவ்வளவோ மேல். என்னையும் என் மிலேச்சக் கருத்துக்களையும்பற்றி நீ கவலைப்பட்டுக்கொள்ளாதே. போய்விடு' என்றாள்.

அதிர்ச்சியுற்ற மாதவன் கிறுக்குத் தான் பிடித்துவிட்டதோ அல்லது அவள் பாதுகாவலனோடு சேர்ந்து இவளும் மிலேச்சமாகி அவனுடன் 'வாழ்ந்து' கொண்டுதான் இருக்கிறாளோ என்று பலதும் நினைத்துக்கொண்டே வேகமாக வெளியே சென்றான்.

**ஆசானும் மாணவியும்**

அவன் சென்றதும் கிளாவிருந்தா கதவைத் தாழிட்டுக் கொண்டு படுக்கையில் விழுந்து வெகுநேரம் அழுதாள். கண்ணீர், கடவுள் கருணையுடன் அளித்த ஒரு வரம். தனிமையில் துன்பம் அனுபவிக்கும் ஆத்மாக்களுக்கு அது ஒன்றுதான் ஆறுதல்.

கடைத்தெருவிலிருந்து திரும்பி வந்த சாரதா தன் எஜமானி சிந்தனையில் மூழ்கி இருப்பதையும், அவள் கண்கள் அழுது வீங்கி இருப்பதையும் கவனித்தாள். இப்பொழுது அவளுடன் பேசுவதில் பயனில்லை என்று உணர்ந்த அவள் பெண்களுக்கே உரித்தான முறைகளில் அவள் மனதை வேறு பக்கங்களில் திருப்ப முயன்றாள்.

தலைவலியாக இருந்ததால் கிளாவிருந்தா அன்று மாலை லிட்டில்டனைச் சந்திக்கவில்லை. இரவிலும் கவலை நெஞ்சை அழுத்திக்கொண்டே இருந்தது. நெடுநாளாகப் போற்றி வளர்த்து வந்த ஓர் இனிய நம்பிக்கை முரட்டுத்தனமாகப் பிடுங்கி எறியப்பட்டது போன்ற ஒரு வேதனையை உணர்ந்தாள்.

மறுநாள் காலை மனம் சற்று இலேசானதுபோல்

தோன்றியது அன்று லிட்டில்டன் அவளைச் சந்தித்தபோது, மெதுவாக, பேட்டி நன்றாக முடிந்ததா என்று கேட்டுவிட்டு அவள் தலைவலியைப்பற்றியும் விசாரித்ததோடு நிறுத்திக்கொண்டார். அவருடைய இந்த மென்மை அவளுடைய இதயத்தைத்தொட்டது. எல்லாவற்றையும் அவருக்கு விவரமாகச் சொல்ல வேண்டியதில்லை என்று அறிந்ததும் அவள் பெரு நிம்மதி அடைந்தாள். ஆனால் அவர்கள் அன்று வேறு உரையாடல் எதுவும் வைத்துக்கொள்ளவில்லை. பாடத்தைப் படிப்பதோடு நிறுத்திக்கொண்டார்கள்.

லிட்டில்டன் அவள் மனதைக் கிளறிக் கேட்கவில்லையாயினும், அவளால் தன் உணர்ச்சிகளை அவரிடமிருந்து மறைக்க முடியவில்லை. இந்தத் திடீர் மாற்றத்தின் காரணம் அமாத்யாவின் மகன் வந்து பேசிச் சென்றதுதான் என்று அவர் புரிந்து கொண்டு அமைதியுடனும் மென்மையுடனும் அவளுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் நடந்துகொண்டார். அவள் அறிவுக் கூர்மையுள்ளவள் என்பதை லிட்டில்டன் வெகு நடைமுறை விரைவிலேயே கண்டுகொண்டார். முக்கியத்துவம் வாய்ந்த பல விஷயங்களைப்பற்றி அவள் இது வரை சிந்தித்திராத கோணங்களிலிருந்து அவளைச் சிந்திக்கச் செய்து அவள் அறிவு விழிப்படையவும், மனம் விசாலம் அடையவும் திட்டமிட்டுச் செயல்பட்டார். ஆனால் தன்னுடைய மத நம்பிக்கைகளை அவளிடம் அவர் வலுக்கட்டாயமாகப் புகுத்தவில்லை. அவளுக்குத் தெளிவான மத நம்பிக்கைகள் எதுவும் இல்லை என்பதையும், அவளுடைய சாதிப் பழக்க வழக்கங்களைப்பற்றி அவள் சில முற்போக்கான தீவிர கொள்கைகள் கொண்டிருக்கிறாள் என்பதையும் அறிந்தார். அவர் சந்தித்த எந்த இந்து ஆடவனுக்கும் பெண்ணுக்கும் இதுபோன்ற கருத்துக்கள் இருந்ததை அவர் கண்டதே இல்லை. அவள் சுயமாகவும் துணிவுடனும் சிந்திக்கும் திறன் உள்ளவள், வசப்படக்கூடியவள் என்பதையும் மிகவும் உணர்ச்சி அறிந்தார்.

நாளடைவில் கிறிஸ்தவ மதத்தின் நடைமுறை அம்சங்களை விளக்கிச் சொல்லத் தொடங்கினார். துன்பத்தில் மூழ்கி இருக்கும் மக்களுக்கு அது நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அளிக்க வல்லது என்று கூறினார். மனித குமாரனின் எல்லையற்ற அன்பையும், சுகமளிக்கும் அவர் கருணையையும், அவர் மனிதனாக அவதரித்து தாழ்த்தப்பட்டவர்களையும் ஒதுக்கப் பட்டவர்களையும் அரவணைத்து அவர்களுக்குத் தம் தெய்வீக அன்பினால் ஆறுதலும் மனச்சாந்தியும் அளித்ததைப்பற்றியும் சொன்னார். தத்துவம் என்ற நோக்கிலும், வாழ்க்கைப் பிரச்சினைகளை அணுகும் பகுத்தறிவு நோக்கிலும், ஆராய்ந்தால் கிறிஸ்தவ மதம் அவளுடைய கூர்த்த அறிவுக்குத் திருப்தி அளிக்காது என்பதை அவர் அறிவார்.

ஆனால் ஓர் அம்சத்தில் அது மற்ற மதங்களினின்றும் முற்றிலும் வேறுபட்டது. வாழ்க்கையில் துன்பமுற்றோர்க்கும் துர்ப்பாக்கியமடைந்தோர்க்கும் ஆறுதலளிக்கும் ஒரு தனிச் செய்தி கொண்டதாக இருந்தது. இப்பிறவியிலும், நாம் அறியாத முற்பிறவிகளிலும் செய்த பாவங்களின் விளைவாகவே துர்ப்பாக்கியங்கள் நிகழ்கின்றன என்றும், அவற்றைத் தவிர்க்கவே முடியாததால் காரண காரியத்தைக் கணக்குச் செய்தும், விதியே என்று அவற்றைப் பொறுமையுடன் சகிப்பதையும் தவிர வேறுவழியே இல்லை என்றும், கருணையற்று கிறிஸ்தவ மதம் சொல்வதில்லை. அது அளிக்கும் செய்தி ஆறுதலும் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தர வல்லது.

'துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதல் அடைவார்கள்.'

'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்... உங்கள் இருதயம் சந்தோஷப்படும். உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடமிருந்து எடுத்துப்போட மாட்டான்.'

'இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனித குமாரன் உலகத்திற்கு வந்திருக்கிறார்.'

நான் அவைகளுக்கு ஜீவனுண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.

இந்த வசனங்களின் கருத்தை விளக்கிச் சொல்லி கிறிஸ்து இந்தப் பூமியில் நடத்திய மாசற்ற மலர் போன்ற வாழ்க்கை யைப்பற்றியும், அவ்வாழ்க்கை பரப்பிய திவ்விய மணத்தைப் பற்றியும், அவரது எல்லையற்ற கருணையையும், அவர் துன்புற்ற மனிதகுலத்திடம் காட்டிய பரிவையும் உணர்ச்சியுடன் எடுத்துக் கூறினார்.

இந்தப் புதிய செய்தி, நொந்து நலிந்துபோயிருந்த அவள் இதயத்தை ஈர்த்தது. வாழ்வின் இன்னல்களைப் புரிந்து கொண்டு அன்பாலும், தியாகத்தாலும் அவர்களை மீட்டுக் கொண்ட துன்புறும் கடவுள் அவளைக் கவர்ந்தார். கிறிஸ்துவின் வாழ்க்கைதான் அவள் கற்பனையை மிகவும் கவர்ந்தது. கிறிஸ்து கடவுளா என்னும் பிரச்சினையையும் கிறிஸ்து மதக் கோட்பாடுகளைப்பற்றியும் லிட்டில்டன் வாதங்களைக் கிளப்பவில்லை. ஆனால் கிறிஸ்தவ இந்து மதங்களிடையே உள்ள ஒரு வேறுபாட்டை நன்கு எடுத்துக் காண்பித்தார். கிறிஸ்தவக் கோட்பாட்டின்படி கடவுள் மனித குலத்தின் தந்தை என்றும், அவர் பார்வையில் எல்லா மனிதரும் சகோதரர்களே என்றும் பணக்காரர் ஏழைகள், பலசாலி பலவீனன் என்று பாகுபாடு இல்லை என்றும் சொன்னார். ஆனால் இந்து மதமோ ஒரு மனிதனின் தரத்தையும் அவன் முக்திக்கு அருகாமையில் இருப்பதையும் இல்லாததையும் அவன் பிறவி நிர்ணயிப்பதாகக் கொள்கிறதால் வலியவர் எளியவரை வாட்டுவதற்கு வசதியாக இருக்கிறது என்றும் சொன்னார். சாதி முறையினால் ஏற்படக்கூடிய அநீதிகளை அவர் இதற்கு முன்னாலும் அடிக்கடி அவளிடம் விவாதித்திருந்தார். அதனால் தான் சாரதா சமைத்ததைச் சாப்பிடும்படியாக அவள் மனம் பக்குவம் அடைந்திருந்தது. நடைமுறையில் இந்து மதம் சாதிச் சார்புள்ளதாகவும், எதேச்சாதிகார முறையில் இயங்குவதாகவும், கிறிஸ்தவ மதம் ஜனநாயக முறையில் இயங்குவதாகவும் அவர் பிரித்துச் சொன்னபோது, கிறிஸ்தவ மதத்தின்மீது அவள் ஆர்வம் காட்ட ஆரம்பித்தாள். உலகில் பாவமும் அக்கிரமமும் மலிந்த போது கடவுள் அவதாரமாக வந்து மக்களை இரட்சிக்கிறார் என்பது இந்து மதத்துக்குப் புதுமையான கருத்தல்ல. ஆகவே வலது கன்னத்தில் அறைந்தவனுக்கு இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டு என்று உபதேசம் செய்து, அதே பணிவையும்

தாழ்மையையும் செயலிலும் காட்டி, தம் உயிரையும் பிறருக்காக ஈந்த ஒருவர், கருணைக்கடலான கடவுளின் அவதாரமாக இருக்க முடியாதா என்று எடுத்துக் காண்பித்தார்.

இவ்வாறாகக் கிறிஸ்தவத்தின் கருத்துக்களை அவள் சிறிது சிறிதாக அறிந்த பிறகு அவள் இன்னும் கடவுளிடம் நெருங்கி வந்து மனச்சாந்தி பெறுவதற்காக ஜெபம் செய்யுமாறு கற்பித்தார். கிளாவிருந்தா இதுகாறும் வெளிப்படையாகவும் ஒழுங்காகவும் ஜெபம் செய்ததில்லை. ஆனால் அவள் துக்கபாரத்தால் அழுந்தி வேதனையுற்ற சமயங்களில் அவள் மனம் அவளையு மறியாமல் தன்னைப்படைத்த ஆண்டவனிடம் உதவியையும் பலத்தையும் வேண்டிக்கொண்டதுண்டு. அதனால் ஏதாவது விசேஷ பலனோ மன அமைதியும் அடைந்ததாக அவள் உணர்ந்ததில்லை.

ஆனால் இப்பொழுது லிட்டில்டன் ஆலோசனையின்படி- சில சமயங்களில் அவருடன் சேர்ந்தும் ஆண்டவனின் துணையையும் சக்தியையும் வேண்டி ஜெபித்தாள். காலையில் எழுந்தவுடனும் இரவு படுக்கச் செல்லும் முன்பும் ஜெபித்தாள். ஜெபமானது ஒரு சில மனநிலைகளில் தான் சாத்தியப்படும். சிலர் இயல்புக்கு ஜெபம் செய்ய வரவே வராது. ஆனால் உண்மையான பக்தியுடன் ஜெபித்தால், அந்தப் பக்தனின் மனத்தில் விளையும் அற்புதமான உணர்ச்சிக்கு ஈடு இணையே கிடையாது. கிளாவிருந்தாவும் அந்தப் பக்தி உணர்வை வெகு விரைவிலேயே அனுபவித்தாள். ஒவ்வொரு தடவை ஜெபித்த பிறகும் அவள் மனம் இதுவரை அனுபவித்தறிந்திராத ஒரு சாந்தமும் ஆத்ம திருப்தியும் அடைந்தது. உள்ளம் இலேசாக இருப்பதையும் உணர்ந்தாள். அவள் உள்ளத்தில் லிட்டில்டனிடம் நன்றியுணர்ச்சி பெருகியது. அவள் அறிந்த கிறிஸ்தவர் அவர் ஒருவர்தான். அவரது உத்தம வாழ்க்கையை நேரிலேயே கண்டு வந்தாள். தன்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்கு ஆரவாரமின்றிச் செய்வது, பிறர் ஆபத்தில் இருக்கும்போது உயிரையும் துச்சமாக மதித்து உதவி செய்யத் தயாராய் இருப்பது, படாடோபமில்லாமல் தகுதியான பேர்களுக்குத் தர்மம் செய்வது, நேர்மையுடன் வாழ்வது, தோல்வி கண்டபோது தெய்வ சித்தமென்று பணிந்து மனமகிழ்ச்சியுடன் அவற்றை ஏற்றுக் கொள்வதுபோன்ற பண்புகளை, அவள் அவரிடம் கவனித்து வியந்தாள். அவளுடைய புதிய இலட்சியங்களின் மாதிரி புருஷனாக அவரை மதித்தாள். அவர் தீரனாகவும் சாதுவாகவும் அவளுக்குத் தோன்றினார். பரங்கிகளை பொதுவாக வெறுத்த அவளுடைய பாட்டனார் கூட லிட்டில்டனிடம் மரியாதை கொண்டிருந்ததையும் நினைத்துக்கொண்டாள்.

இந்து மதக் கொள்கைகளை நம்புகிறவர்களிடையேயும் அவற்றை கைக்கொள்ளுகிறவர்களிடையேயும் அவள் இப்படிப் பட்ட ஒரு மனிதனைக் கண்டிருக்கவில்லை. கண்ணியமான வைதிகமான இந்துக்கள் என்று அழைக்கப்படுகிறவர்களில் குறைந்தது ஒரு டஜன் பேர்களாவது சரியான போக்கிரிகள், மனித குலத்துக்கே அவமானம் ஏற்படுத்தக்கூடியவர்கள் என்பதை அவள் அறிவாள். அவளுடைய சொந்த மைத்துனர் அமாத்யா இதுவரை கௌரவமான நம்பிக்கைக்குகந்த மந்திரியும், பிரமுகர்களில் ஒருவரும் அல்லவா? அரசர் தனிப்பட்ட முறையில் அவரிடம் அதிருப்தி கொண்டதால் அவரை வேலைநீக்கம் செய்தாரே தவிர, அவர் கிளாவிருந்தாவைக் கொலை செய்ய முயற்சித்ததற்காக அல்ல என்பதும் அவளுக்குத் தெரியும். அவள் எண்ணப்போங்கு இந்த வழியில் சென்றதாலும், லிட்டில்டனோடு தினமும் பேசிவந்ததினாலும், நாளடைவில் அவளுக்குத் தன் மதத்தின்மீது பற்றுக் குறைந்து கிறிஸ்தவ மத நம்பிக்கைகளில் நாட்டம் உண்டாயிற்று. அவளைப் பொறுத்தவரையில் பாவ உணர்ச்சியால் கிளர்ச்சியடைதல் அல்லது செய்து பழகிவிட்ட வெல்ல முயற்சி செய்தல் என்பதெல்லாம் இல்லை. அவளுக்கு ஒரு பாவத்தை விரோதமாகத்தான் பலர் குற்றம் செய்திருந்தனரே தவிர அவள் அதிகமாகச் செய்ததில்லை. தினமும் கடவுளை நெருங்கி ஜெபித்து வந்ததால் மனத்தில் ஓர் அலாதி சந்தோஷமும் அமைதியும் உண்டாயிற்று. சில வாரங்களுக்கு முன்னால் மாதவனிடம் சொல்லியதுபோல பிறருக்குத் தொண்டு செய்யவேண்டும் என்றும், அறிவு பூர்வமாக ஆர்வம் கொண்டாள். தன் மனத்தில் ஏற்பட்ட இந்த மாற்றங்களினால் அவள் பிரமிப்பு அடையவில்லை. அவள் பாதுகாப்பாளன் அவளுக்குத் துணையாக இருக்கவும், புதிய மதத்தின் தத்துவத்தை அவர் படிப்படியாகச் சொல்லக் கேட்டுவருவதும் அவள் அறிவுக்கும் உணர்ச்சிக்கும் மிக இனிமையாகவும் இதமாகவும் இருந்தது. அவள் பாட்டனாரைத் தவிர்த்து அவள் வேறு எந்த மனிதர் மீதும் அவள் இத்தனை நன்றியும் வியப்பும் பிரியமும் கொண்டதில்லை. ஒரு மூத்த சகோதரனைப் போல் அவர்மீது சார்புகொள்ளத் தொடங்கினாள். அவர் அவளிடம் காட்டிய பரிவு, ஆதுரம், மென்மையில் அவள் சுகம் கண்டாள். சூரியனை எதிர்பார்த்திருக்கும் தாமரையைப் போல் அவள், அவரையே நோக்கினாள்.

**லிட்டில்டன் சொன்ன கதை**

எந்நாளும் ஒன்றுபோல் அமைதியும் மகிழ்ச்சியுமாய் இருக்கவில்லை.

வழக்கில் ஜெயித்துவிட்டாள். மலையூரின் உடைமையும் அவள் கணவர் இறந்ததிலிருந்து அவ்வூரிலிருந்து வந்த வருமானமுமாகச் சேர்ந்திருந்த சிறிது தொகையும் அவளுக்குக் கிடைத்தது. இதுவரை லிட்டில்டனிடமிருந்து தன் செலவுக்காகப் பெற்றுக்கொண்டிருந்த தொகையையும் கட்டாயப்படுத்தி அவரிடம் கொடுத்துவிட்டாள். லிட்டில்டன் விளையாட்டாக, அப்படியானால் இனி அவளிடம் இலவசமாக சமஸ்கிருதம் கற்றுக்கொள்ள முடியாதென்றும், அதற்குப் பதிலாகத் தாம் அவளுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுக்கப் போவதாகவும் சொன்னார். அவளும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டாள். ஆகவே அவர்கள் ஒருவருக்கொருவர் ஆசானாக இருந்ததும் அல்லாமல், முன்னைவிட அதிக நேரம் பழகவும் செய்தார்கள்.

பாட்டனாரின் கடைசி விருப்பமான அறப்பணிகள் நிறுவுவதைக் கவனிப்பதில் சில மாதங்கள் கழிந்தன. அந்த வேலைகளில் லிட்டில்டன் அவளுக்கு உற்சாகத்துடன் உதவி செய்தார். வழிப்போக்கர்களும், களைப்படைந்தவர்களும் சாதி பேதமின்றி தங்கி இலவச உணவு பெறும்படி ஒரு சத்திரத்தையும், நூற்றெட்டுப்பேர் தங்கிச் சாப்பிட்டுப் படிக்கும் ஒரு சமஸ்கிருத பாடசாலையையும் நிறுவினாள். குடி தண்ணீர் வசதி இல்லாத பல இடங்களில் கிணறுகள் தோண்ட உதவினாள். இவைகளை நிர்வகித்து மேற்பார்வை செய்ய, அவளும் லிட்டில்டன் உள்பட ஐந்துபேர் கொண்ட ஒரு குழுவும் உருவாகியது. அந்தக் குழுவின்

மேற்பார்வையிலேயே மாதாந்திர வருமானமாக அவளுக்கும் ஒரு சிறு தொகை ஒதுக்கப்பட்டது.

இந்த வேலைகள் எல்லாம் முடிந்த பின்னும் அவள் மனதில் ஏதோ ஒரு குழப்பம் இருந்துகொண்டே இருந்தது. அறப்பணி நிர்வாகத்தைத் தானே நேர்முகமாக நடத்தவேண்டும் என்று அவள் நினைத்திருந்தாள். ஆனால் பல காரணங்களை முன்னிட்டு அது உசிதமாக இல்லாததால் குழுவிடம் ஒப்படைத்துவிட்டாள்.

சாரதாவின் பேச்சிலிருந்து தான் லிட்டில்டனின் காம் பௌண்டில் வசித்து வருவது ஊர் வம்புக்கு ஆதாரமாக இருக்கிறது என்பதை அறிந்துகொண்டாள். அவளுக்கே தன் நிலைமை சற்று அசம்பாவி தமாகத்தான் தோன்றியது.

தஞ்சையிலுள்ள கிறிஸ்தவக் குடும்பங்களின் ஆத்மிகக் காரியங்களில் ஆர்வம் காட்டினாள். அவர்கள் மட்டும் அவளை சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டவளாகக் கருதாமல் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அந்தக் குடும்பங்கள் மிகச் சிலவே இருந்தன. எனவே அவளுக்குப் பணி செய்யும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் கிடைக்கவில்லை. மனதில் ஒரு தெளிவில்லாத வெறுமை உணர்ச்சியும், பெயர் சொல்லமுடியாத ஒரு கலக்கமும் இருந்துகொண்டே இருந்தது. மிகவும் கவலைப்படும் வேளைகளில் ஊக்கமாக ஜெபித்து தற்காலிகமாக நிம்மதியும் அடைந்தாள். என்றாலும் மனதிலிருந்து வெறுமையுணர்ச்சி நீங்கவில்லை.

அறப்பணி நிர்வாகத்தில் நேர்முகமாகப் பங்குகொண்டால் அல்லது அயலூர்களுக்குப் பயணம் சென்றால் மனநிம்மதி கிடைக்குமோ என்றுகூட எண்ண ஆரம்பித்தாள். ஆனால் படிப்பதிலும் பேசுவதிலும் லிட்டில்டனோடு தினமும் செலவிட்ட சில மணி நேரங்கள் மிக இனிமையாக, ஆறுதலாக இருந்ததால் அவற்றை அவளால் எளிதில் உதறிவிட முடியவில்லை. எனவே அந்த இடத்தைவிட்டுச் செல்லும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டாள். அந்த இனிமைக்குக் காரணம் அவரிடமிருந்து தான் அறிவொளியும் ஆத்மிக ஒளியும் பெறுவதால் ஏற்படும் இன்பம் மாத்திரமல்ல என்பதையும் உணரத் தொடங்கினாள். இதுவரை அவரைத் தன் குருவாக நினைத்து மனக்கிடக்கைகளை தாராளமாகச் சொல்லிவந்திருந்தபோதும், புதிதாக முளைத்த இந்த மனச் சஞ்சலத்தை, பெயர் சொல்லமுடியாத தாகத்தை அவளால் அவரிடம் சொல்லமுடியவில்லை. அது வெட்கத்தினாலா? அப்படியானால் ஏன் அவள் அவரிடம் வெட்கப்படவேண்டும் என்று அவளுக்குப் புரியவில்லை. அவரிடம் இதை மறைத்துவிடவேண்டும் என்று மாத்திரம் புரிந்தது.

அவள் இதுவரை அவரைப்பற்றி அவரிடம் ஒன்றுமே கேட்டதில்லை. அவரும் சொன்னதில்லை. தஞ்சாவூருக்கு நியமிக்கப்பட்ட கும்பினி அதிகாரி என்று மாத்திரமே தெரியும். தன் உயிரை இருமுறை காப்பாற்றியவர், தான் அறிந்த ஆண் பெண்களில் சிறந்தவர். நல்ல பண்புகள் கொண்டவர் என்று மட்டுமே அவரைப்பற்றி மதிப்பிட்டு வைத்திருந்தாள்.

லிட்டில்டன் அவள் நெஞ்சில் ஏற்பட்ட இந்தச் சிறு சலனத்தையும் உடனே உணர்ந்துகொண்டுவிட்டார். அவருக்கும் அது மகிழ்ச்சியே. அவள் உள்ளத்தில் பதிந்த இந்த அன்பின் விதை முளைத்து வளர்ந்து ஆழமாய் வேரூன்றவேண்டும். அப்பொழுதுதான் எந்தப் புயலுக்கும் ஈடுகொடுக்கும் உறுதியான அடிமரத்துடன் கப்பும் கவருமாய்த் தழைத்து இலையும் பூவும் பழமுமாய்ச் செழிக்கும் என்று ஆர்வமுடன் காத்திருந்தார். ஓர் இளம் தாய் தன் தலைப் பிள்ளையைப் பேணுவதுபோல எல்லையில்லா மகிழ்ச்சியுடன் அவர் அதைப் பாதுகாத்து வந்தார். ஆனால் இந்த மரக் கன்றின் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று அவருக்கும் பயங்களும் சந்தேகங்களும் எழாமல் இல்லை.

ஒருநாள் மாலை அவர்கள் வழக்கம்போல் படித்துக்கொண்டிருந்தார்கள். பாடத்தில் வந்த ஒரு விஷயத்தைத் தொடர்ந்து வாழ்க்கையில் துன்பம், தெய்வசித்தத்தின் மர்மம் என்பவைகளைப்பற்றி பேச்சு திரும்பிற்று.

‘சில சமயங்களில் எல்லாமே புதிராக இருக்கிறது. குருடனைப்போலத் தடவித் தடவி ஒவ்வோர் அடியிலும் தடுமாறி விழுகிறோம். கடவுள் உலகத்தை ஏன் இவ்வளவு இருண்டதாகச் செய்திருக்கிறார்? இன்னும் சிறிது வெளிச்சம் உள்ளதாக அமைத்திருக்கக் கூடாதா?’ என்றாள் கிளாவிருந்தா.

அவர் பரிவு மிகுந்த மெல்லிய குரலில், ‘அது நாம் அவரைச் சரியான முறையில் தேடுவதில் தான் இருக்கிறது. தேடும்போது அவர் ஒளி நம்மீது பிரகாசிக்கிறது. கடவுளை நம்பி நன்மை செய் என்பது கிறிஸ்தவர்களுக்குப் பொன்வாக்கு. நமது கடமையை நாம் சரிவரச் செய்து வந்தோமானால் கடவுளே அடுத்து நாம் செல்லவேண்டிய வழியைக் காட்டுகிறார். இதையும்விட நமக்கு வேண்டுவது வேறு என்ன?’

‘அடுத்து நடப்பதைப் பற்றியோ அல்லது முடிவைப்பற்றியோ நாம் ஏன் அநாவசியமாகக் கவலைப்படவேண்டும்? கடவுளின் திருவுளத்துக்குப் பொறுமையுடன் பணிந்து, அவர் ஆசிகளை மகிழ்ச்சியோடும் நன்றியோடும் ஏற்றுக்கொண்டு, அவரைச் சார்ந்து, அன்பு செய்யும் உள்ளம் விலைமதிக்கமுடியாத கருவூலத்தைப் போன்றது. அடடா, என்ன இது? ஏன் அழுகிறாய்? என் கண்ணே! உன் கண்ணீரைப் பார்க்கும்போது என்னால் தாங்கமுடியவில்லை. ஏன் அழுகிறாய்? உன் வருத்தம் என்ன என்று என்னிடம் மனம் திறந்து சொல்லமாட்டாயா?’ என்றார்.

அவள் சிரமத்துடன் தன்னை அடக்கிக்கொண்டு கண்ணீரைத் துடைத்தாள். உணர்ச்சி மிகுதியால் அவள் குரல் கரகரத்தது. ‘எனக்கே என்னைச் சரிவரப் புரிந்துகொள்ளமுடிய வில்லை. சில வாரங்களாகவே இப்படித்தான் மகிழ்ச்சி இல்லாமல் இருக்கிறேன். வர வரத்தாங்கவே முடியவில்லை. ஜெபித்தால் கூட நிம்மதி பெறமுடியாத பாவியாகிவிட்டேன். ஐயோ, நான் ஏன்தான் பிறந்தேனோ?’ என்று மீண்டும் கண்ணீர் உகுக்கத் தொடங்கினாள்.

லிட்டில்டன் தம்மையும் அறியாமல் மேசைமீது கிடந்த அவள் கையின்மேல் தமது கையை வைத்து மிகுந்த பரிவுடன் ‘அழாதே, உன் கண்ணில் நீர் வடிவதைக் கண்டால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுகிறது என்பதை நீ அறிந்தால் நிச்சயம் இப்படி அழமாட்டாய். நான் இப்பொழுது உனக்கு ஒரு கதை சொல்லப்போகிறேன்.

**தொடரும் ...**



# பிறமத சமுதாய மக்களுடன் நமது உறவு?

ஜே.ரமேஷ்*
நற்செய்தித் திரைப்பட இயக்குநர்

நியாயசாஸ்திரி ஒருவன் இயேசு கிறிஸ்துவிடம், எனக்குப் பிறன் யார் என்று கேட்டபோது, கிறிஸ்து அவனுக்கு ஒரு கேள்வியைத்தான் பதிலாகச் சொன்னார்! நீ யாருக்குப் பிறனாக இருக்கிறாய் என்று கேட்கும் விதமாக ஒரு நல்ல சமாரியனின் கதையினைச் சொல்லி, குற்றுயிராய் காயமுற்றிருந்தவனுக்கு எவன் பிறனாயிருந்தான் என்ற கேள்வியினையும் கேட்டு, நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்! சகமனிதருடனான நமது உறவு எவ்விதம் உள்ளது? எனக்குப் பிறன் யார் என்பதைவிட நான் யாருக்குப் பிறனாய் இருக்கிறேன் என்ற சிந்தனை நம்மில் எழுகிறதா? நித்திய ஜீவனைப் பெற்றவர்கள் என்று மார்தட்டிக்கொள்ளும் நாம், மரணத்திற்குப் பாத்திரராக, காயமுற்றிருக்கும் பிறசமுதாய மக்கள் மேல் இரக்கம் செய்கிற சமாரியச் சுவிசேஷகனாக உள்ளேனா?

லூக்கா 10:33-35 வழியில், கண்டு, மனதுருகி, எண்ணெய்யை வார்த்து, காயம்கட்டி, சுயவாகனத்தில் ஏற்றி, சத்திரத்தில் சேர்த்து, அவனுடன் இராத்தங்கி, நேரத்தையும் பணத்தையும் செலவிட்டு, பராமரிக்க ஆளையும் வைத்து, திரும்ப வந்து விசாரித்து, மேற்கொண்டு ஆன செலவினை கொடுத்துவிடும் மனப்பாங்கினைக் கொண்டவனே 'பிறன்' என்பதை விளங்கிக்கொள்ள வேண்டிய கிறித்தவ மாண்பு இன்று அரிதாய் உள்ளது! எனக்குப் பிறன் யார் என்பதல்ல, நான் யாருக்குப் பிறனாக உள்ளேன் என்பதே கிறித்தவம். கிறித்தவம் மதம் அல்ல. மதத்தில் உள்ளவர் பிறனை நேசிப்பதும், பிறனாய் வாழ்வதும் கடினமே!

சமஸ்கிருதச் சொல்லான **'சுவிசேஷம்'** என்பதன் பொருள் என்ன? நல்ல, சுவிசேஷம்: செய்தி. நல்ல செய்தி என்பதே தமிழ்ச் சொல்லான நற்செய்தி. முதன்முதலில் சொல்லப்பட்ட நற்செய்தி எங்கு, யாருக்கு, யாரால் அறிவிக்கப்பட்டது? கிறிஸ்துவின் பிறப்பினை அறியாத, ஒதுக்கப்பட்ட, தீண்டத்தகாத மேய்ப்பருக்குத்தானே? ஆனால் நம் மதம் என்ன செய்துகொண்டிருக்கிறது, பிறனாய் வாழாமல், எவரும் நம்மைப் பிறனாய் எண்ணாத வண்ணம் நம்மை அழைத்துச் செல்கிறது?

### மதம் என்றால் என்ன? ஆன்மீகம் என்றால் என்ன?

மதம் என்பது மனிதன் கண்டுபிடித்தது என்ற கருத்து சற்று விளங்கிக் கொள்ளக் கடினமாகவே இருக்கும். ஆன்மீகத்திற்கும் மதத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. நீரானது பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. தண்ணீர், பானி, வெள்ளம், நீலு, நீர், ஜலம், வாட்டர் இப்படிப் பல மொழிகளில் சொல்லப்படுகிறது. பெயர்கள் தாகத்தைத் தீர்க்காது. தண்ணீரைக் குடித்தாக வேண்டும். கங்கை, காவிரி, யமுனை என்றாலும், கூவம் என்றாலும் தண்ணீர் தான். எல்லாத் தண்ணீரையும் நாம் குடித்து விடுவதில்லை, அப்படிக் குடிக்கவும் முடியாது. தண்ணீரைப் பலவகையாக அழைப்பதற்குப் பெயர்தான் மதங்கள். எந்தத் தண்ணீர் நம் தாகத்தைத் தீர்க்கிறதோ அது ஆன்மீகம். கிறித்தவம் ஆத்தும தாகத்தைப் போக்கி ஆன்மீகத்தைப் போதிக்கிறது. ஜீவத்தண்ணீர் நானே என்று உரைத்த ஒரே கடவுள் இயேசு கிறிஸ்து.

ஒரு கடவுளை தனது கடவுளாக ஏற்றுக் கொள்வது அவரவரது தனிப்பட்ட உணர்வு, விருப்பம், அனுபவம், ஏன் உரிமை என்றும் சொல்ல முடியும். ஒருவர் ஒரு கடவுளை அறிந்து கொண்டு அவரை தனது கடவுளாகக் கொள்வது மதமாற்றம் அல்ல, அது மனமாற்றம் ஆகும். அதனை ஆன்மீக மாற்றம் என்றும் சொல்லலாம். ஆன்மீகம் என்பது கடவுளுடன் நமக்கு ஏற்படுகின்ற உறவு.

கிறிஸ்தவ மதம் என்று ஒன்று இல்லை. அப்படி ஒன்று இருந்ததுமில்லை! கிறித்தவம் மதமா?

கிறித்தவம் என்பது மதம் அல்ல. எல்லா மதங்களின் கோட்பாட்டிற்கும் ஆங்கில மொழியில் 'யிஸம்' என்று அந்த மதத்தின் பெயரோடு இணைத்துச் சொல்லப்படுகிறது. Hinduism, Buddism, Jainism, Islamism, Zoroastrianism என்று எல்லா சமயங்களுக்கும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் கிறித்தவத்தில் மட்டுமே Christianism என்று சொல்லப்படுவதில்லை, மாறாக Christianity என்று அழைக்கப்படுகிறது என்பது சிந்திக்கப்படத்தக்கது.

இதன் பொருள் யாதெனில், இது கோட்பாடல்ல குணாதிசயம். கிறித்தவம் நெறியாள்கை அல்ல, நெறியில் நிற்பது. இந்த இறைநெறி பற்றிக் கொள்வதற்கல்ல, அனுபவமாய் பெற்றுக் கொள்வது. கிரியைகளில் ஏற்றுக்

கொண்டு ஒன்றிணைந்து வாழ்வது. சனாதனம் என்பதும் இதைத்தான் குறிக்கிறது.. ஆனால்.. சாதியின் பிடியில்..! இந்திய மண்ணிலே இந்தக் கிறித்தவத்தின் காலம் என்ன?

“இவ்வையகத்திலே மிகத் தூய கிறித்தவர்களைத் தாமஸ் என்னும் சீடர் பிரசாரகர் ஏசுநாதரின் மறைவிற்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவில் நிலைநாட்டினர். ஆங்கிலோ ஸாக்ஸன் இனத்தார் தம் உடல்களில் வண்ணம் பூசிக்கொண்டு குகைகளில் உறைந்துவந்த நாகரிகமற்ற மனிதர்களாய் இருந்து வந்தபோது, இந்தியாவிலிருந்த கிறித்தவர் முப்பது இலட்சம் பேராவர்” சுவாமி விவேகானந்தர். ஞானதீபம், முதற்பதிப்பு சுடர் 1 பக்கம் 409. (இப்புத்தகங்களில் இருந்த கிறித்தவக் குறிப்புகள் மற்றும் கிறிஸ்துவைப் பற்றிய செய்திகள் தற்போது நீக்கப்பட்டு ‘விவேகானந்தரின் வீரமொழிகள்’ என்ற புதிய பெயரில் வெளியிடப்பட்டு வருகிறது).

முதலாம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்த மதங்கள் இரண்டே என்பது வரலாற்று உண்மை. பௌத்த மதமும், சமண மதமுமே கிறிஸ்துவுக்கு முன்பு தோன்றிய அவ்விரண்டு மதங்களாகும். இதன் அடிப்படையில் காணும்போது, விவேகானந்தரின் கூற்றுப்படி நாம் கணித்துப் பார்க்க வேண்டிய வரலற்றுப்பூர்வமான செய்தி யாதெனில், தோமாவினால் இந்தியாவில் அறிவிக்கப்பட்ட முதல் கடவுள் இயேசு கிறிஸ்து.! ஏனென்றால், கிமுவிலிருந்த இரண்டு மதங்களுமே கடவுள் கோட்பாடில்லாத மதங்கள் ஆகும் (Agnostic and Aethistic). முதலாம் நூற்றாண்டில் இருந்த கிறித்தவர்களின் எண்ணிக்கை முப்பது இலட்சம் பேரென்றால் அது சிறுபான்மையில்லை, பெரும்பான்மை!

ஆதியில் முப்பது இலட்சம் பேராய் இருந்த கிறித்தவர்கள் இன்று சிறுபான்மையினராய் இருப்பதற்குக் காரணம் சாதீயம் தான். மைனாரிட்டி என்னும் முத்திரை குத்தியது கிறித்தவர்களாகிய நாம் தான். வருணாசிரமத்தை ஒழிக்க சட்டங்களை இயற்றிய ஐரோப்பியர்கள் தாம் விதைத்த ஐரோப்பியக் கிறித்தவத்தை ஏற்றுக் கொண்ட நாம், அவர்கள் சாவுமணி அடித்த சாதீயத்தையும் ஏற்றுக் கொண்டவர்களாக மாறிப்போனோம். சந்ததி சந்ததியாக அந்த சாதி வேற்றுமை என்னும் கொடிய நஞ்சை வழிவழியாய் விதைத்தும் வந்தோம். சாதீயம் கிறித்தவத்திற்கு எதிராய் நிற்கும் சத்துரு. சத்ருவையும் நேசி என்று இயேசு கிறிஸ்து சொன்னது இந்தச் சத்ருவை அல்ல!

நாம் யாருக்குப் பிறனாக உள்ளோம்? பிற இனத்தவருக்குத் தானே? இன்றையக் காலக்கட்டத்தில் நம் பூமியில் பிற இனத்தவர் யார்? கிறிஸ்துவை அறியாதவர், அறிய விரும்பாதவர், அறிய முற்படாதவர், அறிந்தும் அறியாதவர், தம்மை மாற்றிக்கொள்ளாதவர் மற்றும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்!

பிறஇனத்தவர் அநேகமாய் இறைவனைக் குறித்து அறிவிப்பது என்ன? எல்லா கடவுளும் ஒன்றுதான்! அதற்கு நாம் அளிக்க வேண்டிய பதிலினை அறியவேண்டியது மிகவும் அறிதும் அவசியமுமாகிறது. எல்லா கடவுளும் ஒன்றுதான் என்று சொல்பவருக்கு, நாம் அளிக்க வேண்டிய பதில், **‘எல்லா கடவுளும் ஒன்றல்ல, எல்லாருக்கும் ஒரு கடவுள்’** என்பதே!

மேலும் முக்கியமான ஒன்றை நாம் அறிந்திடல் அவசியமாகிறது? நமக்கு பிறஇனத்தவர் நமக்கு யாராக இருக்கிறார் என்று விவிலியம் சொல்கிறது? எபேசியர் 3:3 (பொதுமொழிபெயர்ப்பு 3:6) நற்செய்தியின் வழியாக, பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அம்மறைபொருள்.

ஒரே சரீரத்திற்குள்ளானவர்களும், உடன் பங்காளிகளுமாயிருக்கிற நம் பிறஇனத்தவருடனான நமது உறவு எவ்விதம் உள்ளது? அவர்களுடைய வழிபாடு நம்பிக்கையைக் குறித்த நமது வரவேற்பு மற்றும் வெளிப்பாடுகள் எவ்விதமாக உள்ளன? உன்னைப் போல் பிறரை நேசி என்ற கிறிஸ்துவின் கற்பனை நமது வாழ்வில் கடைபிடிக்கப்படுகிறதா? வெறுப்பு, கசப்பு, கோபம் இன்றி அவர்களையும் நம் உடன் பங்காளிகளாக ஏற்றுக்கொள்ள முடிகிறதா?

பிறசமூகத்துடனான உறவும், அவர்களுக்கு சத்தியத்தை சொல்லும் கடமையில் நமது செயலாக்கம் எவ்விதமிருத்தல் வேண்டும் என்பதை அறிந்து கொள்ள, நாம் பவுலைப் படித்தே ஆகவேண்டும். அவர் அழகாய் படம்பிடித்துக் காட்டும், அத்தேனேயில் மார்ஸ் மேடை அனுபவம் நமக்குப் பாடமாயுள்ளது! அப்போஸ்தலர் நடபடிகள் (திருத்தூதர் பணிகள்) 17:16-34

அப்போஸ்தலர் 17:16-17, அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு தன் ஆவியிலே மிகுந்த வைராக்கியம் அடைந்து யூதரோடும், பக்தி உள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும், தினந்தோறும் உரையாடினார் (சம்பாஷணை பண்ணினார்). தன் ஆவியிலே வைராக்கியமடைந்தார். அதோடு நில்லாது அந்த வைராக்கியம் ஜெப ஆலயத்தில் யூதருடனும், பக்தி உள்ளவர்களுடனும், சந்தைவெளியில் எதிர்பட்டவர்களுடனும் சம்பாஷணைப் பண்ணும்படி வைத்தது. விக்கிரகங்களைப் பார்த்த மாத்திரத்தில் பவுலடிகளாருக்கு எரிச்சல் வரவில்லை, கோபம் வரவில்லை, வெறுப்பு வரவில்லை ஆனால் ஆவியில் வைராக்கியம் வந்தது. நமக்கும் அப்படிப்பட்ட வைராக்கியம் தான் வரவேண்டும்.

ஆனால் நமக்கோ பெரும்பாலும் கசப்பும் எரிச்சலுமே வருகின்றது. ஆங்கில மொழிபெயர்ப்பில் ‘stirred in him’ என்று விவரிக்கிறதைப் பார்க்கலாம். பொது மொழிபெயர்ப்பில் **‘மனம் கலங்கினார்’** என்று குறிப்பிடப்படுகிறது. மனம் கலங்க வேண்டும்.! ஆவியில் வைராக்கியம் அடைய வேண்டும்.! அதுவே புறவினத்தவருக்கு நற்செய்தியை அறிவிக்க, நம்மைத் தூண்டும் உந்துதலாக இருக்கும். மார்ஸ் மேடைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார் என்பது மிகப்பெரிய ஒரு நற்செய்தியின் விளைவாக நாம் காண முடிகிறது.

மார்ஸ் மேடை என்பது ஜெபஆலயம் அல்ல.

பவுலடிகளின் வழக்கமான இடமும் அல்ல. தங்களது இடத்திற்கு அழைத்துச் சென்று பேசச் சொல்வது என்பது அவரது பேச்சும் அதன் தாக்கமும் எவ்வளவு ஆர்வத்தைத் தூண்டக் கூடியதாக இருந்திருக்க வேண்டும்? இன்று அப்படிப்பட்ட வாய்ப்பும் அழைப்பும் எந்த நற்செய்தியாளருக்குக் கிடைத்திருக்கிறது? எங்கள் இடத்திற்கு வந்து பேசு, நாங்கள் கேட்கிறோம் என்ற அரிதான அழைப்பு எத்தனை பேருக்கு வாய்க்கிறது? உன்னுடைய கடவுளைப் பற்றி எங்களது மேடையில் வந்து பேசு என்று அழைக்கும் தருணம் ஏன் நமக்குக் கிடைக்காமல் போனது? எந்த இடத்தில் நாம் தவறுகிறோம் என்று யோசிக்கும் தருணமும் இதுதான். மார்ஸ் மேடைகள் நமக்கு கிடைக்காமல் போனதா? இல்லை..! சவாலாக அழைக்காமல் போனாலும் சமயமும் வாய்ப்பும் நமக்குக் கிடைக்காமல் இல்லை. நமக்கிது வியப்பாய் தோன்றலாம்? எப்பொழுது நாம் அந்த வாய்ப்பைப் பெற்றோம் என்று யோசிக்கத் தோன்றும்.

எத்தனை முறை நமது புறவினத்துச் சொந்தம் அல்லது நட்புகளிடமிருந்து திருமணத்திற்காக அழைப்பிதழை பெறும்போது, திருமணம் கோவிலில், வரவேற்பு ஏதேனும் ஓட்டல் அல்லது மண்டபத்தில் என்று கண்டால், கோவிலுக்குச் செல்லாமல் வரவேற்புக்கு செல்லும் எண்ணம் வந்திருப்பதை சற்று யோசித்துப் பார்ப்போம். ஏன் அப்படிச் செய்தோம்? எது நம்மைத் தடுத்தது? என்ன விதமான அசௌகரியத்தை நாம் அதில் உணர்ந்தோம்? அவர்களது வழிபாட்டுத்தலத்திற்குச் செல்லக் கூடாது என்ற சிந்தனை நமக்குள் எப்படி விதைக்கப்பட்டது? அதை விதைத்த வேதாந்தி யார்? நமது மூதாதையரா அல்லது பெற்றோரா? ஆவிக்குரிய நண்பர்களா இல்லை நமது ஆலயத்தின் போதகரா? யாராக இருந்தாலும் சரி.! நாம் அந்தச் சமயத்தில் ஒரு மார்ஸ் மேடையேறும் வாய்ப்பினை இழந்து விட்டோம் என்பதை மறந்துவிடக் கூடாது.!

இப்படிப் பல சமயங்களில் பிறசமயத்தவரின் பண்டிகை அல்லது சடங்குச் சம்பிரதாய நம்பிக்கைகளுடன் கலந்த வைபவங்களுக்கு நாம் அழைக்கப்படுகையில் தட்டிக் கழித்திருந்தால், அப்பொழுதும் நாம் ஒரு மார்ஸ் மேடையின் அனுபவத்தை இழந்துள்ளோம் என்பதை அறிய வேண்டும். நமது அன்றாட வாழ்வில் நமது புறவினத்தவர் சொல்லும் மிகப்பெரிய குற்றச்சாட்டினை நாம் அறியாதவர்கள் அல்ல. **'நீங்க கூப்பிட்டா நாங்க உங்க சர்ச்சுக்கு வருவோம், ஆனா நாங்க கூப்பிட்டா நீங்க எங்க கோவிலுக்கு வரமாட்டீங்க'**. இதற்கு என்ன பதிலை நம்மால் பகிரங்கமாகச் சொல்ல முடியும் அல்லது சொல்லியிருப்போம்? அவர்கள் விழாக்கள் அல்லது நல்ல நிகழ்வுகளுக்கு அவர்கள் நம்மை அழைக்குமிடம், அவர்கள் வழிபடும் கோவிலாக இருக்கலாம், ஆனால் அவர்கள் நம்மை அழைப்பது வாழ்த்தவும் ஆசீர்வதிக்கவும் தான். நம்மைப் பகைக்கிறவர்களையே ஆசீர்வதிக்கும்படிக் கற்றுக்கொடுத்த ஒரே கடவுளைப் பெற்றிருக்கிறோம் என்பதை அந்த நேரங்களில் மறந்து விடுகிறோம்.

அப்போஸ்தலர் 17:20, நூதனமான காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப் பண்ணுகிறாய். அவைகளின் கருத்து இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம்'. என்று சொல்லும் அளவிற்கு நமது உரையாடல் இல்லை அல்லது அப்படிப்பட்ட நூதன காரியங்கள் இருப்பது நமக்குத் தெரியவில்லை அல்லது நமக்குப் பேச விருப்பமில்லை.

யோவான் 17:20 என்ன சொல்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம். கிறிஸ்து யாருக்காக என்ன வேண்டுதலைப் பிதாவிடம் செய்கிறார் என்பதை நினைவூட்டிப் பார்ப்போம். நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதும் அல்லாமல், இவர்களுடைய வார்த்தையினைக் கேட்டு என்மேல் விசுவாசம் கொள்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஒன்றை நாம் மனதில் கொள்ள வேண்டும். அப்போஸ்தலர் 28:28, இவ்விதம் சொல்கிறது. தேவனுடைய இரட்சிப்பு புறவினத்தவருக்கு அனுப்பப் பட்டிருக்கிறதென்றும் அவர்கள் அதற்குச் செவி கொடுப்பார்கள் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக் கடவது. இந்தச் சத்தியத்தை விசுவாசித்துச் சென்றால் தயக்கமின்றிச் சத்தியத்தைச் சொல்லும் தைரியம், நூதனமாய்ச் சொல்லவேண்டிய ஆர்வம், நமக்குத் தானாய் வரும்.

புறவினத்தவர் நமக்கு பங்காளிகள் என்பதை வலியுறுத்திய பவுலடிகளின் நற்செய்தியைக் கேட்டவர்கள், அவர் **'அந்நிய தேவதைகளை அறிவிக்கிறதாகக் காண்கிறது'** என்றார்கள். ஆனால் அதற்குக் காரணம் என்ன என்பதும் விளக்கப்படுவதை (அப்போஸ்தலர் 17:18) நாம் அதே வசனத்தில் காண்கிறோம். இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினால் அப்படிச் சொன்னார்கள். இன்றைய காலத்தில் நம்மையும் அவ்விதமே சொல்வதை நாம் அறியாமல் இல்லை. இயேசு கிறிஸ்துவை வெள்ளைக்காரக் கடவுள் (European God) என்று சொல்வதும், வெளிநாட்டுக் கடவுள் (foreign God) என்று சொல்வதும் வழக்கமாக உள்ளன. இதற்குக் காரணம் என்ன? இயேசு கிறிஸ்து ஆங்கிலம் பேசியவர் அல்ல. அவர் பேசியது எபிரேய மொழியின் கிளை மொழியான அரமேயம். அவர் உடையும் கூட அங்கியென்றே நமது வேதம் குறிப்பிடுகிறது. அவர் பிறந்தது ஆசிய கண்டத்தில் உள்ள பாலஸ்தீனம். அவரது 12 சீடர்களும் ஆசியர்கள். பின்பு அவருக்கு எப்படி இந்தப் பெயர் வந்தது என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

நமது நடை உடை மற்றும் ஆராதனை வழிபாட்டு முறைகள்எல்லாம்ஐரோப்பியக்கிறித்தவர்களின்பின்னணியில் உள்ளதால், இந்தப் பெயரை நாம் அவருக்கு வாங்கிக் கொடுத்து விட்டோம். நமது ஆலயக் கட்டடங்களிலிருந்து, நமது வாத்தியக் கருவிகள் முதல், அணிந்து கொள்கிற ஐரோப்பிய உடையும், திருமண நிகழ்வின் சடங்கு மற்றும் ஆடை அணிகலன்கள் வரை, வெள்ளைக்காரரின் கலாச்சாரத்தை நாம் கடைபிடித்து வருவதால், இந்தக் காரியங்கள் எதிலும் துளியும் சம்பந்தமில்லாத இயேசு கிறிஸ்துவை, புறவினத்தவர் அந்நியக் கடவுளாக பார்க்கும் வண்ணம் மாற்றிய பெருமை நம்மையே சாரும். நமது பெயர்கள், நமது வீட்டுப் பெயர்கள், நாம் ஒருவரையொருவர் வாழ்த்தி வரவேற்கும் வார்த்தைகள்,

இவைகள் எல்லாம் எபிரேய, கிரேக்க மொழிகள், அல்லது ஆங்கில மொழியில் உள்ளதால், நமது கடவுளை அவர்கள் வெளிநாட்டுக் கடவுளாக அழைக்க ஆரம்பித்து விட்டார்கள் என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போம். ஒன்று நாம் யூதக் கலாச்சார அடிப்படையில் நமது உடை மற்றும் வழிபாட்டு முறைமையை வழக்கப்படுத்தி இருக்க வேண்டும். இல்லை, நமது மண்ணான இந்தியக் கலாச்சாரம் அல்லது மரபின் முறையில் கையாள வேண்டும். இரண்டிற்குமே சம்பந்தமில்லாத, இடையில் வந்த ஐரோப்பியக் கலாச்சார அடிப்படையில் அனைத்தும் மாறிப்போனது, ஏன் எதற்கு என்பதை நாம் சிந்திப்பதே இல்லை.

வணக்கம் நமஸ்தே நமஸ்காரம் என்று வரவேற்காமல், ஆங்கிலமே பேசத் தெரியாதவர் கூட 'Praise the Lord' என்றல்லவா வாழ்த்தி வணங்கி வரவேற்கிறோம். நம்முடைய பேச்சு, பழக்கம், மற்றும் புறத்தோற்றம் தானே, கிறிஸ்துவை வெளிநாட்டுக் கடவுளாக நம் தேசத்து மக்களையே நினைக்க வைத்து விட்டது? 'பெராக்கா', 'பெத்தேல்', என்று நம் வீடுகளுக்கு பெயர்களையும், 'ஜேக்கப்', 'ஹெப்சி', 'பீட்டர்', 'பியூலா', என்றல்லவா நமக்குப் பெயர்களை வைத்துக் கொள்கிறோம்? கிறித்தவப் பெயர் என்று வைக்காவிட்டால் பாவம் என்றல்லவா கிறித்தவர் பலரும் நினைக்கின்றனர். இயேசுவிற்கு ஞானஸ்நானம் கொடுத்த யோவான் ஸ்நானகன் அவருக்குப் புதிய பெயரையோ அவரது பெயரையோ மாற்றி வைக்கவில்லை. ஆதித் திருச்சபையின் காலத்திலும் அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் கொடுக்கையில் யாருக்கும் பெயரை மாற்றியதாக வேதம் குறிப்பிடவில்லை. கிறித்தவப் பெயர் தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நம் வேதமும் சொல்லவில்லை, நமது கடவுளும் சொல்லவில்லை. மனிதன் முகத்தைப் பார்க்கிறான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றே கர்த்தர் சொன்னதாக வேதவசனம் சொல்கிறது (1சாமுவேல் 16:7). பெயர் என்பது நமது முகத்திற்குத் தான். முகத்தை மறைத்துக் கொண்டால் நாம் யார் என்பதை யாராலும் அறிய முடியாது. பெயர் என்பது அழைப்பதற்கும் அடையாளப்படுத்திக் குறிப்பிடுவதற்குமே ஒழிய வேறொன்றிற்கும் அல்ல. முதலில் நாம் நினைக்கிற வண்ணம் கிறித்தவப் பெயர் என்று ஒன்று இல்லை. மல்லிகா என்பது இந்துப் பெயர், அதனை ஜாஸ்மின் என்று வைத்தால் கிறித்தவப் பெயராக ஆகிவிடவில்லையா? இளவரசன் என்றால் இந்துப் பெயர், அதையே பிரின்ஸ் என்று வைத்தால் கிறித்தவப் பெயரா? பிறமத சமுதாய மக்களுடன் நமது உறவு ஐக்கியப்பட முதலில் நாம் அவர்களுக்கு அந்நியராக புலப்படாமல் இருப்பது மிகமிக அவசியம்.

கடவுள் யார்? அதை அறிவதற்கு நமக்குத் தேவை பகுத்தறிவு. பகுத்தறிவு என்பதன் பெயர் தான் ஆன்மீக அறிவு அல்லது ஏழாம் அறிவு. தாத்தா காலம் முதல், பரம்பரை பரம்பரையாய், தாய் தந்தை சொல்லிக் கொடுத்தது என்ற பதில்கள் தான் மூடநம்பிக்கைகட்கு வித்திட்டு வருகிறது. தாத்தா பயன்படுத்திய மாட்டுவண்டி, பாட்டி பயன்படுத்திய ஆட்டுரல், அம்மிக்கல், அப்பா பயன்படுத்திய சைக்கிள், அம்மா உடுத்தியிருந்த சேலை இவைகளையெல்லாம் தூக்கியெறியும் துணிவு வந்தாலும் தவறான மூடநம்பிக்கைகளையும் இறை நம்பிக்கையையும் மட்டும் அப்படியே கடைபிடிக்கும் அந்தக் கீழ்ப்படிதலின் காரணம் என்ன என்ற கேள்விக்கு இன்றைய சந்ததிகள் மௌனம்தான் சாதிக்கின்றனர். அவர்களை **மார்ஸ் மேடையில் சந்திப்பது நமது கடமை. மார்ஸ் மேடையை உருவாக்குவது நம் திறமை. மார்ஸ் மேடையின் நடுவில் நின்று பவுலடிகள் தாம் கண்ட பலிபீடத்தைக் குறித்த வியாக்கியானம் என்ன? அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருந்த பலிபீடத்தைக் கண்டேன், அவரையே உங்களுக்கு அறிவிக்க வந்தேன் என்று சொன்னதன் உள்ளார்ந்த சத்தியம் என்ன?**

பவுலடிகளார் வாழ்ந்த காலக்கட்டத்தில், அத்தேனே பட்டணத்தில் பெரிய பஞ்சமும் கொடிய கொள்ளை நோயும் வந்தது. அப்போது மக்கள் அதிலிருந்து விடுதலை பெறுவதற்கு, அவர்கள் வழிபட்ட எல்லாத் தேவதைகளுக்கும் தேவர்களுக்கும் பலி செலுத்திப் பார்த்தனர். பஞ்சமோ கொள்ளை நோயோ நீங்கவில்லை. அந்தச் சமயத்தில் தான் அங்கிருந்த ஞானிகள் ஒன்று கூடி, இந்தப் பஞ்சமும் கொள்ளை நோயையையும் நீக்குவதற்கு வல்லமை கொண்ட, ஏதோ ஒரு கடவுள் இருக்கிறார், அவர் பெயர் தான் நமக்குத் அறியப்படவில்லை, ஆகையால் அவருக்கும் ஒரு பலியைச் செலுத்திப் பார்த்து விடுவோம் என்று கலந்து ஆலோசித்தனர்.

அப்பொழுது, அவருக்கு எப்படி பலிசெலுத்துவது? நமக்குத்தான் அவர் யாரென்று தெரியவில்லையே! என்று குழப்பத்தில் ஆழ்ந்தபோது, ஒரு புதிய யோசனையாய் ஒரு தீர்மானத்திற்கு வந்தனர். ஒரு பலிபீடத்தை உண்டாக்கி அதின் மேல் அறியப்படாத தேவனுக்கு என்று எழுதிவைத்து, அதில் பலியைச் செலுத்திப் பார்ப்போம் என்று நிதானித்துப் பலியைச் செலுத்தினர். உடனே பஞ்சமும் கொள்ளை நோயும் நீங்கப்பெற்றது. அந்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்டு பவுலடிகள், நீங்கள் கண்ட கொள்ளைநோயும் பஞ்சமும் நீங்கச் செய்த கடவுள் வேறு யாரும் இல்லை அவர் தான் எங்கள் மேசியா, தம்மைத்தாமே பலியாக்கிய இயேசு கிறிஸ்து என்று விளக்க, **நீங்கள் அறியப்படாமல் இருக்கிற அவரைத் தான் நான் அறிவிக்க வந்தேன்** என்று சத்தியத்தை அவர்கள் அறியாமையின் வெளிப்பாட்டினை வைத்தே அறிவித்த அற்புதமான பிரசங்கம்தான் இந்த மார்ஸ் மேடையின் நற்செய்திப் போதனையாகும்.

**நற்செய்தி அறிவிக்க அவர்களின் ஆராதனைக்குரியவைகளையே வைத்து, அவர்கள் அறியக் கூடாமல் இருந்த சத்தியத்தை அவர்களது பலிபீடத்தின் பின்னணியை வைத்து, மிகப் பெரியப் பஞ்சம் மற்றும் கொள்ளை நோயைத் தீர்க்கக் கூடிய ஒரு கடவுள் இருப்பார் என்றால் அது என்னுடைய ஆண்டவராகத்தான் இருக்க முடியும் என்று அசைக்க முடியாத விசுவாசத்தை அடித்தளமாக வைத்து, வாய்த்த சமயத்தில் ஆய்ந்த செம்பொருளை வைத்து, விசுவாசத்துடன் தைரியத்தைக் கூட்டி வைத்து, நற்செய்தியைப் பவுலடிகள் மார்ஸ் மேடையில் வைத்தது நமக்கெல்லாம் ஒரு திருஷ்டாந்தம்.**

அப்போஸ்தலர் 17:28 அவருக்குள் நாம் பிழைக்கிறோம் அசைகிறோம் இருக்கிறோம். அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படியே நாமும் நமது இந்திய இலக்கியங்களில் இறைமைந்தன் இயேசு கிறிஸ்துவின் கற்பனையும் அவரது கோட்பாடுகளும் மறைந்திருப்பதைச் சொல்லியும் சத்தியத்தை சொல்ல முடியும். உங்கள் புலவர்கள் கூட இவ்விதமாய் பாடியிருக்கிறார்கள் என்று சொல்வதற்கு அவைகளை அறிந்திருக்கிறோமா?

மாலும் மனிதன், மலரோனும் தான் மனிதன்,
ஆலமுண்ட கண்டன் அவன் மனிதன்,
சீலமுடன் உற்று உணர்ந்த உகந்த பெரியார்
கற்றும் அறிந்தார் இல்லை காண்

**- ஔவையார்**

திருமாலும் மனிதன், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மனும் மனிதன், ஆலகால விஷத்தை உண்ட நீலகண்டனான சிவனும் மனிதன், இதனை ஒழுக்கக் குணங்கள் கொண்ட, கற்றறிந்த பெரியோர்கள் சொல்லிக் கொடுத்தும், அதனை அறிந்து உணர ஒருவரும் இல்லை என்பதை அறி, என்பதாய் விளக்கும் **-ஔவையார் பாடல்**.

விண்ணின்று இழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்று தாளைத் தலைக்காவல் மேல்வைத்து
உண்ணின்று உருக்கியோர் ஒப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத்தானே

**-திருமூலர்**

விண்ணின்று இழிந்து:விண்ணிலிருந்து இறங்கி (அவதாரம்)

வினைக்கு ஈடாய்: பாவத்திற்கு பரிகாரமாய் ஈடுசெய்தல்

மெய்கொள்ளுதல்: ஊனுடம்பைக் கொடுத்து

தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து: குளிர்ந்த தனது பாதத்தை உலகில் வைத்து தன்னையே மீட்புப் பொருளாய் தந்து

உண்ணின்று உருக்கியொரு:நம் உள்நின்று (இருதயத்தில்) உருக்கி

ஒப்பிலா ஆனந்தம்: நீடு வாழ்வு (நித்திய ஜீவன்)

கண்ணின்று காட்டிக் களிம்பறுத்தானே: கண்ணில் இன்று (புதிய வெளிச்சத்தை அல்லது பரிசுத்த ஆவியை) காண்பித்து பாவத்தை ஒழித்தார் (களிம்பறுத்தார்)

மானுடராய் இந்த உலகில் அவதரித்தக் கடவுளாகிய இயேசு கிறிஸ்து லௌகீக வாழ்வில் தன்னைத் துய்த்துக் கொள்ளாமல் வாழ்ந்தார் என்பது சரித்திரம் மட்டுமல்ல சத்தியமும் கூட. யார் எனக்குத் தாய்? யார் எனக்கு சகோதரர்? என்று கிறிஸ்து கேட்டதை வேதாகமத்தில் வாசிக்க முடிகிறது.

கடவுளுக்குப் பெண்டேது பிள்ளையேது
காமகுண லீலை முதலாவதேது
கடவுளுக்கு பகடிசீட்டு தாயமேது
காடுகட்கு வேட்டையாடித் திரிவதேது
கடவுளுக்கு காமிகளின் தொழிலேயில்லை
காருண்யத் தொழில் ஒன்றே கடவுள் பாரம்

**-கொங்கண மகரிஷிச் சித்தர்**

கடவுளுக்கு மனைவி மக்கள் என்பது கிடையாது. காமகுணம் கொண்டு லீலைகள் செய்வது போன்றவை கடவுளுக்குக் கிடையாது. கடவுளுக்கு சூதாட்டமான சீட்டு தாயம் போன்ற கேளிக்கை விளையாடல் என்பதும் கிடையாது. கடவுள் காடுகளில் வேட்டையாடிக் கொண்டு திரிபவரில்லை. கருணை அல்லது கிருபை பொழிகின்ற தொழில் மட்டுமே கடவுளுக்கு பாரமாக இருக்கும் என்பதாய் விளக்குகின்ற **-சித்தர் பாடல்.**

மண்ணிடை இயேசு மறுபடி வருவார் என்பது சத்தியமே புண்கள் இருக்கும் வரையில் மருந்து தேவை நித்தியமே விண்ணரசமையும் உலகம் எல்லாம் இதுதான் தத்துவமே எண்ணும் எழுத்தும் எல்லாம் அவரே! இயேசுவை நம்புவமே!

**- இயேசு காவியம், கவியரசர் கண்ணதாசன்**

இந்த மண்ணுக்கு இயேசு கிறிஸ்து திரும்பவும் வருவார் என்பது சத்தியமான உண்மையென்றும், புண்ணென்று ஒன்று வந்தால் அதற்கு மருந்தென்று ஒன்று வேண்டும் என்று பாவத்திற்கு மன்னிப்பின் அவசியத்தையும், கடவுளின் இராஜ்ஜியம் உலகத்தில் எங்கெல்லாம் உளதோ அங்கெல்லாம் இதுதான் தத்துவம் என்றும், அவரையே விசுவாசிப்போமே என்று கவிஞர் ஆழமான சத்தியம் விளக்கிப் பாடுகின்றார். எண் எழுத்து எல்லாம் இயேசுவே என்று எழுதியமையால், அகரமுதல் எழுத்தெல்லாம் ஆதிபகவன் என்றுப் பாடிய வள்ளுவரையும் மிஞ்சிப் பாடுகிறார்

**- கண்ணதாசன்.**

**வார்த்தையான கடவுள் கிறிஸ்து!**

கிறித்தவத்தில் கடவுளின் வார்த்தை மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். பரிசுத்த வேதாகமம் அல்லது பைபிள் என்று அழைக்கப்படும் புத்தகமானது வெறும் ஒரு புனித நூலாகவோ அல்லது கிறித்தவ இலக்கியமாகவோ மட்டும் கருதப்படுவது இல்லை. பிறசமயத்தவர் தங்கள் வீடுகளில் தங்களது புனித நூலாகக் கருதுகிற புத்தகத்தை வைத்திருக்கிறார்களா? அல்லது எத்தனை பேர் தங்களுக்கென்று ஒரு புனிதநூலை வைத்திருக்கிறார்கள் என்றால் மிகவும் சொற்பமாகவே இருக்கும் என்பது, அவர்களே அறிந்த ஒன்று என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. ஆனால் பிறசமயத்தவர் போலல்லாமல், ஒவ்வொரு கிறித்தவரின் வீட்டிலும் ஒரு வேதாகமம் நிச்சயமாக இருக்கும். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட வேதப்புத்தகம் என்றும் கொண்டிருப்பர். இதனைக் குறித்து நாம் அவர்களுடன் சம்பாஷித்திருப்போமா?

**அர்த்தமுள்ள சடங்காச்சாரங்கள்!**

கிறித்தவத்தில் ஏற்படுகின்ற எந்த நிகழ்வுகளாக இருந்தாலும் அர்த்தம் விளங்குவதாகவும், கடவுளுக்கு நன்றி செலுத்துவதாகவும், கடவுளின் நாமம் மகிமைப்படுவதற்காகவும், கடவுளின் இராஜ்யம் விஸ்தரிக்கப்படுவதற்காகவும், கடவுளின் வார்த்தை விதைக்கப்படுவதற்காகவும் மட்டுமே கொண்டாடப்படும். திருமண நிகழ்வுகளில் கலாச்சார மற்றும் பாரம்பரியக் காரியங்களைத் தவிர்த்து, ஆன்மீக வழிமுறைகள் அனைவருக்கும் புரிதலை மேற்கொள்ளும் வண்ணமாகவே

இருக்கும்.

இறை மன்றாட்டு (ஜெபம்), திருமண ஒப்பந்தம், துதிப்பாடல்கள், முதலான அனைத்துமே எவருக்கும் புரிகிற வண்ணமே இருக்கும். ஆலய வழிபாட்டில், ஆராதனையில், மக்களை ஆராதனையில், மக்களை வழிநடத்தும் ஆயர்கள் (குருமார்கள்) பேசுவது எப்படி அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் உள்ளதோ அப்படியே எல்லா சுகதுக்க நிகழ்வுகளிலும் காணும், காரண காரியங்கள் எளிதாய் புரிகிற விதத்திலேயே நடத்தப்படும் என்பது கிறித்தவத்தின் சிறப்பு. மேலும் பிறசமய மக்களுடன் நாம் பேசவேண்டியவை!

கடவுளிடம் பேச தனி மொழி தேவையில்லை! கடவுளுடன் பேசுவதற்கு என்று பிரத்யேகமான மொழியென்று ஒன்று கிறித்தவத்தில் இல்லை. கடவுளுடன் பேசுவதற்கும், கடவுளின் ஆசியைப் பெறுவதற்கும் பக்தர்கள் நேரிடையாகவே கடவுளை அணுகித் தொடர்பு கொண்டு பேசலாம்.

இயேசு கிறிஸ்துவை உலகத்தின் எந்த மூலையிலும், எந்தக் கிறித்தவரும், 'இயேசுவே என்னைக் காப்பாத்துறா' என்று ஜெபிப்பதில்லை. அவன் இவன் என்ற ஏகவசனத்தில் இயேசுவை எந்த கிறிஸ்தவனும் அழைப்பதில்லை. கடவுளைப் பிரார்த்திக்கும் போதாகிலும் அல்லது அன்பின் மிகுதியால் அழைத்தாலும், உயர்திணை அல்லாமல் செய்யப்படுகின்ற வேண்டுதல் விண்ணப்பங்கள் கிறித்தவத்தில் இல்லை. கடவுளுக்கு கனத்தை வழங்காமல் எந்த ஜெபமும், எந்த துதியும் கிறித்தவத்தில் ஏறெடுக்கப்படுவதில்லை. கிறித்தவர்களாக உலகத்தில் அறியப்படுகிற கத்தோலிக்க மதத்தினர் கூட, ஆத்தாடி மேரியம்மா சோறு ஆக்கி வச்சேன் வாடியம்மா என்று உரிமை கொண்டாடிப் பாடுவதில்லை.

கடவுள் ஒருவரே! அவர் உண்மையுள்ள உயிருள்ள ஒரே கடவுளாயிருக்க வேண்டும். எல்லா கடவுளும் ஒன்றே என்பதற்கு மாறாக, எல்லாருக்கும் **ஒரே கடவுள் என்பதே கிறித்தவம்.** எல்லாம் வல்லவர் (Omnipotent), எங்கும் நிறைந்தவர் (Ommipresent), எல்லாம் அறிந்தவர் (Omniscient), என்கிற கடவுளுக்கு, வெவ்வேறு உருவம், வெவ்வேறு கோயில், வெவ்வேறு பெயர் என்பது கிறித்தவத்தில் கிடையாது. கிறித்தவத்தில் ஆலயம் என்பது சபை என்றும் அழைக்கப்படுவது, கட்டிடத்தைக் குறிப்பிடாமல் மக்களையே குறிப்பிடுகிறது. கிறித்தவர்களுக்கு கோயில் என்பது கடவுளை சந்திக்கும் இடம் அல்ல, அது கடவுளை ஒன்று கூடி துதித்து ஆராதித்து தியானிக்கும் இடமாகும்.

கடவுளை அணுகுவதற்கு சத்தியத்தை அறிந்தாலே போதும். சத்தியமே கடவுள். சத்தியம் என்பது ஒன்றாகத் தான் இருக்க முடியும். மெய்ஞானம் எனப்படுவதும் சத்தியமே. சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்பது இயேசு கிறிஸ்துவின் வாக்கு. நமது இந்திய ரூபாய் நோட்டுக்களிலும் சத்தியமேவ ஜெயதே' (வாய்மையே வெல்லும்) என்றே பொறிக்கப்பட்டுள்ளது. யார் அந்த சத்தியம் என்பது ஆன்மீகக் கண்களினாலே அறியமுடியுமே தவிர, மதமெனும் கண்ணினாலோ, ஆன்மீகத்தை மதமெனும் கண்ணாடியணிந்து பார்த்தாலோ அறியமுடியாது.

அஸத்தோமா சத்கமய (சத்தியமல்லாததிலிருந்து சத்தியத்திற்குள் என்னை வழிநடத்தும்) தமஸோமா ஜோதிர்கமய (இருளிலிருந்து என்னை ஒளிக்குள் வழிநடத்தும்) ஒளிக்குள் வழிநடத்தும்) ம்ருத்யோர்மா அம்ருதம் கமய (மரணத்திலிருந்து என்னை ஜீவனுக்குள் வழிநடத்தும்)

இந்த சமஸ்கிருத ஜெபத்தில் எந்தக் கடவுளின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. இந்த ஜெபத்திற்கு பதிலளித்தவர் இயேசு கிறிஸ்து ஒருவரே என்பது வேதாகமத்தின் வழியே நாம் அறியமுடிகிறது. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் (யோவான் 14:16 யோவான் 8:12), என்னையல்லாமல் எவனும் பிதாவிடத்தில் வரான் என்றார். அவரை அறிந்து கொள்வதன் வழியே சுவிசேஷம் (நற்செய்தி). கிறிஸ்துவே கடவுள் என்பதை அறிந்து ஏற்றுக் கொள்வதே இரட்சிப்பு. ரோமர் 10:9-10 அந்த இரட்சிப்பை அடைவதற்கு எந்தவிதமான பரிகாரமும் கிறித்தவத்தில் இல்லை. கிறித்தவத்தில் நேர்த்திக் கடனில்லை! கடவுளுக்காக தன்னை வருத்திக் கொள்ளும் வழக்கம் கிறித்தவத்தில் இல்லை. இதை நீ செய்தால் நீ கேட்டதை நான் தருகிறேன் என்று இயேசு சொன்னதில்லை. தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும் என்றே அவர் உரைத்ததை விவிலியம் விவரிக்கிறது.

நீற்றைப் புனைந்தென்ன நீராடிப் போயென்ன நீ மனமே
மாற்றிப் பிறக்க வகையறிந்தாய் இல்லை மாமறை நூல்
ஏற்றிக் கிடக்கும் ஏழு கோடி மந்திரம் என்ன கண்டாய்
ஆற்றில் கிடந்தும் துறையறியாமல் அலைகின்றையே

-பட்டினத்தார் பாடல்

நெற்றியிலே திருநீற்றை அணிந்து கொண்டு, குளத்தில் மூழ்கியெழுந்து நீராடிப்பார்க்கின்ற மனத்தையுடைய மனிதனே, உன்னால் இந்த உலகின் வாழ்விலே மீண்டும் புது சிருஷ்டியாய் மாறிப் புதிதாய் பிறக்கும் வழியினை அறிந்திருக்கிறாயா? (2கொரிந்தியர் 5:17). வேதம் என்றும், புனித நூல்கள் என்றும், அதன் பிரதிபலிப்புகளாக விளங்கும் ஏழுகோடி மந்திரங்களையும் உச்சரித்துப் பார்க்கின்றாய். ஆனால் இப்பொழுது மூழ்கிக் கிடக்கும் உலகவாழ்வெனும் ஆற்றிலிருந்து வெளியேறும் கரையினை (வழியினை) அறியாமல் அலைந்து கொண்டிருக்கிறாயே. (திரு:கடவுள் நீறு:நீற்றப்படுதல்- அழித்துக் கொள்ளுதல். கடவுள் தன்னைத்தானே நமது பாவங்களுக்காக பலியாக்கிக் கொள்வதற்கு திருநீறு என்றும் அர்த்தம் பொருந்தும்

- சாது செல்லப்பா

இந்தியர் இந்துக்களே! இயேசு இந்த உலகத்தில் மனிதராக அவதரிப்பதற்கு முன்பு நமது நாட்டை இந்து தேசம் என்றே அழைத்து வந்திருந்தனர் என்பதை திருவிவிலியத்தின் மூலம் நாம் அறியலாம் எஸ்தர் 1:1. இந்த எஸ்தர் புத்தகத்திற்கு கொடுக்கப்பட்ட முழு பெயர் எஸ்தரின் சரித்திரம். அகாஸ்வேரு என்கிற பெர்சிய மன்னன் இந்து தேசத்தை ஆண்டு வந்ததைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இந்து என்பது இடத்தின் பெயர்,

அது மதத்தின் பெயர் அல்ல என்பது அனைவரும் அறிந்த ஒரு சரித்திரப்பூர்வமான உண்மை.

இந்து என்பது சிந்து என்ற வார்த்தையின் திரிபு. பெர்சியர்களின் மொழியில் ச' என்கிற ஒலியில்லாததினால் 'ச' எனும் எழுத்தை 'ஹ' என்றே உச்சரித்தனர். சந்தோஷம் என்பதை அவர்கள் ஹந்தோஹம் என்றே உச்சரிப்பார்கள். சிந்து என்பதை ஹிந்து என்று சொல்லி வந்ததால் ஏற்பட்டப் பெயரே ஹிந்து. இமயமலையிலிருந்து சிந்திச் சிந்தி வருகின்ற பனிநீர் நதியாய் மாறுவதால் அதற்கு சிந்து நதி என்றுப் பெயர் வந்தது. வட இந்தியாவில் தன்னை ஒருவர் இந்தியன் என்று சொல்வதற்கு 'ஹமாரா ஹிந்துஸ்தான்' என்றே கூறுவார். இந்து என்கிற பாரசீகச் சொல்லும் ஸ்தான் என்கிற இரானியச் சொல்லும் சேர்ந்து சொல்லப்படுவதுதான் இந்துஸ்தான். இந்து என்றால் சிந்துக்கள் என்கிற சிந்து நதியோரமாக வாழ்கின்ற மக்கள். ஸ்தான் என்றால் (ஸ்தானம்) இடம் என்று பொருள். இந்து என்றால் இந்தியன் என்பதே சரித்திர உண்மை.

இந்தியா என்பது ஐரோப்பியர் நம்மை ஆண்டபோது ஆல் இந்தியா என்றே அழைக்கப்பட்டது. இன்று வரை நமது இந்திய வானொலியில் செய்தி வாசிக்கும்போது சொல்லப்படுகிற All India Radio என்கிற வாசகம் அதனை நமக்கு நிரூபணம் செய்யும்.

இந்தியாவில் பிறந்த அனைத்து மக்களுமே இந்துக்கள் தான். இந்து என்றால் இந்தியன் என்று அர்த்தம். நீங்கள் ஒரு இந்துவா என்று என்னைக் (ஜே ரமேஷ்) கேட்டால், ஆம் நான் ஒரு இந்து என்றே சொல்வேன். நான் ஒரு இந்து ஆனால் நான் வணங்கும் தெய்வம் கிறிஸ்து என்றும் பதிலளிப்பேன். இந்தியனாக இருப்பது வேறு பக்தனாக இருப்பது வேறு. தேசபக்தனாக நான் இந்து. ஆன்மீக பக்தனாக கிறித்தவன். இந்து என்பது இடத்தின் (தேசத்தின்) பெயரேயல்லாமல் மதத்தின் பெயர் அல்ல. ஏனென்றால், அமெரிக்க மதம், ஆஸ்திரேலிய மதம், இங்கிலாந்து மதம் என்று அழைக்கப்படும் மதங்கள் எங்கும் காணப்படவில்லை. கிறித்தவ மதம் என்ற சொல்லும் வேதாகமத்தில் இல்லை. கி.பி. அறுபதுகளில் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிய சீஷர்கள் கிறித்தவர்களாக அழைக்கப்பட்டனர் என்றே வேதாகமம் குறிப்பிடுகின்றது. முதலில் நாம் மதத்தைவிட்டு வெளியேறி வந்தாலொழிய, பிறசமயத்து அன்பர்களோடு உறவினை நம்மால் மேம்படுத்திக்கொள்ள முடியாது. மார்ஸ் மேடையை அறிந்தபின் நமக்குள் எழவேண்டிய நியாயமான கேள்விகள்..!

- சுவிசேஷத்தைக் குறித்த எனது பாரம் **என்ன?**
- நற்செய்தியைச் சொல்ல எனக்குள் உள்ள வாஞ்சை **என்ன?**
- நற்செய்தியை அறிவிப்பதில் எனது அணுகுமுறை **என்ன?**
- நற்செய்தியை அறிவிப்பதைக் குறித்து நான் அறிந்து கொண்டது **என்ன?**
- புறவினத்தைக் குறித்த எனது கடமை **என்ன?**
- நாம் அறியப்பட வேண்டிய கேள்விகள் **என்ன?**
- பவுலடிகளார் எனக்கு கற்றுக் கொடுப்பது **என்ன?**

ரோமர் 15:15 புறவினத்தவராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டுக் கடவுளுக்குப் பிரியமான பலியாகும்படிக்கு நான் கடவுளின் சுவிசேஷ ஊழியத்தை நடத்துகின்ற ஆசாரியனாயிருந்து புறவினத்தவர்களுக்கு இயேசு கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாக வேண்டியது கடவுள் எனக்களித்த கிருபை. ரோமர் 15:18 புறவினத்தவரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப் பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும் பரிசுத்த ஆவியின் பலத்தினாலும் கிறிஸ்துவானவர் நம்மைக் கொண்டு நடப்பித்தவைகளைச் (என் சாட்சிகள்) சொல்வதை அல்லாமல் வேறொன்றையும் நாம் சொல்ல வேண்டியதில்லை. கர்த்தர் பவுலிடம் சொன்னது என்ன?

அப்போஸ்தலர் 26:17-18 உன் சுயஜனத்திடமிருந்தும் அந்நிய ஜனத்தாரிடமிருந்தும் உன்னை விடுதலையாக்கி, அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினால் பாவ மன்னிப்பையும் பரிசுத்தத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக, அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுக் கடவுளிடம் திரும்பும்படிக்கு, நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு இப்பொழுது அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன்.

இந்தியா ஒரு அத்தேனே என்பதை அறிந்திருந்தால், நான் குடியிருக்கும் எல்லையை இந்தியாவாக அவர் குறித்திருப்பதால், நானும் பவுலைப் போலவே அனுப்பப் பட்டிருக்கிறேன் என்பதை உணர்ந்தே ஆக வேண்டும். நான் மார்ஸ் மேடைக்கு அழைக்கப்படுகிறேன் என்பதை புரிந்து கொள்ளவும் வேண்டும். மார்ஸ் மேடை எனக்குத் தயாராகவே உள்ளது என்பதை உணரும் பட்சத்தில் எனக்குள் எழுகின்ற ஆவியானவரின் கேள்விகள்...

நான் இன்னும் கிறித்தவர்களிடமே நற்செய்தியைப் பேசி ஆனந்தப் பட்டுக்கொண்டிருக்கிறேனா? கர்த்தர் நல்லவர் என்பதை ருசி பார்த்தவர்களிடமே பாதுகாப்பாகப் பேசி மகிழ்ந்து கொண்டிருக்கிறேனா? 'பிதாவானவர் இழுத்துக் கொள்ளா விட்டால்' என்பது கிறிஸ்துவுக்கும் தெரியும். அது தெரிந்தும் புறப்பட்டுப் போங்கள் என்று ஏன் சொன்னார்?

எசேக்கியேல் 3:18 சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில் நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான், அவன் இரத்தப் பழியையோ உன் கையிலே கேட்பேன்.

எசேக்கியேல் 3:19 நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற் போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான், நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்..!

(மேலும் விவிரமறிய 'மார்ஸ் மேடை' எனும் என்னுடைய புத்தகத்தை வாசிக்கவும் நூலைப் பெற தொடர்பு கொள்ள 9841053626)

# உறவு...ஒரு கண்ணோட்டம்

சாமுவேல் பால்ராஜ்,
சென்னை

கிறிஸ்தவர்களாகிய நமக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கொடுத்த பிரதான கட்டளைகளில் ஒன்று 'உன்னைப் போல் பிறனையும் நேசி என்பதே' பிற மதக் கோட்பாடுகளை நாம் மறுக்கலாம், வெறுக்கலாம் ஆனால் சக மனிதர்களுடன் அன்பு கூர்ந்து உறவாடுவதற்கு மதம் ஒரு தடையாகாது.

இன்றைய நிலையில், நமது உறவு பிற மத சமுதாய மக்களுடன் எப்படி உள்ளது, உறவை எப்படி வளர்க்க முடியும் என்பதை சற்று சிந்திப்போமா?

**1. சுயநலம் :** சுய நலம் என்ற உச்சாணியில் கிறித்தவர்களாகிய நாம் அமர்ந்துள்ளோம் என்று சொன்னால் மிகையாகாது. டாக்டர் ஐடா அம்மையார் தன்னை சுற்றி நடந்த நிகழ்வுகளை நாடு, மொழி, மதம் கடந்து மனித நேயத்துடன் கண்ணோக்கியதால் உருவானதுதான் வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனை. தன் சுய விருப்பங்களையும் வெறுத்து நம் மண்ணின் மாதர்கள் பால் அன்பு கூர்ந்து தன் வாழ்க்கையையே தியாகம் செய்ததால்தான் டாக்டர் ஐடா ஸ்கடர் இன்றும் மதங்களை தாண்டி மனித எண்ணங்களில் உறவாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவனவன் பிறருக்கானவைகளை நோக்க நாம் முதல் படியாக, நமது அண்டை வீட்டுக் குடும்பங்களுடன் சாதி மத பாகுபாடின்றி அன்புடன் பழகுவோம், உறவை வளர்ப்போம். அவர்களின் சுக துக்கங்களிலும் பங்கெடுப்போம். கொரோன காலத்தில், சாதி மத பாகுபாடு பார்க்காமல், மரித்தவர்களை அடக்கம் செய்வதில் இஸ்லாமிய சகோதரர்கள் செய்த உதவிகள் உன்னதமானது. நம்மில் சிலர் தங்கள் சொந்த பந்தங்களின் இறுதிச்சடங்கை நடத்த ஆளின்றி, ஏன் அடக்க ஆராதனை நடத்த ஆட்களை தேடி நின்ற கோரக் காட்சியை நேரில் கண்டேன். வருங்காலங்களில், இப்படி பட்ட கொடிய நாட்கள் நேரிடுமாயின் நாமும், திருச்சபையும் முன்னின்று சாதி மத பாகுபாடின்றி உதவிக்கரம் நீட்டுவோம். பேரிடர் காலங்களில் திருச்சபை வளாகத்தில் அடைக்கலம் தருவோம். எனவே, சுய நலத்தை நீக்கி பிறர் நலம் கண்டால் சமுதாயத்தில் நாமும் உயர்ந்திருப்போம், மற்றவர்களும் உயர்வடைவார்கள். மனித நேயம் வளரும் மனித உறவுகள் தொடரும்.

**2. குறுகிய வட்டம் :** நம் உறவு, நம் குடும்பம், நமது சபை என்ற குறுகிய வட்டத்தில் சுழன்று கொண்டிருக்கின்றது. அந்த குறுகிய வட்டத்திலும் பல பிரிவுகள், உரசல்கள். நாம் ஊழியம் கொள்ள அல்ல ஊழியம் செய்யவே அழைக்க பட்டுள்ளோம் என்பதை நினைவில் கொள்வோம். கிறித்தவர்களாகிய நாம் பல சமுதாய தொண்டுகளை தொடர்ந்து செய்து வருகின்றோம். இவைகள் மேலும் விரிவடைய வேண்டும். சமுதாயத்தில் ஒதுக்கபட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை சந்தித்து, அவர்களுடன் தொடர்ந்து உறவு கொண்டு, அவர்களின் தேவைகளை நிறைவு செய்வோம்.

நமது மிஷனரிமார்களும், முன்னோர்களும் மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்காக தங்கள் குடும்பநலன்களை தியாகம் செய்ததற்கு சரித்திரம் சாட்சியாயிருக்கிறது. நாம் அதை போற்றுகின்றோம், பெருமையும் கொள்கின்றோம், நல்லது தான். இன்றைய தலைமுறைக்கு நாம் செய்தது/செய்யப் போகிறது என்ன? நாம் புதிய கல்வி கூடங்கள், தொலை நோக்கு சமுதாய நல திட்டங்கள், மருத்துவ மனைகளை உருவாக்குவோம். நமது முன்னோர் உருவாக்கிய தொண்டு நிறுவனங்களை பாதுகாப்போம், மேம்படுத்துவோம். சபை வளாகங்களை வணிக வளாகங்களாய் மாற்றாமல் சமுதாய மறுமலர்ச்சி கூடங்களாக மாற்றிடுவோம். நாளைய தலைமுறைக்கு சரித்திரம் படைப்போம்.

அன்று மார்ட்டின் லூதர் என்பவர் சபையின் சீர்திருத்தங்களுக்காக போராடியதால் தான், பிராட்டஸ்டன்ட் திருச்சபையே உருவாகியது. வில்லியம் கேரி, ராஜா ராம்மோகன் ராய், மற்றும் பலர் தீவிரமாக எதிர்த்து குரல் எழுப்பியதால்தான் சதி, பலதார மணம், குழந்தைத் திருமணம் மற்றும் பெண் சிசுக்கொலை போன்ற பல சமூகத் தீமைகளை நிறுத்த முடிந்தது.

நாமும் சமுதாயத்தில் சக மனிதருக்கு இழைக்கபப்படும் அநீதிகளுக்காக குரல் கொடுப்போம் நமது பிற மதத்தினருடனான உறவை சீரமைப்போம்.

வேதாகமத்தில், கிறிஸ்தவர்களாகிய நாம் மனித சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பல குறிப்பிடபட்டுள்ளது, முக்கியமான சில கடமைகளை மட்டும் உங்கள் சிந்தனைக்கு வைத்து இந்த செய்தியை முடித்துக் கொள்கின்றேன்.

1. நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள். (1 தெசலோனிக்கேயர் 5:11)
2. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். கலாத்தியர் 6:2
3. நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். பேதுரு 4:10
4. திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவன் விசாரிக்கிறதும், உலகத்தால் சுத்தமான பக்தியாயிருக்கிறது. யாக்கோபு 1:27

கறைப்படாதபடிக்குத் தேவனுக்குமுன்பாக தன்னைக் மாசில்லாத மனித உறவுகளில் வெறுப்பு என்ற களையை அகற்றி, அன்பு நீர் பாய்ச்சி, பகிர்தல் உரம் ஊட்டி, பாசமலர்களாய் மண்ணில் நறுமணம் வீசிடுவோம்.

08

அத்தியாயம்

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

முனைவர்.த.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர் , திருநெல்வேலி
jansy.emmima@gmail.com
+91 73971 56808

மக்கள் அதிகளவில் கூடும் இடங்களான சந்தை, சத்திரங்கள், கோவில் வளாகம், குளத்தங்கரை, ஆற்றங்கரை போன்ற இடங்களுக்கு சென்று தேவதாசிகளாக்கப்படும் குழந்தைகளைப் பற்றின தகவல்களைச் சேகரிக்க ஏமி தம் தோழிகளோடு புறப்பட்டார்.

அன்றைய தமிழ்ச் சமூகத்தின் மிக முக்கிய வணிகமாக இருந்து வந்த இந்தக் குழந்தைகள் விற்பனை மற்றும் வாங்குதல் மக்களின் அடிப்படைப் பொருளாதார நிலையை மட்டும் சார்ந்த ஒன்றல்ல, அடித்தள மக்களின் அறியாமைகளைப் பயன்படுத்தி சமயத்தின் தார்மீகத்தை குலைத்துக் குளிர்காயும் மிக மட்டமான போக்காக இருந்தது.

ஏழை எளிய குடும்பங்களில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்காகவே காத்துக் கிடக்கும் தேவதாசிகள் மற்றும் தரகர்களின் முயற்சிகளை முதலில் முறியடித்தாக வேண்டும் அருளாயி…என்றார் ஏமி.

ஆமாம்மா….உடனே செய்தாகணும் என்றாள் அவளும்.

அந்த வேலையை நீயும் தேவாயும் தான் பொறுப்பேற்று கவனித்துக் கொள்ள வேண்டும்.

சரிம்மா, இன்று மாலையே நாங்க வடுவமலைக்கு கிழக்கே இருக்கும் குளத்துக்குடியிருப்புக்குப் போறோம். நேத்து ஆத்துல ஊற்றுத் தண்ணி எடுக்க போனபோது நம்ம ஊர் மங்கலம்மாவும் சில பொண்ணுங்களும் பேசியதை கவனித்தேன். அந்த ஊருக்கு அடிக்கடி பாறைப் கோயில்ல இருக்கும் தேவதாசிப் பெண்கள் போவாங்களாம். அங்கிருந்து திரும்பும் போது கையில் குழந்தையோடு தான் வெளியேறுவாங்களாம்.

அப்படியா…?

ஆமாம், அங்குள்ள ஆம்பளைங்க நிறையபேர் கொத்தடிமைகளா வேலக்குறிச்சி பெரிய சாதிகாரங்களுக்கு வேலை செய்றாங்களாம். அவர்களுக்கு செங்கல் சூளை வைப்பது தான் முக்கியமான வேலையாம். அந்த ஊர்காரங்களுக்கு அன்றாடம் சாப்பாட்டுக்கே திண்டாட்டம் தானாம். பெரிய ஊர் அது.

வீட்டுக்கு எட்டு, பத்து, பன்னிரெண்டுன்னு வதவதன்னு பெத்து போட்டிருப்பாங்களாம். ஆனா, அந்த ஊரில் ஆண் பிள்ளைகள்தான் அதிகம். பெண் பிள்ளைகள் அழகா பொறந்தா தேவதாசியா குடுப்பாங்களாம். அப்படி பொறக்காட்டா கள்ளிப்பால் தானாம்.

கள்ளிப்பாலா? அது எதுக்கு?

பிறந்த உடனே, காசுபெறாதுன்னு தெரிஞ்சா கள்ளிப்பால் கொடுத்து பெண் குழந்தைய கொன்னுடுவாங்களாம்.

மை காட்…. இது உண்மையா அருளாயி?

ஆமா…. பொட்டப் பிள்ளைங்க வளர்ந்து வாழ்க்கை சரியா அமையாம வேதனையோட சாவதைவிட பிறந்ததும் செத்துட்டா தொல்லையில்லைங்கிற நெனப்புதான் இதுக்கு காரணம்மா. சிங்காரமன்னு ஒரு அன்றாடகாய்ச்சிக்கு தொடர்ந்து அஞ்சி பொம்பள புள்ளைங்களாம் அதுக்கு பெறவு பிறந்த மூணு பொட்டப் புள்ளைங்கல்ல இரண்டை கொன்னாச்சாம். ஒன்றை தேவதாசியா கொடுத்துட்டாங்களாம். அந்த வீட்ல புருசனும் மாமியாரும் ஆம்பிள்ளபிள்ளை பிறக்கும் வரை குழந்தை பெற்றே ஆகணுமுன்னு பொண்டாட்டிகாரியை ஒரே கொடுமையாம். பாவம் அந்த பொண்ணு.

இதெல்லாம் என்னால நம்பவே முடியலம்மா…ஆச்சரியத்தோடு… விழித்தார் ஏமி.

நான் சின்ன வயசிலேயே இதை எங்க ஊரில் பெரியவங்க சொல்ல கேட்டிருக்கேன். ஆனா இங்க இனிதான் பார்க்க போறேன். இல்லையில்லை இனியதைக் களையப் போகிறோமுன்னு சொல்லு அருளாயி. மனசு

மிகவும் வலிக்கிறது என்ற ஏமியின் குழந்தை தனமான முகம் வேதனையால் சோர்ந்து தொங்கியது. கடவுளே... இதையெல்லாம் உன் அருள் இல்லாமல் எதுவும் என்னால் செய்ய முடியாது... என்ற வேண்டுதலோடு வெளியேற்றினார் பெருமூச்சு ஒன்றை.

இன்று இரவு பாறைக் கோயிலுக்கு நாம் போகிறோம். கிளம்புங்க....! சொல்லிவிட்டு ஆலயத்தை நோக்கி நடந்தார்.

மாலை ஐந்து மணிக்கெல்லாம் தேவாயி, அருளாயி, பொன்னம்மாள் ஏமி, நான்குபேரும் பாறைக் கோவிலை நோக்கி நடக்கத் தொடங்கினர். வெள்ளிக்கிழமை என்பதால் அக்கோவிலுக்குச் செல்லும் தெருவில் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருந்தது. அந்தத் தெருவின் தொடக்கத்தில் வலதுபுறம் பிரமாண்டமான தேர் ஒன்று மறைவு கட்டப்பட்டு நின்று கொண்டிருந்தது. ஓலை மறைப்பிற்குள் ஆங்காங்கே விலகிய இடைவெளிகளில் அதன் அழகிய கலைநுட்பம் ஏமியை கண்ணகல செய்தது. சற்று அதில் நின்று கவனித்தார்...

அம்மா, நாளை மதியம் வந்து இதை நல்லா பார்ப்போம். இப்போது இருட்டி விட்டது... என்று அவசரப் படுத்தினாள் பொன்னம்மாள்.

இந்தியர்கள் கலைநுட்பமும், மதிநுட்பமும்.. அதிக இரசனையும் உடையவர்கள். அத்தோடு மனிதத்தை கொல்லும் பழைய மரபுகளை ஏன், எதற்கு என்று எதையும் கேட்காமல் அப்படியே கடைபிடிக்கிறார்கள்... அதையும் கடவுளைக் காட்டி மக்களைக் கடைபிடிக்க வைக்கிறார்களே... அதுதான் வேதனை. இந்த தேவதாசி முறையும் அப்படிதானே என்றார்...சலிப்போடு.

பேசிக் கொண்டே நடந்தனர் கோவிலை நோக்கி. கோவிலுக்கு அருகில் பூசைக்கான பொருட்கள், பூக்கள், மாலை, தேங்காய், வெற்றிலைப் பாக்கு.. போன்றவற்றை விற்பதற்கான சிறு சிறு கடைகள் இருந்தன. அவற்றுள் பூக்கடைகளில் கூட்டம் அதிகமாக இருந்தது.

தலையில் சூடிக்கொள்ளும் பூக்கள் பெண்களின் அழகை அதிகமாக்குவதற்கு மட்டுமல்ல அவர்களது சுமங்கலித் தன்மையைக் காட்டுவதற்குமானது. பெண்கள் பூவை வாங்கி தலையில் முடிகளுக்குள் நுழைத்துக் கொண்ட பிறகுதான் பூசைப் பொருளுக்கான கடைகளுக்குச் சென்றனர். ஒவ்வொரு கடைகளின் முகப்பிலும் ஒரு சிறு மண்ணெண்ணை விளக்கும் மினுங்கி கொண்டிருந்தது. அந்தக் குறைந்த ஒளியில் கடைக்காரனின் முகமும் அதிலிருந்த பொருட்களின் அடையாளமும்தான் அடங்க முடிந்தது.

இதற்கிடையில் கணவனோடு வந்த பெண்களைத் தவிர மற்றப் பெண்கள் சேலை முந்தாவணையால் தலையையும் மறைத்து முக்காடிட்டுக் கொண்டும் சிலர் தோள்வரை சேலையை இழுத்து மூடியபடியும் ஆங்காங்கே அசைந்து கொண்டிருந்தனர். அது ஏமிகார்மைக்கேலுக்கு வசதியாக இருந்தது. வெளிநாட்டு வெள்ளைக்கார பெண்ணிற்கு இங்கு என்ன வேலை என்று யாரும் கேட்கவோ சந்தேகிக்கவோ கூடாதே. தானும் அவ்வாறே முகம் தெரியாத அளவில் முக்காடு போட்டுக்கொண்டிருந்தார்.

ஒரு பூக்கடைக்கருகில் நின்று அங்கு பேசிக் கொள்வதை கவனித்தவாறே பூ வாங்குவதை போல இரண்டு இரண்டு பேராக பிரிந்து கடைகளில் நின்றனர். ஆனால் எவ்வளவு நேரம் தான் நிற்பது. பூக்களைச் சுட்டிக் காட்டி இரண்டு முழம் பூ கேட்டாள் தேவாயி. பூக்காரி முழம் நீட்டி அளந்து கொண்டிருக்கும் போதே

சேலை நுனியில்கட்டி வைத்திருந்த பைசாக்களைப் பிரித்து எண்ணிக் கொண்டிருந்தார் ஏமி. அதைப் பார்த்ததும் அந்த நிலமையிலும் தேவாயிக்கு சிரிப்பு ததும்பியது. தன் அழகிய தோள் பையிலிருந்து ஏமி காசு எடுக்கும் அழகு நினைவில் வந்தாடியது அவளுக்கு. விலையைக் கொடுக்க நீட்டிய ஏமியின் கையை கவனித்தாள் தேவாயி ஏமியின் முழங்கையிலிருந்து விரல் நுனிகள் வரை கருப்பாக இருந்தது. அதிர்ந்து போனாள்... இது எப்படி இப்படி கருப்பானது...? ஏமியம்மை கும்மிருட்டில் நடந்து போனாலும் ஆடை மூடாப் பகுதிகள் மட்டும் வெண்ணொளியாய் மிளிருமே! இப்போது... இது எப்படி... இவ்வளவு நேரமும் தன் அருகில் நின்றது ஏமிதானா இல்லையா.... அந்த லேசான நிலவொளியில் வியப்போடு முகத்தைப் பார்த்தாள்... அந்த தேவாயி. ஆம், ஏமியே தான்.! அதற்குள் அடுத்தக் கடையில் பூ வாங்கி கொண்டிருந்த பொன்னம்மாளும் அருளாயும் தலையசைத்து ஏமியை அழைத்தனர். வரும்போது காப்பித் தூளை கரைத்து கையில் இப்படி பூசிக் கொண்டேன்.... கால் பாதங்களிலும் தான் என்று தேவாயின் வியப்பிற்கு முற்றுபுள்ளி வைத்தபடி லேசான புன்னகையோடு நகர்ந்தார் ஏமி.

இரண்டு கடைகளுக்கு அடுத்திருந்த அந்தக்கடை சற்று தனித்திருந்தது. அதன் அருகில் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் நின்று ஏதோ பேசிக் கொண்டிருப்பதும் தெரிந்தது. ஏமியும் தேவாயும் அந்தப் பூக்கடையிலிருந்து அடுத்தக் கடைக்கு சென்றனர். முகம் சேலை முகப்பால் முக்கால் அளவு மூடியிருக்க சற்று குனிந்தபடி, ஆட்கள் கண்ணில் படாதளவு சரிந்தும் மறைந்துமே நடந்தார் ஏமி. நெற்றிக்கு மேலிருந்த தனது வெண் முடிகளையும் கருப்பாக்கியிருந்தார் எவரும்

சந்தேகிக்க இயலாத அளவில்.!

அந்த மூன்று ஆட்களும் கோவில் இருந்த இடத்தை நோக்கி நடந்தனர். இப்போது அவர்கள் நின்றிருந்த அதே இடத்தில் இவர்கள் நால்வரும் வந்து நின்றனர். அம்மா, அதோ போகுதுல்ல அந்த அம்மா ஒரு தேவதாசி. வரும் புதன் தான் நல்ல நாளாம் அதனால் புதன் கிழமை காலை நான் சொன்ன .... குளத்துக்குடியிருப்புக்கு அருகில் உள்ள ஒரு சின்ன ஊரு, வடக்குமேல் குளம். அங்க மூணு பெண்பிள்ளைங்க விற்கப்பட இருக்கதாகவும் எப்படியாவது கோயிலுக்குக் கூட்டிட்டு வந்திட வேணுமுன்னு திட்டம் நடக்கு. அவங்க கூட போற ஆண்கள்ள ஒருத்தன் இந்தக் கோயில் தேவதாசி ஒருத்தயின் மகன். மற்றவன் பேரம்பேச வந்தவன். அவனை நல்லா ஞாபகம்

வச்சிகிட்டு அங்க போயி பார்க்கணும் என்று கிசுகிசுத்தாள் பொன்னம்மாள்.

நாம் நாளையே போறோம் நமக்கு எல்லா நாளும் நல்ல நாள் தான் என்றார் ஏமி. வந்த வேலை தோல்வியின்றி முதல் நாளே சுபமாக முடிய, கோயில் வரை நடந்து சென்று அடுத்த தெருவிற்கு செல்லும் வேறொரு வழியே வெளியேறினர்.

அந்தக் கோவிலில் இருந்து சில அடித் தொலைவில் ஒரு வரிசைக்கு ஏழெட்டுவீடுகள் கிட்டத்தட்ட ஒரே வடிவில் எதிரெதிரே இருந்தன. நடுவில் ஒரு தெருப் போன்ற இடைவெளியும் அகலமாக இருந்தது. வீட்டு வாசல்களில் அழகாக போடப்பட்டிருந்த கோலங்களை ஓவியங்கள் வரையப்பட்டிருப்பதாக கருதினார் ஏமி. அவர்கள் அந்தத் தெருவிற்குள் செல்ல வேண்டியது இல்லை. அதிலிருந்து விலகி வேறொரு குறுக்குச் சந்து வழியே செல்ல தேவாய் முன் நடக்க மூவரும் பின்னால் நடந்தனர். கொஞ்சம் நில்லுங்கள், நாம் அதோ அந்தத் தெரு வழியே சென்று மெயின் வழியை அடைவோமே என்றார் ஏமி, அந்தப் புதுமையான தெருவைப் பார்த்தபடி அங்கேயே நின்றும் விட்டார். எந்த வழியில் பயணித்தாலும் பிரதானமான வழிக்குக் கொண்டு வந்து சேர்த்துவிடும் என்று எண்ணினார் அவர்.

இல்லையில்லை அங்க போக வேண்டாம். அது கைக்காட்டித் தெரு அங்க எல்லோரும் போக மாட்டாவ….நாமளும் போவக்கூடாது, என் பின்னால் வாங்க என்றார் மெதுவான குரலில், தேவாயி.

அது என்ன கைக்காட்டித் தெரு? திருதிருவென அந்தத் தெருவை மீண்டும் நோட்டமிட்டபடியே கேட்டார் ஏமி.

அதும்மா… அது தேவதாசிகள் தங்கி வாழும் வீடுகள். அதோ பாருங்கள் வாசலில் நின்று கொண்டிருக்கும் ஒரு பெண்ணை.

ஆம் ..மிகவும் அழகான பெண்.

ஆமா இவுங்க எல்லோருமே அழகாக தான் இருப்பாங்க. அவர்கள் தான் இந்தக் கோயிலுக்கு இறைப் பணி செய்பவர்களாகவும் இருப்பாங்க. அதே நேரம் தங்கள் பிழைப்பிற்காக இவர்கள் மாலை நேரம் இப்படி அழகாக அலங்காரம் செய்து கொண்டு இந்தப் பக்கமா வரும் ஆண்களை கைநீட்டி கூப்பிடுவார்கள். விரும்பும் ஆண்கள் அவர்களோடு சென்று இரவை கழித்துக் கொள்வார்கள். எனவே இந்தத் தெருவுக்கு பெயரே கைக்காட்டி தெருதான். அந்தப் பக்கம் வேற எந்த தேவைக்காகவும் போக மாட்டாங்க. அதிலும் பெண்கள் போகவே மாட்டாங்க.

அதுசரி, அதென்ன. ..பெண்கள் வீட்டு வாசல்படி தாண்டினாலே தவறு என்று கூறும் நாட்டில் இந்தப் பெண்களுக்கு மட்டும் இவ்வளவு சுதந்திரம்…?அதுவும் புனிதம் கற்பிக்கும் கோயிலுக்கு அருகிலேயே இப்படியொரு வித்தியாசமான போக்கு? மனம் தர்க்கம் செய்ய குழப்பத்தை கோபத்தால் கக்கினார் ஏமி.



எந்த ஆணுடனும் பொதுவாக வாழ இந்தப் பெண்களுக்கு முழு உரிமை உண்டு. அத்தோடு அவள் புனிதமானவள் என்பதை அங்கீகரிக்கும் வகையில் கோவில் பணிகளிலும் முதலிடம்…! தங்களது தேவைக்காக எப்படியும் கலாச்சாரத்தை வடிவமைப்பதில் சமூகத்தை ஏய்ப்பவர்கள் கில்லாடிகள் தான்…பொருமிக்கொண்டார்.

வேறென்ன செய்ய!?

ஆமாம்மா… குடும்ப பெண்கள் என்ற பெயரில் வாழும் அப்பாவிப் பெண்கள் இயல்பான உணர்ச்சிப் பெருக்கால் இத்தகைய தவறு இழைக்க நேர்ந்தால்கூட அவள் மொட்டையடிக்கப்பட்டு கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதையில் ஏற்றி தெருத்தெருவாக அழைத்துச் செல்லப்படுவாள்… பிறகு அவள் உயிரோடு இருப்பதும் ஒன்றுதான் இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான் என்றாள் அருளாயி.

அப்படி நடந்திருக்கிறதா அருளாயி…? தேவாயி முன்னடக்க பின் தொடர்ந்தபடியே கேட்டார் ஏமி. ஆமாம்…. எங்கள் குடும்பத்திலும் என் தாய்வழி உறவில் ஒரு அத்தை பதினேழு வயதில் கணவனை சாவுக்கு கொடுத்து பத்துவருடம் ஆண்முகம் பார்க்காமலே வீட்டிற்குள் அடைபட்டுக் கிடந்தாள்.

வீட்டில் சமையல் கட்டு தான் அவள் உலகம். அந்த வீட்டில் எல்லோருக்கும் வேலைக்காரி அவள்தான். வீட்டில் நல்லது கெட்டது எதற்கும் அவளை சேர்க்க மாட்டாங்க. வேதனைகளையே முகத்தில் சுமந்தபடி நடைப்பிணமாக அலைவாள். அவள் கணவனின் இரண்டாவது தம்பிக்கு கல்யாண ஏற்பாடு நடந்து கொண்டிருந்தப்ப தான் எதிர்பாராத அந்த விசயம் நடந்து போச்சு.

என்னது….?

வழித்தடத்திற்கு வந்து சேர்ந்தனர் அனைவரும். இருட்டில் இன்னும் மூன்று மைல்களை கடக்க வேண்டும் டோனாவூருக்கு….

**தொடர்ந்தாள் அருளாயி…!**



# மாற்று சமய நம்பிக்கையுள்ள மக்களுடன் நமது உறவு...

நெல்லை ஜெஸி மணாளன்,
கோயம்புத்தூர்

நமது இந்தியா, பாரம்பரியமிக்க கலாச்சாரம், பண்பாடு என பல்வேறு சமயங்கள், நம்பிக்கை கொண்ட மக்கள் உள்ள, வேற்றுமையில் ஒற்றுமை நிறைந்த, அறிவில் சிறந்த மக்கள் கொண்ட நாடு. அதனை மேலும் செறிவூட்ட, கிறிஸ்தவர்களாகிய நமது பங்கு மிகவும் முக்கியமானதாகும். அதனை தெளிவாக புரிந்து கொள்ள, நல்ல ஒரு முன்மாதிரியாக நமது உறவுகளை அனைவரிடமும் மேம்படுத்த சிந்திக்க அழைப்பு விடுக்கிறது இந்தக் கட்டுரை.

நமது வரலாற்றில், கிறிஸ்தவ மிஷனரிகள் (அருட்பணியாளர்கள்) மிகவும் அருமையாக, உண்மையாக, பல்சமய மக்களோடு இணைந்து செயல்பட்டுள்ளது கண்கூடு. எடுத்துக்காட்டாக, பல மிஷனரிகளைக் குறிப்பிடலாம். சுவார்ட்ஸ், ஜி. யூ. போப், ரேனியஸ், பேரன் புரூக், கால்டுவெல், பென்னி குக், வில்லியம் கேரி, சீகன்பால்க், ஸ்டான்லி ஜோன்ஸ், வேதநாயகம் சாஸ்திரியார், மற்றும் ஆயர்கள், பேராயர்கள், அன்னை தெரசா, அருட்தந்தைகள், அருட்சகோதரிகள் போன்றோர் அவர்கள் காலத்தில் இருந்த மாற்று நம்பிக்கை கொண்ட தலைவர்கள் மற்றும் ஆளுமைகள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளோடு, நல்ல நட்புறவுடன் செயல்பட்டார்கள். அதற்கு எடுத்துக்காட்டாக, தஞ்சாவூர் மகாராஜா, சென்னை மாகாணத்தின் அதிகாரிகள், ஜவஹர்லால் நேரு, இராஜா ராம் மோகன் ராய், மகாத்மா காந்தி, ஜோதிபாசு, அப்துல் கலாம், என்று பலரையும், குறிப்பிடலாம்.

இன்று நமது சராசரி வாழ்க்கையில், இது போன்ற நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் சிறு சிறு நிகழ்வுகளாக நாம் மாற்று நம்பிக்கை நண்பர்கள், உறவினர்கள் நடத்தும் திருமணம் உள்ளிட்ட சிறப்பு விழாக்களில் கலந்து கொள்கிறோமோ? பிற சமயத் திருவிழாக்கூடுகைகளை எவ்விதம் அணுகுகிறோம்? பிற சமய மக்களின் ஆலயங்களின் உள்ளே போகலாமா? அலைகளைப் பார்க்கும் போது நமது மனதில் ஏற்படும் மனநிலை என்ன? கிறிஸ்தவர்கள், சமயப்பாகுபாடு பார்க்காமல், அன்புடன் நடந்து கொள்கிறோமோ? பாசாங்கு இல்லாமல் பழகுகிறோமா? இவைகள் போன்ற கேள்விகளையும், அதற்கான பதில்களையும் நாம் ஆராய்ந்தாக வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில், சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, பரமக்குடி டிஇஎல்சி (லூத்தரன் திருச்சபை) ஆலயத்தில் கேட்ட சாட்சி ஒன்று ஞாபகத்தில் வருகிறது. அன்று செய்தி கொடுத்தவர் பாஸ்டர். டேனியல் மணிகண்டன், தமிழ் நாட்டில் சௌராட்டிர மொழி பேசும், வெகு சொற்பமான மக்களினத்தில் இருந்து இரட்சிக்கப்பட்டு இப்போது அவர்களுக்காக

மதுரையில் ஒரு திருச்சபையும் நடத்தி வருகிறார். அவரது இரட்சிப்பின் அனுபவம், எனது நினைவில் உள்ளதை மாத்திரம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். "வாழ்வின் கேள்விகளுக்கு விடை கிடைக்காமல், ஒவ்வொரு கோவிலாக சென்று கடைசியில், விரதம் இருந்து, பச்சைநிற ஆடையணிந்து, நடந்தே பழனி சென்று, மேலே மலை உச்சியில் அதாவது அவர் பழனி மலை முருகன் கோவில் சந்நிதானத்தில், வழிபட்டுக் கொண்டிருந்த போது, இயேசு கிறிஸ்து அவரோடு பேசி, அதன் மூலம் ஏற்றுக் கொண்டதாகவும், இன்று சௌராட்டிர மொழி பேசும் மக்களுக்கு முதல் திருச்சபை துவங்கி, நடத்தி, அந்த எங்கள் மக்களினத்தை மன்னவன் இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வரும் பெரிய திருப்பணியை கடவுள் தம்மிடம் தந்துள்ளதாகவும் சொன்னது" மறக்க முடியாத சாட்சிகளுள் ஒன்று.

அருட்பணியாளர் பவுல், அத்தேனே, அதாங்க ஏதேன்ஸ் பட்டணத்தில் உள்ள விக்கிரகங்கள் நிறைந்த இடம் முழுவதும் சுற்றிப்பார்த்து, அந்தச் சூழலைப் பயன்படுத்தி, மார்ஸ் மேடையில் நின்று, எவ்வாறு இயேசு கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்தார் என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் கிறிஸ்தவர்களாகிய நாம் மாற்று நம்பிக்கை கொண்ட நண்பர்கள், உறவினர்கள் திருமணம் மற்றும் வைபவங்களை எவ்வளவு எளிதாக, அல்லது தவறான புரிதலுடன் வேண்டுமென்றே புறக்கணித்து விடுகிறோம், நற்செய்தி அறிவிக்கும், பிற சமய மக்களின் முறைமைகளைத் தெரிந்து கொள்ளும் ஏராளமான நல்ல வாய்ப்புகளை புறந்தள்ளி விடுகிறோம் என்பதை உணர வேண்டும்.

கடந்த சில வருடங்களுக்கு முன், ஆந்திரப் பிரதேச முதல்வரைப் பற்றிய பதிவில், ஒரு கிறிஸ்தவராக அறியப்படும் முதல்வர், திருப்பதி கோவில் தேவஸ்தானம் உள்ளிட்ட இடங்களுக்கு எப்படி போகலாம் என்பதாக பொதுவெளியில், சமூக ஊடகங்களில் குறை சொல்லி பொருமினார் எம் நண்பர் ஒருவர். அவர் மட்டுமல்ல. இன்னும் பலரும் தான். ஆந்திர முதல்வரைப் பற்றி மட்டுமல்ல இன்னும் பலரையும் பற்றிப் பேசுவது நம்மில் பலரது வழக்கம் தான்.

ஆகவே, இந்த உலகத்தில், அதுவும் கிறிஸ்தவர்கள் மத்தியில் இப்போது உள்ள பொதுவான பிரச்சினைகளில் ஒன்று குற்றம் கண்டுபிடித்தல் அல்லது குறை காணுதல் என்பதாகும். யாம் சொல்ல விரும்புவது யாதெனில், தேவனே ஒருவரை நியாயம் தீர்க்கிறவர். என்ன சூழ்நிலையில் ஒருவர் ஒரு இடத்தில் இருக்கிறார் என்பதை அடுத்தவர் அறிந்து கொள்ள முடியாது. இதற்கு வேதத்தில் இருந்து ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். சீரியப் படைத்தளபதி நாகமான், குஷ்டரோகம் சுத்தமான பிறகு எலிசா தீர்க்கதரிசியிடம், சொன்ன சேதி கீழே வசனங்களாக:

ஒரு காரியத்தையே கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக; என் ஆண்டவன் பணிந்துகொள்ள ரிம்மோன் கோவிலுக்குள் பிரவேசிக்கும்போது, நான் அவருக்குக் கைலாகு கொடுத்து ரிம்மோன் கோவிலிலே பணிய வேண்டியதாகும்; இப்படி ரிம்மோன் கோவிலில் நான் பணிய வேண்டிய இந்தக் காரியத்தைக் கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக என்றான். அதற்கு அவன்: சமாதானத்தோடே போ என்றான். (1 இராஜாக்கள் 5:18-19)

பனை மரத்தின் கீழ் இருந்து குடிப்பதெல்லாம் கள்ளென்று நினைத்து விட வேண்டாம். பதனி குடிப்பவர்களும் உண்டு. எல்லாரது செயல்களுக்கும் அர்த்தம் கற்பித்தல், நியாயம் தீர்த்தல் நமது பணியாக இருக்க வேண்டாம். எலிசா தீர்க்கதரிசி, தனது வார்த்தையின்படி கீழ்ப்படிந்து, யோர்தானில் மூழ்கி குஷ்டரோகம் சுகமான பின்னர், ரிம்மோன் (அம்மன்?) கோவிலுக்குப் போகிறேன் என்று சொன்ன நாகமானிடம், சமாதானமாகப் போவென்று சொன்னால், நீங்களும் நானும் எவ்வளவு முதிர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும்? சிந்திக்க வேண்டும்!!

இந்தக் கட்டுரை மூலம் நாம் புரிந்துகொள்ள வேண்டியது யாதெனில், மாற்று நம்பிக்கையுள்ள மக்கள் யாரையும் புறத்தோற்றம் வைத்தோ அல்லது அவர்களின் சூழல் மற்றும் பின்னணிகளை வைத்து எந்த முன் முடிவுக்கும் வந்து விடாதீர்கள். நியாயம் தீர்க்காதிருங்கள். எல்லோரையும் அன்பு செய்யுங்கள். எல்லோரையும் கடவுளின் குழந்தைகளாகப் பாருங்கள். வாய்ப்பு கிடைக்கும் போது பிறசமய மக்களின் நம்பிக்கைகளை, புரிந்து கொள்ள முயற்சிப்பது தவறல்ல. யாரையும் தனது பிள்ளைகளாக்க கடவுளால் முடியும். எந்தச் சூழ்நிலையில் உள்ள புறவின மக்களையும் தனது மந்தைக்குள் கொண்டு வர கர்த்தரால் இயலும். ஸ்தேவானைக் கொல்ல உடன்பட்ட சவுலையே தனது திருத்தூதுவனாக்க முடியும் எனில், நமது இறைவனது மாட்சிமை, மகத்துவம் எத்தனை உயர்வானது என்று புரிந்து கொள்ள நமக்கும் உயர்ந்த சிந்தனை தேவை. சிந்திக்க வேண்டும். எல்லா மனிதர்களையும் தனது சாயலாகவே கடவுள் படைத்தார். அவர்கள் எல்லோரையும் நிபந்தனை இல்லாமல் அன்பு செய்வதே கிறிஸ்து கற்பித்த பாடமாகும் என்பதை உணரத் துவங்கினால், ஒவ்வொரு கிறிஸ்தவரும் வாழும் நற்சாட்சி ஆகலாம். அதனை நோக்கியே நாம் பயணிப்போம். நன்மைகள் பயக்கும் நமக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும்.




**2023**

**உறுப்பினர்கள்,**
**பேராசிரியர்கள்,**
**எழுத்தாளர்கள்,**
**நாவலாசிரியர்கள்,**
**வாசகர்கள்,**
**சந்தாதாரர்கள்,**
**நன்கொடையாளர்கள்,**
**ஆதரவாளர்கள்,**
**தன்னார்வலர்கள் அனைவருக்கும் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்**


# புத்தக அறிமுகம்

## திருநெல்வேலி திருச்சபையின் தாய்

# கிளாரிந்தா

ஆக்கியோன்

**பேராசிரியர்.அருள்திரு.D.A. கிறிஸ்துதாஸ்**
**B.A.,L.T.,B.D.,M.Th.**




பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் (1912- 1990) அவர்கள் தென் இந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்று அழைக்கப்படும், பாளையங்கோட்டையில் பிறந்து வளர்ந்தவர். பள்ளி ஆசிரியர், வேதாகமக் கல்லூரி பேராசிரியர், முதல்வர், அருட்பணியாளர் மற்றும் எழுத்தாளர் என பல துறைகளிலும் ஜொலித்தவர். திருச்சபையின் வரலாறு மற்றும் திருச்சபையின் வெற்றிக்குக் காரணமான தேவ மனிதர்கள் பற்றி நாம் அறிந்து கொள்ள இவர் எழுதிய நூல்கள் ஒரு திறவுகோல் என்றால் அது மிகையாகாது. எளிய மற்றும் வட்டார வழக்கு தமிழில் எவரும் புரிந்து கொள்ளும்படி ஆராய்ச்சி மற்றும் வரலாற்றுப் புத்தகங்களை எழுதுவது இறைவன் இவருக்குக் கொடுத்த வரம். அநேக புத்தகங்களை மட்டுமல்ல, அநேக கிறிஸ்தவ தலைவர்களையும் இவர் தன் திருப்பணி மூலமாக உருவாக்கி இருக்கின்றார்.

பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் (1912-1990) அவர்கள் இயற்றியுள்ள "திருநெல்வேலி திருச்சபையின் தாய் - கிளாரிந்தா" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நூலை நமக்கு தந்துள்ளதற்காக முதற்கண் பராபரனை போற்றுகின்றோம். பேராசிரியர் எழுதியுள்ள வரலாற்று நூல்களில் இந்த நூல் மிக சிறப்பானதாக இருக்கும் என்பதில் எள்ளளவும் நமக்கு சந்தேகம் இல்லை. திருச்சபையின் முதல் வித்தை, மக்களின் மறதிக் குவியலிலிருந்து வெளிக்கொணர்ந்து, அவர்கள் மன அரங்கில் நிலையாக நின்று நிலவுமாறு. அவர் வரலாற்றைத் தமக்கே உரிய வரலாற்று ஆராய்ச்சி ஆதாரங்களுடன் கவிதை நடையில் வரலாற்றை நமக்கு தந்துள்ளார்.

"அநேகரை நீதிக்குட்படுத்தி நட்சத்திரங்களைப் போல் பிரகாசிக்க" இந்நூல் உதவும்.

வெளியீடு
**திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்**

## புத்தகம் கிடைக்குமிடம்

- திருநெல்வேலி திருமண்டல புத்தக நிலையம்
- வரலாற்றுச் சங்க அலுவலகம்


Return Requested:

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401


Tamil Printed Book- For Private Cirulation Only

To


Owned & Published By TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401